உ

# நித்திய வழிபாட்டுத் தோத்திரப் பாடல்கள்

## கொழும்பு திவ்ய ஜீவன சங்கம்

**The Colombo**

**THIVYA JEEVANA SANGAM**

**( The Divine Life Society)**

**" Reform Yourself Through Divine life The Society Will Reform Itself "**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனையின் மகிமை

பகவான் நாமத்தை உண்மையான அன்புடனும் நம்பிக்கையுடனும் ஒன்றுகூடி பிரார்த்தனை செய்யும் போது நமது உள்ளத்தில் தெய்வீக அதிர்வுகள் உண்டாகின்றன. இந்த அதிர்வலைகளால் உள்ளத்தில் ஏற்படும் ஆத்மீக சக்தியானது சாதகம் பண்ணுபவர்களின் இதயத்தைத் தூய்மைப்படுத்தி அவர்களை தெய்வீக பதத்திற்கு இட்டுச் செல்கின்றது. இந்த சக்தி வாய்ந்த அதிர்வலைகள் தொலைவில் உள்ள இடங்களுக்கும் செல்லக்கூடிய சக்தி வாய்ந்தது. இவை மக்கள் அனைவரது மனதிலும் அமைதி, ஒற்றுமை உணர்வு ஆகிய மனஎழுச்சிகளை உருவாக்கும். தூதுவனாகவும் செயலாற்றக்கூடியது. உலகம் முழுவதற்கும் அமைதியையும், சாந்தியையும் கொண்டுவரக்கூடிய இனம்புரியாத சக்தி இறைநாமத்தில் உள்ளது. இறைநாம இசையானது பிரார்த்தனை செய்பவர்களை மட்டுமன்றி கேட்பவர்கள் மனதையும் புனிதமாக இறைஉணர்வில் ஆழ்த்தி பரவசமடையச் செய்கின்றது. கலியுகத்தில் இறைவனை அடைவதற்கு மிக இலகுவான முறையாக உள்ள இந்த இறைநாம இசையை, நாமத்தை ஒன்றுகூடி பிரார்த்தனை செய்து இறைஅருளைப் பெறுவோமாக.

– சுவாமி சிவானந்தா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 01. | கணபதி ஸ்தோத்திரம் | ......... | 11 |
| 02. | மூலமந்திரம் | ......... | 12 |
| 03. | பஞ்சபுராணம் | ......... | 16 |
| 04. | ஸ்ரீ சத்குரு சிவானந்த அஷ்டோத்ர நாமாவளி | ......... | 18 |
| 05. | ஓம் குருஸ் துதி | ........ | 22 |
| 06. | விநாயகர் | ....... | 35 |
| 07. | ஸ்ரீ கணேஷ பஞ்சரத்னம் | ........ | 48 |
| 08. | விநாயகர் அகவல் (ஔவையார்) | ......... | 49 |
| 09. | விநாயகர் அகவல் (நக்கீரர்) | ......... | 52 |
| 10. | விநாயக கவசம் (காசிப முனிவர்) | ......... | 58 |
| 11. | காரிய சித்தி மாலை | ......... | 61 |
| 12. | திருமுறைகள் | | |
| | ❖ 1ந் திருமுறை | ......... | 64 |
| | ❖ 2ந் திருமுறை | ......... | 65 |
| | ❖ 3ந் திருமுறை | ......... | 66 |
| | ❖ 4ந் திருமுறை | ......... | 67 |
| | ❖ 5ந் திருமுறை | ......... | 69 |
| | ❖ 6ந் திருமுறை | ......... | 69 |
| | ❖ 7ந் திருமுறை | ......... | 71 |
| | ❖ 8ந் திருமுறை | ......... | 73 |
| | ❖ 9ந் திருமுறை | ......... | 76 |
| | ❖ 10ந் திருமுறை | ......... | 77 |
| | ❖ 11ந் திருமுறை | ......... | 78 |
| | ❖ 12ந் திருமுறை | ......... | 78 |
| 13. | ஓம் சிவாய ஓம் | ......... | 79 |
| 14. | அம்பலத்தரசே | ......... | 80 |
| 15. | திருஅங்கமாலை | ......... | 85 |
| 16. | கோளறு திருப்பதிகம் | ......... | 87 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. திருக்கோணமலை ......... 91
18. ஸ்ரீ மஹா லிங்காஷ்டகம் ......... 94
19. சிவபுராணம் ......... 96
20. திருப்பள்ளியெழுச்சி ......... 100
21. திருவெம்பாவை ......... 103
22. ஸ்ரீ லலிதா த்ரிசதி ......... 110
23. சக்தி வணக்கம் ......... 116
24. சரஸ்வதி சிந்தனை ......... 132
25. கௌரிக் காப்பு ......... 134
26. சகலகலா வல்லிமாலை ......... 137
27. துக்க நிவாரண அஷ்டகம் ......... 140
28. ராகு கால துர்க்கா அஷ்டகம் ......... 143
29. ரோக நிவாரண அஷ்டகம் ......... 145
30. ஸ்ரீ கருமாரியம்மன் ஸ்தோத்திரம் ......... 147
31. அபிராமி அந்தாதி ......... 151
32. திருக்கடவூர் அபிராமிப்பட்டர் ......... 169
33. முருகன் ......... 179
34. கந்த சஷ்டி கவசம் ......... 192
35. குமாரஸ்தவம் ......... 201
36. பகை கடிதல் ......... 203
37. சண்முக கவசம் ......... 205
38. கந்தரநுபூதி ......... 211
39. மகாவிஷ்ணு ......... 220
40. ஸ்ரீ ராமன் ......... 231
41. அஞ்சனேயர் பாடல்கள் ......... 232
42. ஐயப்பன் பாடல்கள் ......... 241
43. நைவேத்ய மந்திரம் ......... 243
44. ஆரத்தி ......... 243
45. மங்களம் ......... 247



சிவமயம்

# அணிந்துரை

இறைநாம சங்கீர்த்தனமே இவ்வுலகில் எமக்கு மிகச்சிறந்த இலகுவான, இறைவனை உணரச் செய்யக்கூடிய சாதனா முறையாகும். சஞ்சலப்படுகின்ற மனதிற்கு சாந்தியும், இடரினும், தளரினும், நோய் தொடரினும், முன்னை வினை மூண்டுவரினும் எமக்கு உறுதுணையாய் இருந்து, அவற்றைப் பாறும் வண்ணம் செய்வது இறைநாம ஜெபமே.

அத்தகைய இறைநாமத்தை உள்ளம் உள்கி உகந்து தேனாய், இன்னமுதமாய் தித்திக்க, மன்னிய அறிவெலாம் தித்திக்கப் பாட வேண்டும். அப்பாடலே கேட்பவருக்கெலாம் கேடுபடாத் திறமருளும் நவக்கிரகங்களே அநுக்கிரகம் செய்யும். அப்படிப்பட்ட நிறை உணர்வில் இதய பாவனையுடன் பாடப்படவேண்டும்.

பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர். ஆம், என்றும் அழியாத பெருஞ்செல்வம் இறையுணர்வே. அப்படியான பொருள் விளங்க, பாவத்துடன் இலகுவாகப் பாடுதலே அனைவரையும் இணைத்து, இறைவனுடன் பிணைத்து வைக்கும் பாடலாக முடியும். இதுவே நம் அருளாளர்கள் எமக்கு தந்து சென்ற சொத்து. இறைவன் மீது அவர்கள் கொண்ட பித்து. தந்ததே இறைநாம சங்கீர்த்தனமெனும் சத்து. அதுவே சத்சித் ஆனந்தம் என்கிற உன்னத நிலைக்கு எம்மை உயர்த்துகிறது.

நினைந்து, நினைந்து, உணர்ந்து, உணர்ந்து, அன்பே நெகிழ்ந்து, நெகிழ்ந்து, ஊற்றெழும் கண்ணீரதனால் உடம்பு நனைந்து, நனைந்து ஆற்றகில்லேன் அடியேன் அரசே! என்று பக்தி பாவத்துடன் பலகாலும் பாடினால் தெய்வமே தொண்டனாகி - தொண்டனைத் தெய்வமாக்குகின்ற என்றும் அழியாப் பேரின்பநிலைக்கு எமையுயர்த்தும். அப்படிப்பட்ட இறைநாம,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைஞான சங்கீர்த்தனமே நம்முள்ளும், நாட்டினிலும் அமைதியைக் கொண்டு வரும்.

அத்தகைய அருட்பாடல்களை இசையோடு பாடி, அன்பர்களையும் பாடவைக்கும் பணியில் திவ்விய ஜீவனசங்கத்தின் மூலமாக, குருதேவர்சுவாமி சிவானந்தமகரிஷியின் அருளாசியினாலும், இறைவனின் அருட்திறத்தினாலும் செய்துவந்தேன். அப்படிப்பட்ட பாடல்களுடன் மேலும் தம் அனுபவத்தையும் சேர்த்து, கொழும்பு திவ்விய ஜீவன சங்கத்தினர் பஜனைப் புத்தகம் ஒன்றை வெளியிடுவது பெருமகிழ்ச்சியைத் தருகிறது. அத்துடன் எனது நீண்டநாள் அன்பன், பண்பன் திரு.வே.தம்பிராசா அவர்களின் பெருமுயற்சியே இந்தப் புனித கைங்கரியமாகும்.

பல்லாண்டுகளாக வானொலியிலும், ஆலயங்களிலும், அரங்குகளிலும், பல அருளாளர்களின் முன்னிலையிலும் ஒலித்த பாடல்கள் இவையாகும் அனைத்துமே சுவையாகும். அருட் பொற்குவையாகும்.

பண்ணின் இசையாகி நின்றானை, பாவிப்பார் பாவம் அறுப்பானை, சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமாகிச் சிறக்க ஒவ்வொருவரும் இந்நூலைப் பெற்றுப் பயனடையுமாறு குருதேவரின் அருளாசி வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

***அன்பே சிவம் - அரன் நாமமே தவம்.***

| | |
|---|---|
| 14, கோபால் லேன், | என்றும் அன்புடன் |
| K.K.S. றோட், | பண்ணிசைப் புலவர் |
| யாழ்ப்பாணம். | வேலுப்பிள்ளை சிவஞானம். |
| *18.07.2008.* | |



## அன்னையின் ஆசிகள்

யுகங்கள் தோறும் இறைவனை அடையும் வழி வேறுவேறாய் அமைந்தன. கிருத யுகத்திலே ஞானத்தினால் முத்தி. திரேதாயுகத்திலே தானத்தினால் முத்தி. துவாபரயுகத்திலே யாகத்தினால் முத்தி. இந்தக் கலியுகத்திலே முத்தியடையும் வழி பக்தி ஒன்றே.

'பக்தி செய்து கொண்டிருந்தால் முத்தி பெறலாமே' என்பது கோபாலகிருஷ்ண பாரதியாரின் அருள்வாக்கு இறைவன் பக்தி செய்வோரின் நெஞ்சில் இடம்பிடிக்கிறான்.

'பக்தி வலையில் படுவோன்' காண்க. காரைக்காலம்மையாா இறவாத இன்ப அன்பையே ஆண்டவனிடம் வேண்டுதலாக வைக்கின்றார். வீரவாகு தேவர் முருகனிடம் வேண்டும் வரம் என்ன தெரியுமா?

'கோல நீடிய நீதிபதி வாழ்க்கையும் குறியேன்
மேலை இந்திரன் அரசினைக் கனவிலும் வெ∴கேன்
மாலயன் பெறு பதத்தையும்பொருளென மதியேன்
சால நின்பதத்து அன்பையே வேண்டுவன் தமியேன்.'

குமரப் பெருமான் திருவடிகளுக்குப் பதிந்த நெஞ்சத்தையே வரமாகக் கேட்கின்றார்.

இறைவன் நாம் அளிக்கும் பூமாலைகளைவிட என்றும் வாடாத பாமாலைகளையே விரும்புகின்றார். 'சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும் வாயால்' நம்பியாரூரரின் தமிழ் மணக்கும் பாடல்களையே இறைவன் விரும்பி ஏற்கிறான்.

கலியுகத்தில் இறைவனை அடையும் எளிய மார்க்கம் நாம சங்கீர்த்தனமே. அனைவரும் ஒரு மனதாய் அழைக்கும் உண்மைக் குரலிற்கு இறைவன் ஓடோடி வருவான். வேண்டும் பரிசு தருவான்.

**நலமே தழைக!**

அன்புடன்
கலாபூஷணம்
வசந்தா வைத்தியநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## ஆசியுரை

உள்ளத்தால் உயர்ந்து எண்ணத்தால் உயர்ந்தவர்களே பெரியோர்கள், சான்றோர்களாவர். இவர்களிலும் பார்க்க மேலான வர்களே சுவாமிகளெனப் போற்றல் பெறும். இமயஜோதியாக விளங்கிய சிவானந்த சுவாமிகள் இளவயதிலே கல்வி, கேள்விகளில் வல்லவராகி மருத்துவக்கல்வி பெற்று உயர்ந்த மருத்துவ சேவையை ஆற்றியவர்.

ஆன்ம ஈடேற்றம் உள்ளத்தில் உட்புக தன்னை மறந்தார். தன் வேலையைத் துறந்தார். உலகம் போற்றும் சுவாமியாக மக்களால் போற்றப் பெற்றார். இமயஜோதியாக விளங்கிய சிவானந்த சுவாமிகள் இன்று உலகம் போற்றும் சுவாமிகளாக மட்டுமல்ல எல்லா சுவாமிகளுக்கும் முன்மாதிரியான செயற்பாட்டை உருவாக்கினார். இச்சங்கமே சற்சங்கமாகும். சற்சங்கமே இன்று திவ்விய ஜீவன சங்கமாக மாறியது.

இன்று உலகில் பல பகுதிகளிலும் இச்சங்கங்கள் வளர்ச்சி பெற்று வருகின்றன. கொழும்பு மாநகரிலும் இச்சங்கம் அளப்பரிய சேவைகள் ஆற்றி வருவதோடு சமய சம்பந்தமான செயற்பாடுகள் யாவற்றிலும் அக்கறையும் ஆர்வமும் காட்டி வருவது போற்றற்குரிய சிறப்பாகும். ஆகவே இமயஜோதி ஏற்றிவைத்த இச்சங்கம் வளம் பல பெற்று நலன் பெற உயர்ந்து அவனிமிசை வான்போல் உயர்ந்து சிறப்புற என் ஆசிகளை நல்கி வாழ்த்துகிறேன்.

*திருமுருக கிருபானந்த வாரியார்*

"வாரியார் இல்லம்"
தொல்புரம் கிழக்கு
சுழிபுரம்
13.09.2009

பிரதம சீடன்
கலாபூஷணம், வாரியார்,
அடிப்பொடி, சுழிபுரம்
சி. சண்முகமூர்த்தி.



உ

சிவமயம்

கொழும்புக்கிளை திவ்வியஜீவன சங்கம்
வையத்துள் வாழ்வாங்கு நிலைத்து
வான்போல் உயர்ந்திட வாழ்த்திய

## வாழ்த்துப்பா.

கொழும்புநல் நகரினிலே கொலுவுடன் திகழ்கின்ற
விழுமியநற் செயற்பாட்டை விரும்பியே செய்கின்ற
சூழும்நல் லடியார்க்கும் சேவை பல புரிகின்ற
பெருமையுறு திவ்வியநற் ஜீவன சங்கமே!

எழுமையுடன் வாழ்ந்த எம் சிவானந்த முனிபுங்கர்
ஏற்றிய நற் சங்கமே என்றென்றும் நின் செயல்கள்
ஏழேழு வுலகங்கள் ஏற்றவும் போற்றவும்
எழில்பெற்று நிலைபெற்று இகமதிலே வாழியவே!

*திருமுருக கிருபானந்த வாரியார்*

"வாரியார் இல்லம்"
தொல்புரம் கிழக்கு
சுழிபுரம்
13.09.2009

பிரதம சீடன்
கலாபூஷணம், வாரியார்,
அடிப்பொடி, சுழிபுரம்
சி. சண்முகமூர்த்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தலைவருரை

'என்னை எனக் கறிவித்தான் எங்கள் குரு நாதன்
இணையடி என்தலை வைத்தான் எங்கள் குரு நாதன்'

'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி'

'இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'

'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர்
சிவபுரத்தினுள்'

'ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி
பாம்பிரண்டுமுடனே ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்குமிகவே'

'இரவும் பகலும் இதயத் துணையே
பரவும் அறிவும் பணியும் தருவாய்'

'நாயேனையும் ஒரு பொருளாக நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய் நின்னை
உள்ளவண்ணம் பேயேன் அறியும் அறிவு தந்தாய்
என்ன பேறு பெற்றேன் தாயே'

பக்திப்பரவச அருள் வெள்ளத்தில் ஏற்பட்ட உள்ளத்து உணர்வுகளின் உண்மைகள், யதார்த்தங்கள், தாம் அனுபவ பூர்வமாக அனுபவித்த சந்நிதி அனுபவங்களைச் சொற்களில் வடித்து பாசுரங்களாகப் பாடிப் பேரானந்தம் அடைந்தவர்கள் அருளாளர்கள். எமது பேரதிர்ஷ்டம் நமது காலத்தில் மிக இலகுவாக அவற்றை நாமும் அறிந்து அனுபவித்து ஓதித் திருவருள் பெறமுடிவது இறைவன் கருணை யெனக் கூறுவது பொருத்தமாக அமையும்.

முனிவர்களும், ரிஷிகளும் வேதமந்திரங்களை உலகத்திற்குத் தருவதற்காக வனங்கள், தபோவனங்கள், காடுகள், மலைகள் நதியோரம், ஆற்றோரம் என்று கடுந்தவம் புரிந்தார்கள். நாயன்மார்கள், யோகிகள், ஞானிகள், பரமகம்சர்கள், அருளாளர்கள் ஆகியோர்



ஆலயதரிசனம், குருகுலம், தீர்த்த யாத்திரை போன்றவற்றால் அருளாளர்கள் ஆகி ஞானவெள்ளத்தை நமக்குக் கொட்டித் தந்திருக்கிறார்கள்.

பக்தி வைராக்கிய உணர்வுகளின் வெளிப்பாடாக எத்தனை பாசுரங்களை, பதிகங்களை ஆக்கங்களாக எமக்குத் தந்திருக்கிறார்கள். தமது அனுபவ ஞானத்தால் பக்திமார்க்கத்தின் சிறப்பை ஆணித்தரமாக ஆதரித்தார்கள். அதனாலே தான் கலியுகத்தில் திருவருளைப் பெறுவதற்கு பக்திமார்க்கமே சிறந்த மார்க்கமென்பது சான்றோரின் அனுபவ முடிவாக அமைந்துள்ளது. பஜனை, நாம சங்கீர்த்தனம், கூட்டுப் பிரார்த்தனை, தலயாத்திரை, ஆலய வழிபாடு, சத்சங்கம் மூலம் பக்தியை இலகுவழியில் சென்றடையலாம் என்பதை உணர்ந்து தெரிந்து கொள்வதே பெரிய ஞானம்.

வாழ்க்கையில் வளமும் நலமும் பெறுவதற்கு அன்பும் அருளும் அவசியமாகின்றது. ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் மனிதநேயம், ஜீவகாருண்யம் தோன்ற வேண்டும். நிறைந்த மனதுடன் அன்பு பரிணமிக்க வேண்டும்.

டாக்டர் குப்புசாமி, சுவாமி சிவானந்தர் ஆவதற்கு முன்னிருந்த மனஇயல்புகளும், இறைநாட்டமும் அவரை உயர்ந்த உன்னத நிலைக்கு இட்டுச்சென்றது. சுருதிப்பெட்டி வாசித்து இனிய பாடல்களைப் பாடியும், பஜனை செய்தும் ஆர்வம் மேலிட்டு மெய்ஞானத்தில் தன்னை லயிக்க வைத்தார். சுவாமி சிவானந்தரின் ஞானவெள்ளம் எத்தனையோ பாமர மக்களுக்கு முன் உதாரணமாக அமைந்து நம்முள்ளே உன்னத வழிகாட்டியாக விளங்குகின்றது. இன்றும் எங்கும் சத்சங்கங்களில் பஜனைகள் இடம்பெறுவது மனித சமுதாயத்துக்கு பக்திமார்க்கத்தின் முழு முயற்சியாக இடம்பெறுகின்றது. ஆத்மீக அனுபவம்பெற அனுபூதிமான்களின் உணர்வுகளை உள்வாங்கிக் கொள்வதே பக்தியோகத்தின் நோக்க கருவாக இருக்கவேண்டும்.

அன்பும் அருளும் பக்தியின் லட்சணம். நெறியான வாழ்விற்கு வழித்துணையாக வருவது பக்தியோகம் இதை எப்படிப் பெறுவது? எங்கே பெறுவது? யார்மூலம் பெறுவது? என்பதைத் தெரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதற்கு அலைவது தேவையில்லை அதற்காக மிகவும் உன்னத நிலையில் இருந்து வழிகாட்டிய அருளாளர்கள் சிறந்த அருட்பாக்களை எம்முன்னே படையல் செய்துள்ளார்கள். அவர்கள் அனுபவித்த அந்த உணர்வுகளை உள்வாங்கிக் கொள்வதற்கு நாம் மனம் திரும்பிவிட்டால் அதுவே பெரும் ஞான அனுபவங்களைப் பெறுவதற்கு நுளை வாயிலாக அமைந்துவிடும். கருத்தாளம் மிக்க பாசுரங்களையும், பக்தி கீதங்களையும் கேட்கும் போது மனநிறைவும் பேரானந்தமும் உண்டாகிறது.

அருளாளர்கள் அனுபவித்த பக்திஉணர்வு பாசுரங்களாக வெளிப்பட்ட போது ராகம், தாளலயம் எல்லாம் எத்தனை அற்புதமாக அமைந்துள்ளது என்பதை அவற்றை ஓதி பாராயணம் செய்யும் போது உணர்ந்து அனுபவிக்க முடிகிறது.

கூட்டுப் பிரார்த்தனை செய்யும் போது தெய்வ அனுக்கிரகமும் அருளாளர்களின் ஆசிகளும் கிடைப்பது அதிசயமான மன அமைதியையும் பக்தி ஞானம் பெறும் ஆர்வத்தையும் ஏற்படுத்துவதாக அமைந்துவிடும். நாம் பிறப்பின் பயனை அடைந்தவர்களாகப் புண்ணியம் பெறுவோம்.

அந்த முயற்சிக்கு உதவியாக இந்தப் பிரார்த்தனை மலர் அமைய வேண்டும் என்ற ஆர்வமும் மேலோங்கியது. சிவானந்த ஜோதியின் திருவடிகளுக்கு சமர்ப்பித்துப் பணிவதும் இப்பணியின் பயனாக அமையவேண்டும். அவரின் சீரிய பணியின் பயனாக கூட்டுப் பிரார்த்தனை முதன்மைபெற்று இருந்தது. பஜனைகளில் நம் மக்கள் கலந்து பேரானந்தம் பெறும் வாய்ப்பை அடைய வேண்டும் என்பது காலத்தின் தேவைகளையும் கடந்து இருப்பதால் வாரந்தோறும் மகரிஷியின் நினைவுடன் பஜனை நடத்தி வருகிறோம். அதில் மக்கள் கலந்துகொண்டு பயன்பெறவேண்டும். அதற்கு வேண்டிய மனஎழுச்சியை இந்தமலர் தரவேண்டுமென்று பிரார்த்தித்து நிறை மனதுடன் சமர்ப்பிக்கிறேன். நிறைவான வளம்பெற எல்லோரும் நலம்பெற வாழ்த்துகிறேன்.

37/1, 4/2, ஹம்டன் லேன்,
கொழும்பு - 06.
*Tel :* 2365761

வே. தியாகராஜா (தலைவர்)
திவ்விய ஜீவன சங்கம்



உ

சிவமயம்

## முகவுரை

சதா அலைந்து திரியும் மனத்தை அடக்கி வைப்பதுதான் யோகம் எனப்படும். அமைதியாக அடங்கிய மனதில்தான் ஆன்மவிளக்கம் உண்டாகும். அப்படி எமது மனத்தினை அடக்க எத்தனையோ மார்க்கங்கள் உள்ளன. அவற்றுள் மிகமிகச் சிறந்ததும், எளிமையானதுமாக உள்ளது தெய்வத்தைப் பிரார்த்தனை செய்வது. இறையருள் வெள்ளத்தில் திளைத்து யோகசித்தி எய்திய மகான்கள், சமயகுரவர்கள் அருளிய பக்திப் பாடல்களை நாம் தினசரி உள்ளம் உருக பாராயணம் பண்ணுவதால் மனது தூய்மையடைந்து அகத்திலிருந்து ஆன்மவிளக்கம் ஒளிரும்.

ஆன்மநலம் பெற அருளிய நல்ல சாதனங்களில் பக்திப் பாடல்களை உள்ளம் உருகப்பாடும் பணிக்கு தனியிடம் தந்துள்ளார். இமய ஜோதியாக விளங்கிய சுவாமி சிவானந்தர்.

கொழும்பு திவ்விய ஜீவன சங்கத்தினரால் தொகுத்து வழங்கியுள்ள இந்தத் தோத்திரங்கள் தினசரி ஓதி ஆன்மநலம் பெற அனைவருக்கும் உதவும் என்பது உறுதி. இங்கே தொகுக்கப்பட்டுள்ள பாடல்கள் கேட்போர் மனதை ஈர்த்துப் பரவசமடையச் செய்பவையாகவும், இலகுவில் பொருள் புரிந்து கொள்ளக்கூடியவையாகவும், அன்புடனும் தெய்வீக உணர்வுடனும் பாட உகந்தவையாகவும், பஜனை, கூட்டுப் பிரார்த்தனையின் போது பாடுவதற்கும் ஏற்றதாகவும் உள்ளது.

நம்முடைய பலவீனங்களைக் கண்டுபிடித்து மாயையை வெல்ல அனுதினமும் பக்திசிரத்தையோடு பிரார்த்தனை செய்ய வேண்டும். பகவான் முயற்சி செய்பவனுக்கே உதவி செய்வான். உண்மையான பிரார்த்தனை ஒருநாளும் தோல்வியடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி சிவானந்தர் ஒவ்வொருவருடனும் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டார். எல்லோரும் நலமுற்றிருக்க வேண்டுமென அவர் விரும்பினார். தன்னுடைய அன்பையும் சேவையையும் ஒரு தனிப்பட்ட ஸ்தாபனத்துக்குள் அடக்கி விடுவதில்லை. ஒவ்வொரு ஆத்மீக ஸ்தாபனத்துக்கும் அல்லது மக்கள் சேவையில் ஈடுபட்டிருக்கும் நிறுவனத்துக்கும் தனது ஆசியை வழங்கினார். அவர் ஸ்தாபித்த திவ்விய ஜீவன சங்கத்தின் நோக்கம் செல்வம் சேர்ப்பதோ, பெயரும் புகழும் சம்பாதிப்பதோ அல்ல. பல்வேறு கேந்திரங்களில் ஆத்மீக அலைகளை உண்டுபண்ணி உலகுக்கு அமைதியையும் ஒருமைப்பாட்டையும் கொண்டுவருவதற்காகவேயாகும்.

பிரதி ஞாயிறுதோறும் காலை 8மணி முதல் 9.30மணிவரை இறைநாம பஜனையும், கூட்டுப்பிரார்த்தனை சற்சங்கமமும் கீழ்க்கண்ட விலாசத்தில் நடைபெற்று வருகின்றது.

சி.பாஸ்கரன் (கௌரவ பொதுச் செயலாளர்)
கொழும்பு திவ்விய ஜீவசங்கம்

49/20, 17வது ஒழுங்கை, கொலிஜ் வீதி,
கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13.
தொ.பே. 2345660.
*15.10.2009.*



உ
சிவமயம்

# ஓம் ஓம் ஓம்

## கணபதி ஸ்தோத்திரம்

கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி என்றிடக் காலனும் கைதொழும்
கணபதி என்றிடக் கருமம் ஆதலால்
கணபதி என்றிடக் கவலை தீருமே.

கஜானனம் பூத கணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பு பலஸார பக்ஷிதம்
உமா ஸுதம் சோக வினாஷ காரணம்
நமாமி விக்னேஷ்வர பாதபங்கஜம்.

ஓம் வக்ர துண்ட மஹாகாய
ஸுர்ய கோடி - ஸமப்ரப
நிர் விக்னம் குருமே தேவ
ஸர்வ கார்யேஷு ஸர்வதா.

ஓம் ஸ்ரீம் கம் கணபத்யே நமஹ. *(3முறை)*

## கணபதி மூலமந்திரம்

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம்
கம் கணபதயே வர வரத ஸர்வ
ஜனம்மே வசமானய ஸ்வாஹா. *(3முறை)*

ஓம் தற்புருஷாய வித்மஹே
வக்ர துண்டாய தீமஹீ
தன்னோ தந்திப் ப்ரசோதயாத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸுப்ரமண்ய ஸ்தோத்திரம்

ஓம் ஷடானனம் குங்கும ரக்த வர்ணம்
மகா மதிம் திவ்ய - மயுர வாஹனம்
ருத் ரஸ்ய ஸுனும் ஸுரசைன்ய - நாதம்
குஹம் ஸதாஹம் சரணம் ப்ரபத்யே.

ஓம் ஸ்ரீம் சௌம் சம் சரவண பவாய சுப்ரமண்யோம்.
*(3முறை)*

## குரு ஸ்தோத்திரம்

குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு
குருர் தேவோ மஹேஸ் வரஹ
குருர் ஸாக்ஷாத் பர ப்ரஹ்ம
தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ.

ஓம் தஷ்ணா மூர்த்தி ஸமாரம்பாம்
சங்கராச்சார்ய மத்யமாம்
அஸ்மத் ஆச்சார்ய பர்யந்தம்
வந்தே குரு பரம்பராம். *(3முறை)*

ஓம் ஹ்ரீம் சிவானந்த மகரிஷி
ஹம்ஸாய வித்மஹே
பரம ஹம்சாய தீமஹி
தன்னோ ஹம்ஸ ப்ரசோதயாத். *(3முறை)*

## ஸ்ரீ சக்தி மூலமந்திரம்

ஓம் ஐம் ஹ்ரீம் ச்ரீம்
ஐம் கஏஈல ஹ்ரீம்
க்லீம் ஹஸ கஹல ஹ்ரீம்
ஸௌ ஸகல ஹ்ரீம்.



ஓம் ஸர்வமங்கள மாங்கல்யே
சிவே ஸர்வார்த்த ஸாதிகே
சரண்யே த்ரியம்பகே கௌரி
நாராயணி நமோஸ்துதே.

ஓம் தும் துர்க்காயை நமஹ *(3முறை)*
ஓம் ஸ்ரீம் மகாலக்ஷ்மியை நமஹ *(3முறை)*
ஓம் ஐம் சரஸ்வத்யை நமஹ. *(3முறை)*

## ஸ்ரீ காயத்ரீ மந்திரம்

ஓம் பூர் புவஸ்வஹ
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்ஹோ தேவஸ்ய தீமஹி
தியோ யோநஹ ப்ரசோதயாத். *(3முறை)*

## ஸ்ரீ விஷ்ணு ஸ்தோத்திரம்

ஓம் கிருஷ்ணாய வாஸுதேவாய
தேவகி நந்தனாயச
நந்த கோப குமாராய
கோவிந்தாய நமோ நம:

ஓம் நமோ பகவதே வாஸு தேவாய. *(3முறை)*

## ஸ்ரீ விஷ்ணு காயத்ரீ மந்திரம்

ஓம் நாராயணாய வித்மஹே
வாஸு தேவாய தீமஹி
தன்னோ விஷ்ணுப் ப்ரசோதயாத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஞ்சநேய காயத்ரி மந்திரம்

ஓம் தத் புருஷாய வித்மஹே
வாயு புத்ராய தீமஹி
தன்னோ மாருதிப் ப்ரசோதயாத். *(3முறை)*

## ஐயப்ப மந்திரம்

ஓம் ஸ்ரீபூத நாதாய வித்மஹே
பவ சந்தனாய தீமஹி
தந்நோ சாஸ்தா ப்ரசோதயாத். *(3முறை)*

## ஸ்ரீ தர்ம சாஸ்தா மூல மந்திரம்

ஓம் ஸ்ரீ ஹரி ஹர புத்ராய
புத்ர லாபாய
மஹா சாஸ்த்ரே
சத்ரு நாசனாய
மதகஜ வாகனாய
பிரத்யட்ச சூலாயுதாய
வரவரத சர்வஜனமே
வசமான ஸ்வாஹா

## ஸ்ரீ ராம மந்திரம்

ஸ்ரீ ராம ராம ராமேதி ரமே ராமே மனோரமே!
ஸஹஸ்ரநாம தத்துல்யம் ராமநாம வரானனே
ஸ்ரீராமநாம வானன ஓம் நம இதி. *(3முறை)*



## சிவன் ஸ்தோத்திரம்

ஓம் நமஸ்தே அஸ்து பகவன் விச்வேச்வராய
மஹா தேவாய - த்ரியம்பகாய
த்ரிபுராந்தகாய - த்ரிகாலாக்னி காலாய
காலாக்னி ருத்ராய - நீல கண்டாய
ம்ருத்யுஞ்ஜயாய - ஸர்வேச்வராய
ஸதாசிவாய - ஸ்ரீமன் மஹா தேவாயநம:

ஓம் நமோ பகவதே ஸதாசிவாய. *(3முறை)*

## மஹா ம்ருத்யுஞ்ஜய மந்திரம்

ஓம் த்ரயம் பகம் யஜாமஹே
சுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருக மிவ பந்தனாத்
ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்.

ஓம் ஹ்ரீம் நம சிவாய. *(3முறை)*

**பொருள் :**
*ஆக்கல் அளித்தல் அழித்தல் ஆகிய மூன்றும் வல்ல முதல்வா போற்றி புகழ் மணம் வீசத் தகவளிப்போனே! உடலும் உள்ளமும் திடம் பெறச் செய்வோய் பழுத்த வெள்ளரி பற்று விட்டது போல் அழிவினின் றெம்மை அகற்றியே என்றும் அமரத்தன்மை அளிப்பாய் போற்றி.*

*- கவியோகி சுத்தானந்த பாரதியார் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்

*திருச்சிற்றம்பலம்*

## தேவாரம்

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

## திருவாசகம்

பண்சுமந்த பாடற்பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தியியன் மண்டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண் சுமந்து கூலி கொண்டக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன் மேனி பாடுதுங்காணம்மானாய்

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக்கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்கமலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந்தனவே.



## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமை மணவாளனுக்கே
பாரும் விசும்பும் பயிலவல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே லுன்னை யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழிருக்க என்றார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத்தினிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குகவுலகமெல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஓம் ஓம் ஓம்

ஓம் தாயே நமஹ
ஓம் தந்தையே நமஹ
ஓம் குருவே நமஹ
ஓம் ஈஸ்வராய நமஹ.

## ஸ்ரீ சத்குரு சிவானந்த
## அஷ்டோத்ர சதநாமாவளி

ஓம் ஓம்காரரூபாய நம:
ஓம் ஸ்த்குரவே நம:
ஓம் ஸாக்ஷாத்சங்கர ரூபத்ருதே நம:
ஓம் சிவானந்தாய நம:
ஓம் சிவாகாராய நம:
ஓம் சிவாசய நிரூபகாய நம:
ஓம் ஹிருஷீகேச நிவாஸினே நம:
ஓம் வைத்யசாஸ்திர விசாரதாய நம:
ஓம் ஸமதர்சினே நம:
ஓம் தபஸ்வினே நம: 10

ஓம் ப்ரேமரூபாய நம:
ஓம் மஹாமுனயே நம:
ஓம் திவ்யஜீவன தத்வ ஸங்கப்ரதிஷ்டாத்ரே நம:
ஓம் பிரபோதகாய நம:
ஓம் கீதானந்தஸ்வ ரூபிணே நம:
ஓம் பக்திகம்யாய நம:
ஓம் பயாபஹாய நம:
ஓம் ஸர்வ விதே நம:
ஓம் ஸர்வ காய நம:
ஓம் நேத்ரே நம: 20



ஓம் த்ரயீமார்கப்ர தர்சகாய நம:
ஓம் வைராக்யஞான நிரதாய நம:
ஓம் ஸர்வலோகஹிதோத்ஸுகாய நம:
ஓம் பவபயப்ரஸ மநாய நம:
ஓம் ஸமாதிக்ரந்த கல்பகாய நம:
ஓம் குணினே நம:
ஓம் மஹாத்மனே நம:
ஓம் தர்மாத்மனே நம:
ஓம் ஸ்திதப்ரஞ்ஞாய நம:
ஓம் சுபோதயாய நம: 30

ஓம் ஆனந்த ஸாகராய நம:
ஓம் ஸாராய நம:
ஓம் கங்காதீராஸ் ரமஸ்திதாய நம:
ஓம் விஸ்ணுதேவானந்த தத்த பிரம்மஞானப்ரதீபகாய நம:
ஓம் ஸ்ரீப்ரம்மஸுத்ரோ பநிஷதாங்ல பாஷ்யப்ரகல்பகாய நம:
ஓம் விஸ்வானந்த சரணயுக்மஸேவா ஜாதஸுபுத்திமதே நம:
ஓம் மந்த்ரமூர்த்தயே நம:
ஓம் ஜபபராய நம:
ஓம் தந்த்ரஞ்ஞாய நம:
ஓம் பலினே நம: 40

ஓம் உமாரமண பாதயுக்ம ஸததார்ச்சன லாலஸாய நம:
ஓம் பரஸ்மை ஜ்யோதிஷே நம:
ஓம் பரஸ்மை தாம்மே நம:
ஓம் பரமாணவே நம:
ஓம் பரத்பராய நம:
ஓம் சாந்தமூர்த்தயே நம:
ஓம் தயாஸாராய நம:
ஓம் முமுக்ஷுஹ்ருதய ஸ்திதாய நம:
ஓம் ஆனந்தாம்ருதஸந்தோக்த்ரே நம:
ஓம் அப்பய்யகுல தீபகாய நம: 50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸாக்ஷி பூதாய நம:
ஓம் ராஜயோகினே நம:
ஓம் ஸத்யானந்த ஸ்வரூபிணே நம:
ஓம் அஞ்ஞானாமய பேஷஜாய நம:
ஓம் லோகோத்தாரண பண்டிதாய நம:
ஓம் யோகானந்த ரஸாஸ்வாதினே நம:
ஓம் ஸத்விசார ஸமுஜ்வலாய நம:
ஓம் ஆத்மாராமாய நம:
ஓம் ஸ்ரீ குரவே நம:
ஓம் ஸச்சிதானந்த விக்ரஹாய நம: 60

ஓம் ஜீவன் முக்தாய நம:
ஓம் சின்மயாத்மனே நம:
ஓம் நிஸ்த்ரைகுண்யாய நம:
ஓம் யதீஸ்வராய நம:
ஓம் அத்வைதஸார ப்ரகடவேத வேதாந்த தத்வகாய நம:
ஓம் சிதானந்த ஜனா ஹ்லாதந்ருத்ய கீதப்ரவர்த்தகாய நம:
ஓம் நவீன ஜனஸந்த்ராத்ரே நம:
ஓம் ஸ்ரீப்ரம்ம மார்க்கப்ரதர்ஸகாய நம:
ஓம் ப்ராணாயாம பராயணாய நம:
ஓம் நித்யம் வைராக்யம் ஸமுபாஸ்ரிதாய நம: 70

ஓம் ஜிதமாயாய நம:
ஓம் த்யான மக்னாய நம:
ஓம் ஷேத்ர்ஜ்ஞாய நம:
ஓம் ஞான பாஸ்கராய நம:
ஓம் மஹா தேவாதி தேவாய நம:
ஓம் கலிகல்மஷ நாசனாய நம:
ஓம் துஷாரசைல யோகினே நம:
ஓம் கோடிசூர்ய ஸமப்ரபாய நம:
ஓம் முனிவர்யாய நம:
ஓம் ஸத்ய யோனயே நம: 80



ஓம் பரம புருஷாய நம:
ஓம் ப்ரதாப வதே நம:
ஓம் நாமஸங்கீர்த்த னோத்கர்ஷப்ரஸம்ஸினே நம:
ஓம் மஹாத்யுதயே நம:
ஓம் கைலாஸ யாத்ரா ஸம்ப்ராப்த பஹுஸந்துஷ்ட சேதஸே நம:
ஓம் சதுஸ்ஸாதன ஸம்பந்நாய நம:
ஓம் தர்மஸ்தாபன தத்பராய நம:
ஓம் சிவ மூர்த்தியே நம:
ஓம் சிவபராய நம:
ஓம் சிஸ்டேஷ்டாய நம: 90

ஓம் சிவேக்ஷணாய நம:
ஓம் சதுரந்த மேதினீவ்யாப்த ஸுவிசாலயசோதயாய நம:
ஓம் ஸத்ய ஸம்பூர்ணவிஞ்ஞான ஸுதத்வைக ஸுலக்ஷணாய நம:
ஓம் ஸர்வப்ரர்ணிஷு ஸஞ்ஜாதப்ராத்ருபாவாய நம:
ஓம் ஸுவர்சலாய நம:
ஓம் ப்ரணவாய நம:
ஓம் ஸர்வதத்வஞ்ஞாய நம:
ஓம் ஸுஜஞானாம் புதிசந்த்ரமஸே நம:
ஓம் க்ஞான கங்காஸ்ரோதஸ்நான பூதபாபாய நம:
ஓம் ஸுகப்ரதாய நம: 100

ஓம் விஸ்வநாதக்ருபாபாத்ராய நம:
ஓம் சிஷ்ய ஹ் ருத்தாபதஸ்கராய நம:
ஓம் கல்யாண குண ஸம்பூர்ணாய நம:
ஓம் சதாசிவ பராயணாய நம:
ஓம் கல்பனாரஹிதாய நம:
ஓம் வீர்யாய நம:
ஓம் பகவத்கான லோலுபாய நம:
ஓம் ஸ்ரீ ஸத்குரு சிவானந்த ஸ்வாமினே நம: 108

**ஓம் நானாவித மந்திர பரிமளபத்ர**
**புஷ்பாணியாம் ஸமர்ப்பயாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஓம்
# குரு ஸ்துதி

குருர்ப்ரஹ்மா குருர் விஷ்ணு குருர் தேவோ மஹேஸ்வரஹ
குருர் ஸாஷாத் பர ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ

தியானம் மூலம் குரோர் மூர்த்தி பூஜாமூலம் குரோர் பதம்
மந்த்ர மூலம் குரோர் வாக்யம் மோஷமூலம் குரோர்க்ருபா.

தந்தை தாயாவானும் சார்கதியிங் காவானும்
அந்தமிலா இன்பநமக் காவானும் - எந்தமுயிர்
தானாகு வானும் சரணாகுவானும் அருட்
கோனாகுவானும் குரு.

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென்பது குறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரையுணர் வற்றதோர் கோவே.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே. - *திருமந்திரம்*

காயனை அகாயனாக்கிக்
கண்டனை அகண்டனாக்கிப்
பேயனைப் பிரம்மமாக்கிப்
பிறப்பிறப் பிலாமையாக்கி
தாயினும் இனியனாகித்
தகைந்தென்னை அணைத்து ஆண்ட
தூயசற் குருவே உன்னைத்
தொழுந் தொறும் களிக்கின்றேனே.



## என்னை எனக்கறிவித்தான்

என்னை எனக்கறிவித்தான் எங்கள் குருநாதன்
இணையடி என் தலைவைத்தான் எங்கள் குருநாதன்
அன்னை பிதாகுருவானான் எங்கள் குருநாதன்
அவனியெல்லாம் ஆழவைத்தான் எங்கள் குருநாதன்
முன்னை வினை நீக்கிவிட்டான் எங்கள் குருநாதன்
மூவருக்கும் அறிய வொண்ணான் எங்கள் குருநாதன்
நன்மை தீமை அறியாதான் எங்கள் குருநாதன்
நான் தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்.
1

தேகம் நீ யல்ல வென்றான் எங்கள் குருநாதன்
சித்தத்திற் றிகழுகின்றான் எங்கள் குருநாதன்
மோகத்தை முனியென்றான் எங்கள் குருநாதன்
முத்திக்கு வித்த தென்றான் எங்கள் குருநாதன்
வேகத்தைக் கெடுத்தாண்டான் எங்கள் குருநாதன்
விண்ணும் மண்ணுமாகி நின்றான் எங்கள் குருநாதன்
தாகத்தை யாக்கி விட்டான் எங்கள் குருநாதன்
சத்தியத்தை யாக்கிவிட்டான் எங்கள் குருநாதன்.
2

வாசியோகந் தேரென்றான் எங்கள் குருநாதன்
வகாரநிலை அறியென்றான் எங்கள் குருநாதன்
காசிதேசம் போவென்றான் எங்கள் குருநாதன்
கங்குல்பக லில்லையென்றான் எங்கள் குருநாதன்
நாசிநுனி நோக்கென்றான் எங்கள் குருநாதன்
நடனந்தெ ரியுமென்றான் எங்கள் குருநாதன்
மாசிலோசை கேட்குமென்றான் எங்கள் குருநாதன்
மற்றுப்பற்றை நீக்கென்றான் எங்கள் குருநாதன். 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவழியை அடையென்றான் எங்கள் குரு நாதன்
எல்லாம் விளங்குமென்றான் எங்கள் குரு நாதன்
கருவழியை கடவென்றான் எங்கள் குரு நாதன்
கட்டுப் படும் மனமென்றான் எங்கள் குரு நாதன்
ஒருவரும் அறியாரென்றான் எங்கள் குரு நாதன்
ஓங்கார வழியென்றான் எங்கள் குரு நாதன்
நிருமலனாய் இருவென்றான் எங்கள் குரு நாதன்
நீயே நான் என்று சொன்னான் எங்கள் குரு நாதன். 4

திக்குத் திகாந்தமெல்லாம் எங்கள் குருநாதன்
சித்தத்துள் நிற்கவைத்தான் எங்கள் குருநாதன்
பக்குவமாய்ப் பேணென்றான் எங்கள் குருநாதன்
பார்ப்பதெல்லாம் நீயென்றான் எங்கள் குருநாதன்
அக்குமணி யணியென்றான் எங்கள் குருநாதன்
அஞ்செழுத்தை ஓதென்றான் எங்கள் குருநாதன்
நெக்குநெக் குருகென்றான் எங்கள் குருநாதன்
நித்தியன்நீ யென்றுசொன்னான் எங்கள் குருநாதன். 5

தேடாமல் தேடென்றான் எங்தள் குருநாதன்
சீவன் சிவன் என்றான் எங்கள் குருநாதன்
நாடாமல் நாடென்றான் எங்கள் குருநாதன்
நல்ல வழிதோன்றும் என்றான் எங்கள் குருநாதன்
பாடாமல் பாடென்றான் எங்கள் குருநாதன்
பக்தரினஞ் சேர் என்றான் எங்கள் குருநாதன்
வாடாமல் வழிபடென்றான் எங்கள் குருநாதன்
வையகத்தில் வாழ் என்றான் எங்கள் குருநாதன். 6

தித்திக்கு மொருமொழியால் எங்கள் குருநாதன்
சின்மயத்தைக் காணவைத்தான் எங்கள் குருநாதன்
எதிக்கு மாகிநின்றான் எங்கள் குருநாதன்
எல்லாம்நீ யென்றுரைத்தான் எங்கள் குருநாதன்



வித்தின்றி நாறுசெய்வான் எங்கள் குருநாதன்
விண்ணவரு மறியவொண்ணான் எங்கள் குருநாதன்
தத்துவா தீதனானான் எங்கள் குருநாதன்
சகலசம் பத்துந்தந்தான் எங்கள் குருநாதன். 7

ஆதியந்த மில்லையென்றான் எங்கள் குருநாதன்
அதுவேநீ யென்றுரைத்தான் எங்கள் குருநாதன்
சோதிமய மென்றுசொன்னான் எங்கள் குருநாதன்
சுட்டிறந்து நில்லென்றான் எங்கள் குருநாதன்.
சாதி சமயமில்லான் எங்கள் குருநாதன்
தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்
வாதியருங் காணவொண்ணான் எங்கள் குருநாதன்
வாக்கிறந்த இன்பந்தந்தான் எங்கள் குருநாதன். 8

முச்சந்திக் குப்பையிலே எங்கள் குருநாதன்
முடக்கிக் கிடந்திடென்றான் எங்கள் குருநாதன்
அச்சமொடு கோபமில்லான் எங்கள் குருநாதன்
ஆணவத்தை நீக்கிவிட்டான் எங்கள் குருநாதன்
பச்சைப் புரவியிலே எங்கள் குருநாதன்
பாங்காக ஏறென்றான் எங்கள் குருநாதன்
தச்சன்கட்டா வீட்டினிலே எங்கள் குருநாதன்
தாவுபரி கட்டென்றான் எங்கள் குருநாதன். 9

நாமேநா மென்றுரைத்தான் எங்கள் குருநாதன்
நமக்குக்குறை வில்லையென்றான் எங்கள் குருநாதன்
போமேபோம் வினையென்றான் எங்கள் குருநாதன்
போக்குவர வில்லையென்றான் எங்கள் குருநாதன்
தாமேதா மென்றுரைத்தான் எங்கள் குருநாதன்
சங்கற்ப மில்லையென்றான் எங்கள் குருநாதன்
ஓமென் றுறுதிதந்தான் எங்கள் குருநாதன்
ஊமையெழுத் தறியென்றான் எங்கள் குருநாதன். 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருநாதன் வாழி

அழுந்தொறும் அணைக்கும் அன்னை
அறிவிலாது ஆடியோடி
விழுந்தொறும் எடுக்கும் அப்பன்
விளையாடும் போது தோழன்
தொழுந் தொறும் காக்குந் தெய்வம்
சொந்தமாய் எடுப்போர்க் கெல்லாம்
குழந்தை இப்படி உலாவு மென்
குருநாதன் வாழிவாழி.

குருவின் பாத கமலத்தில்
குறையா பக்தி வைப்பாயேல்
பிறவிச் சிறையில் நின்று
துரிதம் மீள்வாய் உறுதி
மனமும் புலனும் ஒழுங்குபட்டால்
காண்பாய் உன் உள்ளத்திலே
உலகத்தை ஆளும் தேவனுடைய
ஒளிமய உருவத்தை.

## கூத்தாடுதே மனமென்ன கொடுமை

### பல்லவி

கூத்தாடுதே மனமென்ன கொடுமை
கும்பிட்டேன் குருநாதா உன் அடிமை.

### அனுபல்லவி

தீர்த்தங்களாடினேன் யாத்திரை செய்தேன்
சித்தந் தெளியவில்லை என்ன நான் செய்வேன்.

*(கூத்தாடுதே)*



### சரணம்

பார்த்த விடமெங்கும் நீயல்லா தில்லை
பாராமல் நானும் பட்டேன் தொல்லை
காத்தென்னை யாள்வதுன்றன் கடமை
கருணைக் கடலே நான்உன் உடைமை.

*(கூத்தாடுதே)*

பக்திசெய் யோக சுவாமி பாட்டைப்
பாடிப் படிப்பவர் பல்லூழி காலம்
உத்தமராக உலகினில் வாழ்ந்து
வித்தகன் சேவடி விரவி நிற்பாரே. *(கூத்தாடுதே)*

## செல்வக் குருநாதா

செல்வக் குருநாதா செல்வக் குருநாதா
சிந்தைதடு மாறுதடா திருவருளைத் தந்திடடா

*(செல்வ)*

அல்லலெல்லாம் நீக்கி யாளாக்க வேண்டுமெடா
எல்லையில்லா இன்பத்திலே என்னையிருத்தி வைத்திடடா.

*(செல்வ)*

கல்லை நிகர்த்த மனம் கரையவரந் தந்திடடா
தொல்லை வினை நீக்கிச் சுகமெனக்கே ஈந்திடடா

*(செல்வ)*

நீயே நானெனும் நிச்சயத்தைக் காட்டிடடா
பேயே போல் நானிருந்து பிரமை கொள்ள வைத்திடடா.

*(செல்வ)*

அங்குமிங்கு மோடி அலைந்து திரிகிறேன்டா
எங்குமுனைக் காண எனக்கு வரந் தந்திடடா

*(செல்வ)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலைப்பபடட மான் போல் மயக்கமிக வாகுதெடா
சிலைப்பட்ட பாண்டம் போல் சித்தஞ் சிதறுதெடா.
*(செல்வ)*

எனக்குள்ளே நீயிருக்கும் எழிலைத்தான் காட்டி டெடா
உனக்குளளே நானிருக்கும் உண்மையிலே மாட்டிடெடா
*(செல்வ)*

பேசாத மந்திரத்தின் பெருமை நீ தந்திடெடா
ஆசாபிசாசை அகற்ற வழி காட்டிடெடா.
*(செல்வ)*

## திருவருள் தருவாயே நீ

### பல்லவி

தெய்வமே திருவருள் தருவாயே நீ.

### அனுபல்லவி

வையக மீதில் வணங்க அறியேன்
பொய்யும் புலையும் கொலையும் தவிரேன். *(தெய்வமே)*

### சரணம்

கையும் மெய்யும் கருத்துக்கிசைய
ஐயா தந்தனை அதை யானறியேன்
மெய்யா உன்தன் மெல்லடிக் கபயம்
மேலும் மேலும் உனை நான் வேண்டுவன். *(தெய்வமே)*

செந் நெல்லும் கன்னலும் செறியும் நல்லூரில்
தேசிகன் தாசன் யோக சுவாமி
சொல்லும் கீதம் சொல்லுவார் கேட்பார்
துன்பம் நீங்கி இன்பம் ஓங்கும். *(தெய்வமே)*



## தம்பி கேளடா

தாவித் தாவிச் செல்லும் மனத்தைத் தம்பி கேளடா
கூவிக் கூவி அழைத்துக் கூடக் குடியிருத்தடா

சேவித்துஞ் சென்றிரந்தும் தம்பி கேளடா
சிவமே நாமென்று தினஞ் சிந்தை செய்யடா

பாவித்தும் பாட்டிசைத்தும் தம்பி கேளடா
மூவிதமாம் ஆசை தன்னை முனிந்து வெல்லடா

தூவி மயிலேறும் வேலைத் துதித்துக் கொள்ளடா
நாவினில் நமச்சிவாயம் நவின்று நில்லடா.

## சிவ நாமஞ் சொல்லித் தெளியோமோ

சிவ நாமஞ் சொல்லித் தெளியோமோ
திருவடி கண்டு களியோமோ. *(சிவ)*

உவமை கடந்த வின்பம் எமக்குள்ளே உண்டு
ஒகோ உணர்ந்து செய் சிவத் தொண்டு. *(சிவ)*

தத்துவம் யாவுஞ் சடமென அறிவோம்
சத்தியம் ஆன்மா நித்தியம் உய்வோம். *(சிவ)*

அறிவறி யாமை இரண்டும் நீயல்லை
அரிய தத்துவம் தெரிவது தொல்லை. *(சிவ)*

பொறிவழி மனத்தைப் போகாமற் கொல்வோம்
பூரணமான நிட்டையிற் செல்வோம். *(சிவ)*

விருப்பும் வெறுப்பும் வீணெனக் குறிப்போம்
வேதாந்த சித்தாந்தஞ் சமமெனத் தெரிப்போம். *(சிவ)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றியை நாங்கள் மறந்திட மாட்டோம்
நாடெங்குஞ் சென்று சிவதொண்டு செய்வோம். *(சிவ)*

உத்தம நட்பை ஒருநாளும் பிரியோம்
ஓம் சிவாய நம என்று உரைப்போம். *(சிவ)*

அனைத்துஞ் சிவன்செயல் என நாம் எண்ணுவோம்
ஆன்மாக்களிடத்தில் அன்பு நாம் பண்ணுவோம். *(சிவ)*

குருவடி ஒருபோதும் கும்பிட மறவோம்
கூடாத கூட்டத்தில் கூடயாம் அறியோம். *(சிவ)*

இன்பமே அல்லாமல் துன்பம் நமக்கில்லை
ஈசனை மறந்தால் வந்திடுந் தொல்லை. *(சிவ)*

- *யோகசுவாமிகள்* -

## நம்ஞானகுரு

ஒருபோதும் கைவிடா நம்
ஞான குரு இருக்க உனக்கென்ன குறை மனமே

இறைவனின் அருள் நிழல் தான்
நம் அருட்குரு என்றறிவாய்
கலங்காதே பதறாதே
உன்னை அவர் அறிவார். *(ஒருபோதும்)*

அன்புடன் உனை அழைப்பார்
தன் முன்னாலே அமரச் சொல்வார்
அவர் அருள் ஒளி விழியால்
உன் கவலைகள் மறக்கச் செய்வார். *(ஒருபோதும்)*

துன்பம் துயரம் உன்னை
தொடர்ந்து வருத்தினாலும் - நீ
நம்பிக்கையுடன் அவர்
பாதம் சரணடைவாய். *(ஒருபோதும்)*



கஷ்டங்கள் நஷ்டங்கள்
கவலைகள் எது வந்தாலும் - நம்
சற்குரு சந்நிதியில்
அவை பஞ்சாகப் பறந்திடும். *(ஒருபோதும்)*

தீராப் பிணியுன்னை
தீர வருத்தினாலும் - அதையும்
தான் ஏற்றுக் கொள்வார் நம்
அருட் குரு நாதர். *(ஒருபோதும்)*

வாரா வினை வந்தாலும்
சோராதே என் மனமே - நம்
வல்ல குரு நாதர்
நம்மோடிருக்கையிலே. *(ஒருபோதும்)*

வாழ்வில் இருள் அகற்றி
வாழும் வகை சொல்லுவார் - நம்
கர்ம வினைகள் யாவும்
களையும் வழி கூறுவார். *(ஒருபோதும்)*

அறிவுரை சொல்லுவது
அவர் கருணை - அதை
அறிந்து நடப்பது
மனமே உன் கடமை. *(ஒருபோதும்)*

## குரு சரணம்

சிவானந்த சிவானந்த சிவானந்த பாஹிமாம்
சிவானந்த சிவானந்த சிவானந்த ரட்சமாம்.

தேவ தேவ சிவானந்த தீனபந்தோ பாஹிமாம்
சந்திர வதன மந்தகாஸ ப்ரேமரூப ரட்சமாம்
மதுரகீத கான லோல ஞானரூப பாஹிமாம்
சமஸ்த லோக பூஜிதாய மோகனாங்க ரட்சமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவ்யகங்கா தீரவாச தான சீல பாஹிமாம்
பாபகரண புண்ணிய சீல பரம புருஷ ரட்சமாம்
பக்தலோக ஹ்ருதய வாச சுவாமிநாத பாஹிமாம்
சித்சொரூப சிதானந்த சிவானந்த ரட்சமாம்.

ஓம் குருநாதா ஜெய குருநாதா
ஜெய குருநாதா ஜெய சிவானந்தா
ஜெயகுரு சிவகுரு ஹரிகுரு ஷ்யாம்
ஆதிகுரு அத்வைத குரு ஆனந்த குரு ஓம்
சித்குரு சித்கணகுரு சின்மய குரு ஓம்.

## சரணம் குரு

குரு சரணம் பவ குரு சரணம்
ஸத் குரு சரணம் பவஹரணம்.

ஜயகுரு ஜயகுரு ஜய ஸ்ரீ ஸத்குரு
ஜயகுரு சிவகுரு சச்சிதானந்த குரு. *(குரு)*

பஜரே மானஸ பவகுரு சரணம்
பவஸா கர சிவ ஸ்ரீ சரணம். *(குரு)*

## உன் அருள் வேண்டும்

குருநாதா சிவ குருநாதா
சற்குருநாதா ஸ்ரீ குருநாதா
குருபதம் பணிந்தோம்
பலனது அறிந்தோம். *(குரு)*

உண்மையை உணர
உன் துணை வேண்டும்
உறுதியை அடைய
உன் அருள் வேண்டும். *(குரு)*



நினைவது நல்லதாக
செயலது திடமதாக
சொல்லது தெளிவாக
எதிலுமே நிதானமாக. *(குரு)*

## ஜெயஜெயகுரு

ஜெயகுரு ஜெயகுரு சிவஸ்ரீ சற்குரு
ஜெயகுரு ஜெயகுரு சிவஸ்ரீ சற்குரு
சிவகுரு சிவகுரு ஜெய ஸ்ரீ சற்குரு
சிவகுரு சிவகுரு ஜெய ஸ்ரீ சற்குரு. *(ஜெய)*

புத்தி பலம் புகழ் அனைத்தையும் அருள்வாய்
ஆனந்த வாழ்வெனக்கு தினம் தினம் தருவாய்
நலம் அருள்வாய் எந்தன் நலம் மிகு குருவே
நல்ல இனம் தருவாய் எந்தன் சற்குருவே. *(ஜெய)*

பவஸாகரத்தை கடக்க அருளிடுவாய் குருவே
நல்லதெது தீயதெது கண்டறிய அருள்வாய்
நல்லடியார் கூட்டமுடன் சேர்த்து வைப்பாய் என்குருவே
திண்டாடும் பாவிக்கு உணர்த்துவாய் உண்மை நிலை. *(ஜெய)*

## கோடி நலம் தேடிவரும்

கோடி நலம் தேடிவரும்
குருபதம் பணிந்து விட்டால்
திருவருட் செல்வமெல்லாம்
பொலிவான ஒளிதருமே. *(கோடி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவணாடை துறவி கூட
கோமகன் ஆகிடலாம்
நலம் நன்மை எல்லாம்
நினைந்தவர் செய்திடலாம்.

(கோடி)

ஓடிஓடித் தேடிடுவேன்
குருபதம் பணிந்திடுவேன்
குருபதம் பணிந்த பின்னே
பரிசுத்தமாகிவிட்டேன்.

(கோடி)

## சுந்தர வதனம்

சுந்தர வதனமும் ஒளி மயமும் கொண்ட
ஜோதியின் வடிவமே என்குருவே
ஆற்றல் இல்லா பிள்ளை நான்
என்றே அகற்றிடாதே
அடிமை எனக்கு நீயும்
நல்லறிவு தருவாயே.

(சுந்தர)

கள்ள உள்ளம் உள்ளவர்க்கும்
கருணை அளித்திடுவாய்
நல்லதை உணர்த்தி அவர்
வாழ்வில் ஒளி தருவாய்
பேசாத பேச்சை அவர் - நா
பேசினாலும் - உன்
பேரருள் கருணையினால் - அவர்
குணம் மாற்றிடுவாய்.

(சுந்தர)



# விநாயகர்

## ஸ்லோகம்

சுக்லாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரசன்ன வதனம் த்யாயேத்
ஸர்வ விக்னோப சாந்தயே.

வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்துவரும்.

வெள்ளி முகத்து வேலவனைத் தொழ
புத்திமிகுந்து வரும்.

வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளியோடும் தொடர்ந்த வினைகளே.

அப்ப முப்பழம் அமுது செய்தருளிய
தொப்பையப்பனைத் தொழ வினை யறுமே.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

என்னை நினைந்தடிமை கொண்டென் இடர் கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் - புன்னை
விரசுமகிழ் சோலைவியன் நாரையூர் முக்கண்
அரசு மகிழ் அத்தி முகத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந்
தறிநிறுவி உறுதியாகத்
தள்ளரிய அன்பென்னுந் தொடர் பூட்டி
இடைப்படுத்தி தறுகட் பாசக்
கள்ள வினைப் பசு போதக் கவளமிடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ள மதம் பொழி சித்தி வேழத்தை
நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்.

*(திருவிளையாடல் புராணம்)*

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலம்
சொன்னவனே தூய்மெய் சுகத்தவனே - மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின் தாள் சரண்.

அல்லல்போம் வல்வினைபோம் அன்னை வயிற்றிற் பிறந்த
தொல்லை போம் போகாத் துயரம் போம் நல்ல
குணம் அதிகமாம் அருணைக் கோபுரத்துள் மேவும்
கணபதியைக் கை தொழுதக் கால்.

பாஹி பாஹி கஜானனா - பார்வதி புத்ரா கஜானனா
மூஷிக வாஹன கஜானனா - மோதக ஹஸ்த கஜானனா
ஸ்யாமள கர்ண கஜானனா - விளம்பிதசூத்ர கஜானனா
வாமன ரூபா கஜானனா - மஹேஸ்வர புத்ரா கஜானனா
விக்ன விநாயக கஜானனா - பாத நமஸ்தே கஜானனா.

*(பாஹி பாஹி)*



## பிள்ளையார் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம் பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞா னக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தங்கை.

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெல்லாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

வாக்குண்டாம் நல்லமனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனிநுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பு மிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம் செய்
துங்கக் கரிமுகத்து தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூஷிக வாஹன மோதக ஹஸ்த
சாமரகர்ண விளம்பித ஸுத்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே.

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடி கொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொடவல் பொரி
கப்பிய கரிமுக னடிபேணி
கற்றிடும் மடியவர் புத்தியிலுறைபவர்
கற்பக மென வினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடுமரன் மகன்
மற்பொரு திரள் புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர் கொடு பணிவேனே
முத்தமிழடைவினை முற்படுகிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரமெரி செய்த அச்சிவனுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துயரது கொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுடன் அச்சிறுமுருகனை
அக்கண மணமருள் பெருமாளே.



உம்பர்தரு தேனுமணிக் கசிவாகி
ஒண் கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத்தே பருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத் தானைமுகப் பெருமாளே.

## திரு அருட்பா

கலை நிறை கணபதி சரணம் சரணம்
கஜமுக குணபதி சரணம் சரணம்
தலைவனின் இணையடி சரணம் சரணம்
சரவண பவகுக சரணம் சரணம்
சிலைமலை யுடையவ சரணம் சரணம்
சிவ சிவ சிவ சிவ சரணம் சரணம்
உலைவறு மொருபரை சரணம் சரணம்
உமைசிவை யம்பிகை சரணம் சரணம்.

மூஷிக வாகன கஜானனா
மோதக ஹஸ்தா கஜானனா
உமை தரு பாலா கஜானனா
உந்தன் அடைக்கலம் நிரஞ்ஜனா.

## கணேச சரணம்

கணேச சரணம் சரணம் கணேசா
கணேச சரணம் சரணம் கணேசா.
ஆபத் பாந்தவ சரணம் கணேசா
அநாத ரக்ஷ்சக சரணம் கணேசா. *(கணேச)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூஷிக வாஹன சரணம் கணேசா
மோதகப் பிரியனே சரணம் கணேசா
பார்வதி தனயா சரணம் கணேசா
மஹேஸ்வர புத்ரா சரணம் கணேசா. (கணேச)

வித்யா தாயக சரணம் கணேசா
புத்திப்ர தாயக சரணம் கணேசா
பக்திப்ர தாதா சரணம் கணேசா
முக்திப்ர தாதா சரணம் கணேசா. (கணேச)

## மூஷிக வாகனனே

மூவுலகும் தொழும் மூஷிக வாஹனனே
நான் மறைகள் போற்றும் ஞான முதல்வனே
பாவலர்கள் பாடிப் பணிப்போனே இந்தப்
பாரினில் பரம் பொருளாய் ஒளிர்வோனே - இந்த (மூவு)

உலகுள் ஒளியாய் ஒளிரும் குருவே
உடலுள் உயிராய் உறையும் துணிவே
நிலத்தில் நிலையாய் நிலைக்கும் திருவே
கனிவோ டணைத்தே காக்கும் கனலே. (மூவு)

## நாமாவளி

ஜயகணேச ஜயகணேச ஜயகணேச - பாஹிமாம்
ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ஸ்ரீகணேச - ரக்ஷமாம்
கஜமுக கணபதி கணநாதா விக்ன விநாயக குணநீதா

## கணபதி ஓம்

கணபதி ஓம் ஜய கணபதி ஓம்
கஜமுக ஐங்கர கணபதி ஓம்
குணபதி யாம்சிவ கணபதி ஓம்
குண்டலி மண்டல கணபதி ஓம்.



மூஷிக வாகன கணபதி ஓம்
மூலப் பிரணவ கணபதி ஓம்
மாசறு தேசிக கணபதி ஓம்
வல்லப மோகன கணபதி ஓம்.

விக்ன விநாயக கணபதி ஓம்
விகசித நகைமுக கணபதி ஓம்
உக்ர தபோபல கணபதி ஓம்
ஊர்த்துவ நர்த்தன கணபதி ஓம்.

பார்வதி பால கணபதி ஓம்
பரசிவ ஞான கணபதி ஓம்
பூர்ண வியாபக கணபதி ஓம்
புவன புரந்தர கணபதி ஓம்.

சுத்த சதாசிவ கணபதி ஓம்
சுந்தர குஞ்சர கணபதி ஓம்
நித்திய தத்துவ கணபதி ஓம்
நின்மல சின்மய கணபதி ஓம்.
(கணபதி ஓம்)

## கௌரி நந்தன கஜானனா

கௌரி நந்தன கஜானனா
கிரிஜா நந்தன நிரஞ்ஜனா
பார்வதி நந்தன சுபானனா
பாஹிப்ரபோ சுந்தரவதனா. (கௌரி)

விக்ன விநாயக கஜானனா
சித்தி விநாயக நிரஞ்ஜனா
பார்வதி புத்ரா கஜானனா
முக்திப்ரதாயக சுபானனா. (கௌரி)

மூஷிக வாகன கஜானனா
மோதக ஹஸ்தா கஜானனா
உமைதரு பாலா கஜானனா
உன் தன் அடைக்கலம் நிரஞ்ஜனா. (கௌரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம் சரணம் ஸித்தி விதாதா
சரண மடைந்தவர்க்கருள் புரிவாவா
சரணம் சரணம் சக்தி சொரூபா
சரண மடைந்தவர்க்கருள் துணை வா வா. *(கௌரி)*

## கஜமுக கஜமுக கண நாதா

கஜமுக கஜமுக கண நாதா
கௌரி நந்தன கஜவதனா *(கஜ)*

கணபதி என்றிட கவலைகள் மாறிடும்
கருணை பெருகிடும் கல் நெஞ் சுருகிடும் *(கஜ)*

குணநிதி சங்கரன் கும்பிடும் தம்பிரான்
கணம்பல கவிசொல்ல கருத்தும் பண்பும் அருள்வான் *(கஜ)*

கண கண எனமணி கானத்துடன் முழங்க
குணம் நிறை அன்பர்கள் கும்பிட்டு மலர்தூவ *(கஜ)*

இணையினில் சங்கரன் இறைஞ்சிடும் தெய்வமே
மணம் கமழ் தமிழ் கவி மலர்த்தி அருள்பவன் *(கஜ)*

திகடச் சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகடச் சக்கரத் தாமரை நாயகன்
அகடச் சக்கர விண்மணி யாவுறை
விகடச் சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

## வெள்ளிக் கொம்பன்

வெள்ளிக் கொம்பன் விநாயகனே
வினைகள் தீர்க்கும் ஐங்கரனே
அன்னை பராசக்தி அருந்தவப் புதல்வா
ஆனைமுகத்து விநாயகனே. *(வெள்ளி)*



அகமும் புறமும் இருப்பவனே
அடியார் துயர்தனைத் துடைப்பவனே
ஆற்றோரத்திலும் குளக்கரை தனிலும்
அமர்ந்து அரசாட்சி புரிபவனே. *(வெள்ளி)*

ஓங்காரப் பொருளின் தத்துவமே
உள்ளத்திலே குடி கொண்டவனே
உன் புகழ் பாடும் பக்தர்கள் குறையை
உடனடியாகத் தீர்ப்பவனே. *(வெள்ளி)*

பக்தர்கள் நாங்கள் ஒன்று கூடி
பாதமலர்களைப் பணிகின்றோம்
இங்கு எழுந்தருள வேண்டுமய்யா
எங்கள் குறைகளை தீருமையா. *(வெள்ளி)*

## பிள்ளையார் பிள்ளையார்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்

ஆற்றங்கரை மீதிலே அரசமரத்து நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார் *(பிள்ளை)*

யானை முகம் கொண்டவர் ஐந்து கரங்கள் உடையவர்
பானை வயிறு படைத்தவர் பக்தர் குறை தீர்ப்பவர் *(பிள்ளை)*

அவல் கடலை சுண்டலும் அரிசிக் கொழுக்கட்டையும்
கவலையின்றி தின்னுவார் கண்ணைமூடித் தூங்குவார் *(பிள்ளை)*

கல்லினாலே செய்யினும் மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார். *(பிள்ளை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை
நெஞ்சில் நாட்டும் பிள்ளையார். (பிள்ளை)

ஓம் நமசிவாய சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் ஓம் நமசிவாய. (பிள்ளை)

ஓம் நமசிவாய சிவாய நம ஓம்
சிவ சிவ சிவ சிவ சிவாய நம ஓம். (பிள்ளை)

ஹர ஹர ஹர ஹர ஹராய நம ஓம்
சிவாய நம ஓம் ஓம் நமசிவாய. (பிள்ளை)

ஓம் நம சிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை
நெஞ்சில் நாட்டும் பிள்ளையார். (பிள்ளை)

ஆறுமுக வேலனுக்கு அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் நீக்கிவைக்கும் பிள்ளையார்
(பிள்ளை)

கலியுகத்தில் எம்மையும் காக்க வேண்டி வரினும்
எலியின் மீது ஏறியே இஷ்டம் போல சுற்றுவார். (பிள்ளை

## ஜயகணேஷ

ஜயகணேஷ ஜயகணேஷ ஜயகணேஷ பாஹிமாம்
ஸ்ரீகணேஷ ஸ்ரீகணேஷ ஸ்ரீகணேஷ ரக்ஷமாம்.

கணநாதம் கணநாதம் ஈஸ்வரபுத்ரம் கணநாதம்
கணநாதம் கணநாதம் ஈஸ்வரபுத்ரம் கணநாதம்.

சித்தி விநாயக கணநாதம் முக்தி பிரதாயக கணநாதம்
விக்ன விநாயக கணநாதம் பார்வதி புத்ரம் கணநாதம்.



மூஷிக வாகன கணநாதம் மோதக ஹஸ்த கணநாதம்
வாமன ரூப கணநாதம் மஹேஸ்வர புத்ர கணநாதம்.

கணபதி ஓம் ஜெய கணபதி ஓம்
கணபதி ஓம் ஜெய கணபதி ஓம்
கஜமுக கணபதி கணநாதம்
விக்ன விநாயக குணநீதம்
கலைநிறை கணபதி சரணம் சரணம்
கஜமுக கணபதி சரணம் சரணம்.

## விக்னங்கள் தீர்ப்பவனே

விக்னங்கள் தீர்ப்பவனே தொந்தி விநாயகனே
லம்போதரனே ஏகதந்தனே
வினைகளை தீர்க்க வந்த முன்னைப் பழம் பொருளே
உன் அருளாலே உன் புகழ் பாடவந்தேன்.
(விக்னங்கள்)

மூஷிக வாகனனே முக்கண்ணன் மைந்தனே
மூல முதற் பொருளே சித்தி முத்தி துணைவனே
பக்த ஜனப்ரியனே ஆபத் பாந்தவனே
பார்வையால் அருளிடுவாய் பரவசம் ஊட்டிடுவாய்.
(விக்னங்கள்)

வேழ முகத்தவனே வேணியின் பாலகனே
வேண்டியதை அருளும் வேதப் பரம்பொருளே
அன்னையும் தந்தையும் தான் முன்னறி தெய்வமென்று
அறிந்திடச் செய்தவனே அற்புத நாயகனே.
(விக்னங்கள்)

விக்ன விநாயகா ஓம் நமோ
வினைகளை அறுப்பாய் ஓம் நமோ
சக்தி விநாயகா ஓம் நமோ
சங்கடம் தீர்ப்பாய் ஓம் நமோ. (விக்னங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கண்ணன் மூத்தவனே

முக்கண்ணன் மூத்தவனே பிள்ளையாரே
முன்னைப் பழம் பொருளே பிள்ளையாரே
உமையவள் பாலகனே பிள்ளையாரே
உன்னைத் தினம் போற்றுகிறோம் பிள்ளையாரே.

*பிள்ளையார் பிள்ளையார் பிள்ளையார்*

அறுகம் புல் மாலை போட்டு பிள்ளையாரே
அனுதினமும் உன்னைத் துதிப்போம் பிள்ளையாரே
சங்கத் தமிழ் மூன்றும் பிள்ளையாரே
சந்ததிக்குத் தந்திடுவாய் பிள்ளையாரே.

*பிள்ளையார் பிள்ளையார் பிள்ளையார்.*

சதுர்த்தியில் வந்திடுவாய் பிள்ளையாரே
சங்கடங்கள் தீர்த்திடுவாய் பிள்ளையாரே
இதயத்துள் உன்னை காண்போம் பிள்ளையாரே
இன்பவாழ்வு அளித்திடுவாய் பிள்ளையாரே.

*பிள்ளையார் பிள்ளையார் பிள்ளையார்.*

## ஓம் எனும் ப்ரணவ ரூப நாயகா

ஓம் எனும் ப்ரணவ ரூப நாயகா
உமையவளின் பாலனே விநாயகா
தேவர் மூவர் போற்றும் வேத நாயகா
தேவாதி தேவனே விநாயகா. *(ஓம்)*



வல்வினைகள் தீர்க்கும் சக்தி நாயகா
வேண்டும் வரம் தந்திடும் விநாயகா
மௌனத்தின் முழுப்பொருளே விநாயகா
முக்கண்ணன் மைந்தனே விநாயகா. *(ஓம்)*

ஐங்கரங்கள் உள்ளவனே நாயகா
அவல் கடலைப் பிரியனே நீ விநாயகா
அன்பர் உள்ளம் அறிந்திடும் விநாயகா
அற்புத மணாளனே நீ விநாயகா. *(ஓம்)*

## சரணம் சரணம் சக்தி சொரூபா

கணநாதம் கணநாதம் - சிவ
பார்வதி புத்ரா குணநாதம் *(கண)*

முரளி வாகன கணநாதம்
மோதக ஹஸ்த குணநாதம் *(கண)*

சிவ சிவ கஜமுக கணநாதம்
சிவ கண வந்தித குணநாதம் *(கண)*

புத்திப்ரகாசா கணநாதம்
சித்தி அருள்வாய் குணநாதம் *(கண)*

வாவா வாவா அங்குச பாசா
வந்தருள் இன்பம் தந்திடு நேசா *(கண)*

உமைதரு பாலா குருமணியே
உந்தன் அடைக்கலம் அடியோமே *(கண)*

சரணம் சரணம் சக்தி சொரூபா
சரணம் அடைந்தவர்க் அருள் புரிவாவா *(கண)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆதி சங்கரரின்
## ஸ்ரீ கணேஷ பஞ்சரத்தனம்

முதாகராத்த - மோதகம் ஸதா விமுக்கி ஸாதகம்
கலாத ராவதம்ஸகம் விலாஸி லோக ரக்ஷகம்/
அநாய கைக நாயகம் விநாசி பேத தைத்யகம்
நதாசு பாசு நாசகம் நமாமிதம் விநாயகம்// 1 //

நதேத ராதி பீகரம் நவோதி தார்க்க பாஸ்வரம்
நமத் ஸுராரி நிர்ஜரம் நதாதி காப துத்தரம்/
ஸுரேஸ்வரம் நிதீஸ்வரம் கஜேஸ்வரம் கணேஸ்வரம்
மகேஸ்வரம் தமாஸ்ரயே பராத்பரம் நிரந்தரம்// 2 //

ஸமஸ்த-லோக-சங்கரம் நிரஸ்த தைத்ய-குஞ்சரம்
தரே தரோதரம் வரம் வரேபவக்த்ர - ம்க்ஷரம்/
க்ருபா கரம் க்ஷமாகரம் முதாகரம் யசஸ்கரம்
மனஸ்கரம் நமஸ்க்ருதாம் நமஸ்கரோமி பாஸ்வரம்// 3 //

அகிஞ்ச நார்த்தி மார்ஜனம் சிரந்த னோக்தி பாஜனம்
புராரி பூர்வ-நந்தனம் ஸுராரி கர்வ சர்வணம்/
ப்ரபஞ்ச நாச பீஷணம் தனஞ்ஜயாதி பூஷணம்
கபோல தான - வாரணம் பஜே புராண வாரணம்// 4 //

நிதாந்த-காந்த-தந்த காந்தி-மந்த காந்த காத்மஜம்
அசிந்த யரூப-மந்தஹீன-மந்ததராய-க்ருந்தனம்
ஹருதந்தரே நிரந்தரம் வஸந்த மேவ யோகினாம்
தமேக தந்த - மேவதம் விசிந்த யாமி ஸந்ததம்// 5 //

மஹா கணேச-பஞ்சரத்ன-மாதரேண யோன் வஹம்
பிரஜல்பதி பிரபாதகே ஹ்ருதிஸ்மரன் கணேஸ்வரம்/
அரோகதாம தோஷதாம் ஸுஸாஹிதீம் ஸுபுத்ரதாம்
ஸமாஹி தாயு ரஷ்ட பூதி மப்யுபைதி ஸோசிராத்// 6 //



## விநாயகர் அகவல்
### ஔவைப் பிராட்டியார் அருளியது

சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமாள் நாயனாரும் முறையே வெள்ளை யானையிலும் குதிரையிலும் திரு அஞ்சைக்களத்திலிருந்து கயிலாயம் செல்வதை அறிந்த ஔவைப்பிராட்டியார் தானும் கயிலாயம் செல்ல வேண்டுமென்று விரும்பினார். திருக்கோவிலூர் பெரிய கணபதி முன்நின்று விநாயகர் அகவலைப் பாடியதும் பிள்ளையார் அவரைக் கயிலாயத்தில் சேர்த்தார். இவ் அகவலைத் திருக்கோவிலூர்த் திருத்தலத்தில் கல்வெட்டில் இன்றும் காணலாம். இத்தலம் விழுப்புரத்திலிருந்து 34.கி. மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. சிவனின் வீரட்டானத் தலங்களில் அந்தகாரனை அழித்த தலம். விநாயகர் அகவலை நாமும் தினமும் ஓதிப் பேரின்பம் அடைவோமாக.

சீதக் களபச் செந்தாமரைப்பூம்
பாதச்சிலம்பு பல இசை பாட
பொன் அரைஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகெறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சுகரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடி கொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புத னீன்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாஹன!
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாயெனக்குத் தானெழுந்தருளி
மாயப்பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதல் ஐந்தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்
தெவிட்டாத ஞானத்தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கமறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவிலுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்



காலாலெழுப்புங் கருத்தறி வித்தே
அமுதநிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண் முகமாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்திமுத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக் கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடமென்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்க்
கணுமுற்றிநின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த்தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நக்கீரர் அருளிய

## விநாயகர் அகவல்

சீர்தரு மூலச் செழுஞ்சுடர் விளக்கே
கார்நிற மேனிக் கற்பகக் களிறே
அல்லல் வினையை யறுத்திடும் ஞான
வல்லபை தன்னை மருவிய மார்பா
பொங்கர வணிந்த புண்ணிய மூர்த்தி
சங்கர னருளிய சற்குரு விநாயக!
ஏழை யடியேன் இருவிழி காண
வேழ முகமும் வெண்பிறைக் கோடும்
பெருகிய செவியும் பேழை வயிறும்
திருவளர் நுதலில் திருநீற் றழகும்
சிறுத்த கண்ணுஞ் சீதளப் பார்வையும்
நறுந்திகழ் நாசியும் நாண்மலர்ப் பாதமும்
நவமணி மகுட நன்மலர் முடியும்
கவச குண்டல காந்தியும் விளங்கச்
சிந்துரத் திலகச் சந்தனப் பொட்டும்
ஐந்து கரத்தி னழகும்வீற் றிருக்கப்
பாச வினையைப் பறித்திடு மங்குச
பாசத் தொளியும் பன்மணி மார்பும்
பொன்னா பரணமும் பொருந்துமுந் நூலும்
மின்னா மெனவே விளங்குபட் டழகும்
உந்திச் சுழியும் உரோமத் தழகும்
தொந்தி வயிறுந் துதிக்கையுந் தோன்ற
வேதனும் மாலும் விமலனு மறியாப்
பாதச் சதங்கைப் பலதொனி யார்ப்பத்
தண்டைச் சிலம்புந் தங்கக் கொலுசும்
எண்டிசை மண்டல மெங்கும் முழங்கத்
தொகுது துந்துமி தொந்தோ மெனவே



தகுகு திந்திமி தாள முழுங்க
ஆடிய பாதம் அண்டர்கள் போற்ற
நாடிமெய் யடியார் நாளுத் துதிக்கக்
கருணை புரிந்து காட்சி தந்தருள்
இருளைக் கடிந்து எங்கும் நிறையப்
பொங்குபே ரொளியாய்ப் பொன்மலை போலத்
திங்கள் முடியான் றிருவுள மகிழ
வந்த வாரண வடிவையுங் காட்டிச்
சிந்தை தளர்ந்த சீரடி யார்க்கு
இகபர சாதன மிரண்டு முதவி
அகவினைத் துன்ப மகந்தை யறுத்து
மூலா தார முச்சுடர் காட்டி
வாலாம் பிகைதன் வடிவையுங் காட்டி
மாணிக்க மேனி மலர்ப்பதங் காட்டிப்
பேணிப் பணியப் பீஜா க்ஷரமும்
ஓமென்று உதித்த ஓங்காரத் துள்ளே
ஆமென் றெழுந்த அக்ஷர வடிவும்
இடைபிங் கலைகள் இரண்டின் நடுவே
கடைமுனை சுழிமுனைக் கபாலமுங் குறித்து
மண்டல மூன்றும் வாய்வோர் பத்துங்
குண்டலி யசைவிலி கூறிய நாடியும்
பூதமும் பொறியும் புகழ்குண மூன்றும்
வாதனை செய்யு மறிவையும் காட்டி.
ஆறா தார அங்குச நிலையைப்
பேறாகி நின்ற பெருமையுங் காட்டிப்
பஞ்ச மூர்த்திகள் பாகத் தமர்ந்த
பஞ்சசத் திகளின் பாதமும் காட்டி
நவ்விட மௌவும் நடுவணை வீட்டில்
அவ்வு மாக்கினை அனாதி சதாசிவம்
மைவிழி ஞான மனோன்மணி பாதமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைவினை நணுகா நாத கீதமும்
கண்டு வணங்கக் கண்ணைத் திறந்து
விண்டல மான வெளியையும் காட்டி
ஐம்பத் தோரெழுத் தக்ஷர நிலையை
இன்பச் சக்கர விதிதனைக் காட்டிப்
புருவ நடுவிணைப் பொற்கம லாசனன்
திருவிளை யாடலின் திருவடி காட்டி
நாதமும் விந்தும் நடுநிலை காட்டிப்
போத நிறைந்த பூரணங் காட்டி
உச்சி வெளிதனி லுள்ளொளி காட்டி
வச்சிரம் பச்சை மரகத முத்துப்
பவள நிறைந்த பளிங்கொளி காட்டிச்
சிவகயி லாயச் சேர்வையுங் காட்டிச்
சத்தம் பிறந்த தலத்தையுங் காட்டித்
தத்துவந் தொண்ணூற் றாறையு நீக்கிக்
கருவி கரணக் களங்க மறுத்து
மருவிய பிறவி மாயையை நீக்கி
உம்பர்கள் ரிஷிகள் ஒருவருங் காணா
அம்பர வெளியி னருளையுங் காட்டிச்
சத்தி பராபரை சதானந்தி நிராமய
நித்திய ரூபி நிலைமையுங் காட்டி
அடியவர் ஞானமமிர்தமா யுண்ணும்
வடிவை யறியும் வழிதனைக் காட்டி
நாசி நுனியில் நடக்குங் கலைகள்
வாசிவா வென்று வாங்கிப் பிடித்து
நின்மல வடிவாய் நிறுவித் தப்புறம்
வின்மய மான வித்தையுங் காட்டித்
தராதல முழுதுந் தானாய் நிறைந்த
பராபர வெளியைப் பணிந்திடக் காட்டி
என்னுட லாவி யிடம்பொருள் ளியாவுந்



தன்னுடை வசமாந் தவனிலை காட்டி
நானெனு மாணவம் நாசம தாகத்
தானென வந்து தயக்கந் தீர
ஆன குருவா யாட்கொண்டருளி
மோனஞான முழுது மளித்துச்
சிற்பரி பூரண சிவத்தைக் காண
நற்சிவ நிஷ்களி நாட்டமும் தந்து
குருவுஞ் சீஷனுங் கூடிக் கலந்து
இருவரு மொருதனி இடந்தனிற் சேர்ந்
தானந்த மாகித் தற்பர வெளியில்
ஆனந்த போத அறிவைக் கலந்து
புவனத் தொழிலைப் பொய்யென் றுணர்ந்து
மவுனமுத் திரையை மனத்தினி லிருத்திப்
பெண்டு பிள்ளை பண்டு பதார்த்தங்
கண்டது மாயைக் கனவெனக் காட்டிப்
பாச பந்தப் பவக்கடல் நீக்கி
ஈச னிணையடி யிருத்தி மனத்தே
நீயே நானாய் நானே நீயாய்
காயா புரியைக் கனவென வுணர்ந்து
எல்லா முன்செய லென்றே யுணர
நல்லா யுன்னருள் நாட்டந் தருவாய்
காரண குருவே கற்பகக் களிறே
வாரண முகத்து வள்ளலே போற்றி
நித்திய பூஜை நைவேத் தியமும்
பத்தியாய்க் கொடுத்தேன் பரமனே போற்றி!
ஏத்தி யனுதின மெளியேன் பணியக்
கூற்றினை யுதைத்துக் குளிர்பதந் தந்து
ஆசு மதுர வமிர்த மளித்துப்
பேசு ஞானப் பேறெனக் கருளி
மனத்தில் நினைத்த மதுர வாசகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவினுங் கனவிலும் நேசம் பொருந்தி
அருண கிரியா ரவ்வை போலக்
கருத்து மிகுந்து கவிமழை பொழிய
வாக்குக் கெட்டா வாழ்வை அளித்து
நோக்கரு ஞான நோக்கு மளித்து
இல்லற வாழ்வை யிடையூ றகற்றிப்
புல்ல ரிடத்திற் புகுந்துழ லாமல்
ஏற்ப திகழ்ச்சி என்ப தகற்றிக்
காப்ப துனக்குக் கடன்கண் டாயே!
நல்வினை தீவினை நாடி வருகினுங்
செல்வினை யெல்லாஞ் செயலுன தாமால்
தந்தையும் நீயே தாயும் நீயே
எந்தையும் நீயே ஈசனும் நீயே
போத ஞானப் பொருளும் நீயே
நாதமும் நீயே நான்மறை நீயே
அரியும் நீயே அயனும் நீயே
திரிபுர தகனஞ் செய்தவன் நீயே
சக்தியும் நீயே சதாசிவம் நீயே
புத்தியும் நீயே புராந்தகன் நீயே!
பத்தியும் நீயே பந்தமும் நீயே
முத்தியும் நீயே மோட்சமும் நீயே
ஏகமும் நீயே என்னுயிர் நீயே
தேகமும் நீயே தேவனும் நீயே!
உன்னரு ளன்றி உயிர்த்துணை காணேன்
பின்னொரு தெய்வம் பேசவு மறியேன்
வேதனை கொடுத்த மெய்யிது தன்னில்
வாத பித்தம் வருத்திடு சிலேத்துமம்
மூன்று நாடியும் முக்குண மாகித்
தோன்றும் வினையின் துன்ப மறுத்து
நாலா யிரத்துநா னூற்றுநாற் பத்தெண்



மேலாம் வினையை மெலியக் களைந்து
அஞ்சா நிலைமை யருளிய நித்தன்
பஞ்சா க்ஷரநிலை பாலித் தெனக்குச்
செல்வமுங் கல்வியும் சீரும் பெருக
நல்வர மேதரும் நான்மறை விநாயகா!
சத்திய வாக்குச் சத்தா யுதவிப்
புத்திர னேதரும் புண்ணிய முதலே
வெண்ணீ றணியும் விமலன் புதல்வா
பெண்ணா முமையாள் பெற்றிடுந் தேவே!
அரிதிரு மருகா அறுமுகன் துணைவா
கரிமுக வாரணக் கணபதி சரணம்
குருவே சரணம் குணமே சரணம்
பெருவயிற் றோனே பொற்றாள் சரணம்!
கண்ணே மணியே கதியே சரணம்
விண்ணே யொளியே வேந்தே சரணம்!
மானத வாவி மலர்த்தடத் தருகில்
தானத்தில் வாழும் தற்பரா சரணம்!
உச்சிப் புருவத் துதித்துல களிக்குஞ்
சச்சிதா னந்த சற்குரு சரணம்
விக்கிந விநாயகா தேவே ஓம்
ஹர ஹர ஷண்முக பவனே ஓம்
சிவசிவ மஹா தேவ சம்பா ஓம்!!

*(நல்லனவெல்லாம் தரும்)*

*நக்கீரர் அருளிய*

*திரு விநாயகர் திருவகவல் நிறைவுற்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## காசிப முனிவர்

# விநாயக கவசம்

## (தமிழில் கச்சியப்ப சுவாமிகள்)

வளர்ச்சிகையைப் பராபரமாய் வயங்கு
விநாயகர் காக்கவாய்ந்த சென்னி
யளவுபடா வதிகசவுந் தரதேக
மதோற்கடர்தா மமர்ந்து காக்க
விளரறநெற் றியையென்றும் விளங்கியகா
சிபர்காக்க புருவந் தம்மைத்
தளர்வின்மகோ தரர்காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க.

கவின் வளரு மதரங்கச முகர் காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகங் கிரிசைசுதர் காக்கநனி
வாக்கைவிநா யகர்தாங் காக்க
அவிர்நகைதுன் முகர்காக்க வள்ளெழிற்
செஞ்செவி பாசபாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா
சியைச்சித்தி தார்த்தர் காக்க.

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்ககளங் கணேசர் காக்க
வாமமுறு மிருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தா மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவிநாய
கன்காக்க விதயந் தன்னைத்



தோமகலுங் கணநாதர் காக்கவகட்
டினைத்துலங்கே ரம்பர் காக்க.

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினகரன் காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாங் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை யல்லல்
உக்ககண பன்காக்க வூருவைமங்
களமூர்த்தி யுவந்து காக்க.

தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்கவிரு
பதமேக தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் ஆசாரபுரகர் காக்க
விரல்பதும வத்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள் விநாயகர் காக்க
கிழக்கினிற் புத்தீசர் காக்க.

அக்கினியிற் சித்தீசர் காக்கவுமா
புத்திரர் தென்னாசை காக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவர்த் தனர்மேற் கென்னும்
திக்கதனிற் காக்கவா யுவிற்கசகன்
னன்காக்க திகழு தீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கி
லீசநந் தனரே காக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகதந்தர் பகன்முழுதுங் காக்கவிர
வினுஞ்சந்தி யிரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்கவிராக்
கதர்பூத முறுவே தாள
மோகினிபே யிவையாதி உயிர்த் திறத்தால்
வருந்துயரு முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபுபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க.

மதிஞானந் தவந்தான மானமொளி
புகழ்குலம்வண் சரீர முற்றும்
பதிவான தனந்தானி யங்கிரக
மனைவி மைந்தர் பயினட் பாதிக்
கதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச
ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க.

வென்றி சீவிதங்கபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ
திடினும்பா லிடையூ றொன்றும்
ஒன்றுறா முனிவர்கா ளறிமின்கள்
யாரொருவ ரோதி னாலு
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும்.



## காரிய சித்தி மாலை

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தங்கை.

பந்தம் அகற்றும் அநந்த குணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து சுரக்குமோ
சந்த மறை ஆகமங்கலைகள்
அனைத்தும் எவன்பால்தக வருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம். 1

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன் அந்த
உலக முதலாங் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம். 2

இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க்கு ஊறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம். 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தினாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம். 4

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன்விளைவில்
ஊட்டி விடுப்பான்எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம். 5

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விளங்குவர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்எண் குணன் எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம். 6

மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான்எவன் தீயின்
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்



எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம். 7

பாச அறிவில் பசுஅறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவில் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம். 8

## கைமேல் பலன்கள்

இந்த நமது தோத்திரத்தை யாவன் மூன்று தினம் மும்மைச்
சந்திகளில்தோத் திரஞ்செயினும் சகல கரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுகம்பெறும் எண் தினம்உச் சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர் எண்கால் படிக்கின் அட்ட சித்தியுறும்

திங்கள் இரண்டு தினந்தோறும் திகழ ஒருபான் முறைஓதில்
தங்கும் அரச வசியமாம் தயங்க இருபத்து ஒருமுறைமை
பொங்கும் உழுவ லால்கிளப்பின் பொருவில் மைந்தர் விழுக்கல்வி
துங்க வெறுக்கை முதல் பலவும் தோன்றும் எனச் செப்பினர்
மறைந்தார்

*(இந்தக் காரியசித்தி மாலையைக் காலை, மதியம், மாலை மூன்று வேளைகளிலும் விநாயகரை எண்ணி எட்டு நாட்கள் பாடுவார்கள். நினைத்த காரியம் சித்திக்கும் சதுர்த்தி விரத தினத்தன்று எட்டு முறை பாடினால் எட்டுச் சித்திகளும் கைகூடும்).*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சிவபெருமான்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளியது

### 1ந் திருமுறை

*திருச்சிற்றம்பலம்*

தோடுடைய செவியன் விடை யேறியோர் தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடிபூசியென்னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட்பணிந் தேத்த வருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே. 1

நாளாய போகமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்பு செய்வோம் மடநெஞ்சே அரன் நாமம்
கேளாய் நம் கிளை கிளைக்கும் கேடுபடாத்திறம் அருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலி யெம் பெருமானே 2

அச்சம்மிலர் பாவம்மிலர் கேடும்மில ரடியார்
நிச்சம் முறு நோயும் மிலர் தாமுந் நின்றியூரில்
நச்சம் மிட றுடையார் நறுங் கொன்றை நயந்தாளும்
பச்சம் முடை யடிகள் திருப் பாதம் பணிவாரே. 3

பண்ணும் பதமேழும் பலவோசை தமிழவையும்
உண்ணின்றதோர் சுவையுமுறு தாளத்தொலி பலவும்
மண்ணும் புனலுயிரும் வருகாற்றுஞ் சுடர் மூன்றும்
விண்ணும் முழுதானானிடம் வீழும் மிழலையே. 4

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித் திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே
5

வேத மோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை யெருதேறிப்
பூதஞ்சூழப் பொலிய வருவார் புலியினுரி தோலார்
நாதா எனவும் நக்கா எனவும் நம்பா என நின்று
பாதந் தொழுவார் பாவந்தீர்ப்பார் பழன நகராரே. 6

விருத்தனாகிப் பாலனாகி வேதமோர் நான் குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ் சடைமேற் கரந்தாய்
அருத்தனாய ஆதிதேவனடி யிணையே பரவும்
நிருத்தர் கீத ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. 7

### 2ந் திருமுறை

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே. 1

கீதத்தை மிகப்பாடுமடியார்கள் குடியாகப்
பாதத்தை தொழ நின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே. 2

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையதது
முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரிசூழ் திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடுமதனாலே. 3

நன்நெஞ்சே யுனையிரந்தேன் நம்பெருமான் திருவடியே
உன்னஞ்செய் திருகண்டா யுய்வதனை வேண்டுதியேல்
அன்னஞ்சேர் பிரமபுரத் தாரமுதை எப்பொழுதும்
பன்னுஞ்சீர் வாயதுவே பார்கண்ணே பரிந்திடவே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் வீணையர் பல பல சரிதையரெருது கைத் தருநட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ்சுண்டிருள் கண்டத்தர்
ஈடமாவது இருங்கடற் கரையினி லெழில்திகழ் மாதோட்டம்
கேடி லாதகேதீச்சரந் தொழுதெழக் கெடுமிடர் வினைதானே. 5

## 3ந் திருமுறை

உற்றுமை சேர்வது மெய்யினையே யுணர்வது நின்னருள்
மெய்யினையே
கற்றவர் காய்வதும் காமனையே கனல்விழி காய்வது
காமனையே
அற்ற மறைப்பது முன்பணியே அமரர்கள் செய்வது
முன்பணியே
பெற்று முகந்தது கந்தனையே பிரம புரத்தை
யுகந்தனையே. 1

இடரினுந் தளரினு மெனதுறு நோய்
தொடரினு முனகழல் தொழு தெழுவேன்
கடல் தனி லமுதொடு கலந்த நஞ்சை
மிடரினி லடக்கிய வேதியனே

இதுவோ எமை யாளுமா றீவதொன் றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னரு ளாவடு துறையரனே. 2

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைம்மடமான
பங்கையச் செல்வி பாண்டிமாதேவி பணிசெய்து நாடொறும்பரவ
பொங்கழ லுருவன் பூதநாயகனால் வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாயாவது மிதுவே
3

மானினேர் விழி மாதராய் வழு திக்கு மாபெருந் தேவிகேள்
பானல் வாயொரு பாலனீங்கிவனென்று நீ பரி வெய்திடேல்
ஆனை மாமலை யாதியாய இடங்களிற் பல அல்லல்சேர்
ஈனர் கட்கெளி யேனலேன் திரு ஆலவாயரன் நிற்கவே. 4



அன்புறு சிந்தைய ராகி யடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமணம் மேவிநின்று
இன்புறும் எந்தை இணையடி யேத்துவார்
துன்புறுவார் அல்லர் தொண்டு செய்வாரே. 5

நறும்பொழிற் காழியுள் ஞானசம் பந்தன்
பெறும்பத நல்லூர்ப் பெருமணத் தானை
உறும்பொரு ளாற்சொன்ன வொண்டமிழ் வல்லார்க்
கறும்பழி பாவம் மவல மிலரே. 6

## திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது
## 4ந் திருமுறை

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே. 1

மண்பொருந்தி வாழ்பவர்க்கும் மாதீர்த்த வேதியர்க்கும்
விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானைப்
பண்பொருந்த இசைபாடும் பழனஞ் சேரப்பனையென்
கண் பொருந்தும் போதத்துங் கைவிட நான் கடவேனோ. 2

கூற்றாயின வாறு விலக்ககலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே யிரவும் பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றா தென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடியேனதி கைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலர்ந்தார் தலையிற் பலி கொண்டுழல்வாய்
உடலுள் ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலர்ந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 4

சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே.

பூவினுக்கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே. 5

மாதர்ப் பிறைக் கண்ணியானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர் சுமந்தேத்திப்
புகுவாரவர் பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல்
ஐயாறடைகின்ற போது
காதல் மடப்பிடியோடுங் களிறு
வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம்
கண்டறியாதன கண்டேன். 6



## 5ந் திருமுறை

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்குமாறு கண்டின்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே. 1

தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்
நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்
ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப்போம் நம துள்ள வினைகளே. 2

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனோ. 3

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை யிணையடி நீழலே 4

## 6ந் திருமுறை
## திருத்தாண்டகம்

நிலைபெறு மா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றியென்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீயென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே. 1

அரியானை அந்தணர்தஞ் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப்பாலைத்
திகழொளியைத் தேவர்கள் தங் கோனை மற்றைக்
கரியானை நான் முகனைக் கனலைக் காற்றைக்
கன கடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 2

முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள
பின்னை அவ்னுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்துமவனுக்கே பிச்சியானாள்
அன்னையையு மத்தனையுமன்றே நீத்தா
ளகன்றா ளகலிடத்தா ராசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன் நாமங்கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே. 3

நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரநற் சங்க வெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச் சேவடியினையே குறுகினோமே. 4



## 7ந் திருமுறை

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது.

மற்றுப் பற்றெனக்கின்றிநின் திருப்பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க் கறையூரிற் பாண்டிக்கொடுமுடி
நற்றவாஉனை நான்மறக்கினும் சொல்லு நாநமச்சிவாயவே. 1

மீளா வடிமை யுமக்கே யாளாய்ப் பிறைரை வேண்டாதே
மூளாத் தீப்போ லுள்ளே கனன்று முகத்தால் மிக வாடி
ஆளாயிருக்கும் அடியார் தங்க ளல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே. 2

பித்தா பிறை சூடி பெருமானே யருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூரருட்டுறையுள்
அத்தா உனக்காளாய் இனி அல்லேனென லாமே. 3

தம்மையே புகழ்ந் திச்சை பேசினுஞ் சார்கினுந் தொண்டர்
தருகிலாப்
பொய்மையாளரைப் பாடாதேயெந்தை புகலூர் பாடுமின்
புலவர்காள்
இம்மையே தருஞ் சோறுங் கூறையும் ஏத்தலாமிடர்
கெடலுமாம்
அம்மையே சிவ லோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுற
வில்லையே. 4

செண்டாடும் விடையாய் சிவனே யென் செழுஞ்சுடரே
வண்டாருங் குழலாளுமை பாகம் மகிழ்ந்தவனே
கண்டார் காதலிக்குங் கணநாத னெங்காளத்தியாய்
அண்டா வுன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின் கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்நகரில்
பாவம்வினை யறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்னெனை யாள்வான் திருக்கேதீச்சரத்தானே. 6

கங்கை வார் சடையாய் கணநாதா
கால காலனே காமனுக் கனலே
பொங்குமா கடல் விடமிடற்றானே
பூத நாதனே புண்ணியா புனிதா
செங்கண் மால் விடையாய் தெளிதேனே
தீர்த்தனே திரு வாவடு துறையுள்
அங்கணா வெனை யஞ்ச லென்றருளாய்
யாரெனக்குறவு அமரர்களேறே. 7

நீள நினைந்தடியே னுமை நித்தலும் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள் வாடிவருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவைஅட்டித்தரப் பணியே. 8

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவா ரடியாருக்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன் பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே. 9

நத்தார் படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம் மதயானையுரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தா ரெலும் பணிவான்திருக் கேதீச்சரத்தானே. 10



## 8ந் திருமுறை
### மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது.

மெய்தானரும்பி விதிர் விதிர்த்துன் விரையார் கழற்கென்
கைதான்றலை வைத்துக் கண்ணீர்ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி சயசயபோற்றி யென்னுங்
கைதானெகிழ விடேனுடையா யென்னைக் கண்டுகொள்ளே. 1

நாடகத்தாலுன் னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே யிடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே. 2

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே. 3

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயான் மறைபோலுங் காணேடி
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ. 4

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா வார்கொலோ சதுரர்
அந்த மொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்ற தொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்ட வெம்பெருமான்
திருப் பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசாவுடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனோர் கைம்மாறே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் யார்க்கெடுத் துரைக்கேன்
ஆண்ட நீயருளிலை யானால்
வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக வென்றருள் புரியாயே.

பருதிவா ழொளியாய் பாதமேயல்லாற்
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
திருவுயர்கோலச் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
கருணையே நோக்கி கசிந்துள முருகிக்
கலந்து நான் வாழுமாறறியா
மருளனேனுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக வென் றருள் புரியாயே.

அம்மையே அப்பா ஒப்பில்லா மணியே
அன்பினில் விழைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
யுலப்பிலா வானந்த மாய



தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே. 9

உற்றாரை யான் வேண்டேன்
ஊர்வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன்
கற்பவையும் மினியமையுங்
குற்றாலத் தமர்ந் துறையுங்
கூத்தா உன் குரை கழற்கே
கற்றாவின் மனம் போலக்
கசிந்துருக வேண்டுவனே. 10

பாருருவாய பிறப்பற வேண்டும்
பக்திமையும் பெறவேண்டும்
சீருருவாய சிவபெருமானே
செங்கமல மலர் போல
ஆருருவாய வென் னாரமுதேயுன்
னடியவர் தொகை நடுவே
ஓருருவாய நின் திருவருள் காட்டி
யென்னையு முய்யக் கொண்டருளே. 11

கண்கள் இரண்டும் அவன் கழல்
கண்டு களிப்பன ஆகாதே
காரிகையார்கள் தம் வாழ்வில் என்
வாழ்வு கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடும்
மாறு மறந்திடும் ஆகாதே
மாலறியா மலர்ப்பாதம்
இரண்டும் வணங்குதும் ஆகாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்களி கூர்தரு பாடலொ(டு)
ஆடல் பயின்றிடும் ஆகாதே
பாண்டி நல் நாடுடையான் படை
ஆட்சிகள் பாடுதும் ஆகாதே
விண்களி கூர்வதோர் வேதகம்
வந்து வெளிப்படும் ஆகாதே
மீன் வலை வீசிய கானவன்
வந்து வெளிப்படும் ஆயிடிலே. 12

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல் வேனைப்
பக்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக் கருளியவாறார் பெறுவார் அச்சோவே.

## 9ந் திருமுறை
## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந்தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. 1

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்



செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திரு வீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர என்கண் குளிர்ந்தனவே. 2

## திருப்பல்லாண்டு

மன்னுகதில்லை வளர்க நம்
பக்தர்கள் வஞ்சகர் போய் அகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறப்பறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே. 1

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில
வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 2

## 10ந் திருமுறை
## திருமந்திரம் (திருமூலர்)

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே. 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனுக்குள் இன்பஞ் சிவப்போ கறுப்போ
வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்
தேனுக்குள் இன்பஞ் செறிந்திருந்தாற்போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே.

## 11ந் திருமுறை
## கபிலதேவ நாயனார் அருளியது

மலர்ந்த மலர்தூவி மாமனத்தைக் கூப்பிப்
புலர்ந்தும் புலராத போதும் - கலந்திருந்து
கண்ணீர் அரும்பக் கசிவார்க்குக் காண்பெளியன்
தெண்ணீர் சடைக்கரந்த தேவு.

அஞ்சு முகம்தோன்றில் அறு முகம்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சல்என வேல்தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன்.

## 12ந் திருமுறை
## சேக்கிழார் அருளியது

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆ
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி! போற்றி!

*திருச்சிற்றம்பலம்*



## ஓம் சிவாய ஓம்

ஓம் சிவாய ஓம் சிவாய ஓம் சிவாய ஓம்
ஓம் சிவாய ஓம் சிவாய ஓம் சிவாய ஓம்

பாடுகின்ற பனுவலோர்கள் தேடுகின்ற செல்வமே
நாடுகின்ற ஞானமன்றில் ஆடுகின்ற • அழகனே
*(ஓம் சிவாய)*

அத்தனென்ற நின்னையே பக்திசெய்து பனுவலால்
பித்தனின்று பேசவே வைத்ததென்ன வாரமே.
*(ஓம் சிவாய)*

சிந்தையன்பு சேரவே நைந்து நின்னை நாடினேன்
வந்து வந்துள் இன்பமே தந்திரங்கு தாணுவே.
*(ஓம் சிவாய)*

அண்டரண்டம் யாவும் நீ கொண்டு நின்ற கோலமே
தொண்டர்கண்டு சொரி கணீர் கண்டநெஞ்சும் கரையுமே
*(ஓம் சிவாய)*

அன்னை போல அருள மிகுத்து மன்னுஞான வரதனே
என்னையே எனக்களித்த நின்னை யானும் நினைவனே.
*(ஓம் சிவாய)*
*(தாயுமான சுவாமிகள்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பலத்தரசே

அம்பலத்தரசே அருமருந்தே
ஆனந்தத் தேனே அருள்விருந்தே
பொது நடத்தரசே புண்ணியனே
புலவரெல்லாம் புகழ் கண்ணியனே
சிவ சிவ சிவ சிவ சின்மயதேஜா
சிவ சுந்தர குஞ்சித நடராஜா
மலை தரு மகளே மடமயிலே
மதிமுகவமுதே இளங்குயிலே
ஆனந்தக் கொடியே இளம்பிடியே
அற்புதத்தேனே மலைமானே
படன விவேக பரம்பரவேதா
நடன சபேச சிதம்பர நாதா
அரிபிர மாதியர் தேடிய நாதா
அரகர சிவ சிவ ஆடிய பாதா
தந்திர மந்திர யந்திர பாதா
சங்கர சங்கர சங்கர நாதா
கருணா நிதியே சபாபதியே
கதிமா நிதியே பசுபதியே
கனக சிதம்பர சங்கர புரஹர
அனக பரம்பர சங்கர ஹரஹர
சங்கர சிவ சிவ மாதேவா
எங்களை ஆட்கொள்ள வா வா வா
அரகர சிவ சிவ மாதேவா
அருளமுதந் தர வா வா வா.



## அருட்ஜோதி தெய்வம்

அருட்ஜோதி தெய்வமெனை ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்த தெய்வம்
பொருட்சாறு மறைகளெல்லாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்த தெய்வமுயர் நாதாந்த தெய்வம்
இருட்பாடு நீக்கியொளி ஈந்தருளும் தெய்வம்
எண்ணிய நான் எண்ணியவா றெனக்கருளும் தெய்வம்
தெருட் பாடல் உவந்தெனையுஞ் சிவமாக்குந் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

தாயாகித் தந்தையுமாய் தாங்குகின்ற தெய்வம்
தன்னை நிகர் இல்லாத தனித்தலைமைத் தெய்வம்
வாயார வாழ்த்துகின்றோர் மனதமர்ந்த தெய்வம்
மலரடி என் சென்னிமிசை வைத்த பெரும் தெய்வம்
காயாது கனியாகி கலந்தினிக்கும் தெய்வம்
கருணை நிதி தெய்வம் முற்றும் காட்டுவிக்கும் தெய்வம்
சேயாக எனை வளர்க்கும் தெய்வம் மகா தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

(இராமலிங்கசுவாமிகள்)

## குயில் பத்து

கீதமினிய குயிலேகேட்டியே யெங்கள் பெருமான்
பாதமிரண்டும் வினவிற்பாதாள மேழினுக் கப்பாற்
சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்ற தொன்மை
யாதி குணமொன்று மில்லானந்த மிலான்வரக் கூவாய். 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூவுகுயிலே பறந்து கூவுகுயிலே
கும்பிடுவார் மனத்தானைக் கூவுகுயிலே
நாவுக்கினியவனை நல்ல குயிலே
நம்பனை இங்குவரக் கூவுகுயிலே. *(கூவு)*

சிவன் சிவன் என்று சொல்லும் சித்தர் குழாம்
தேடும் பொருளை வரக் கூவுகுயிலே
நாவலரும் பாவலரும் பணிந்தேத்தும்
நல்ல சிவனிங்குவரக் கூவுகுயிலே. *(கூவு)*

தேன் சொரியும் சோலையில் வாழ்தெய்வக் குயிலே
தேவாதி தேவன்வரக் கூவுகுயிலே
நான் படும் பாடனைத்தும் நயந்து சொல்லி
நாதனை இங்கு வரக் கூவுகுயிலே. *(கூவு)*

இளமையும் மூப்புமில்லா எம்பிரானை
இங்கே என்னைத் தேடிவரக் கூவுகுயிலே
இளம் பிறை அணிந்த பிரானிங்கேவர
எழிலுடன் பறந்துபோய் கூவுகுயிலே. *(கூவு)*

ஓயாமல் உள்குவார் தம் உள்ளத்தானை
உத்தமனை இங்குவரக் கூவுகுயிலே
வாயாரப் பாடுவார் தம் மனத்தானை
வள்ளலை இங்குவரக் கூவுகுயிலே. *(கூவு)*



## அன்பர்தம் சிந்தையில் உறைவோனே

அன்பர்தம் சிந்தையில் உறைவோனே
அரஹர சிவசிவ மறையோனே

பொன்னே மணியே பூங்கோவே
புலவரெலாம் புகழ் எங்கோவே

காணும் கண்ணில் கலந்தவனே
கதிரொளி போலெங்கும் நிறைந்தவனே

ஆணும் பெண்ணும் ஆனவனே
அடியவர் பேணும் வானவனே

கோணிய பிறையை முடித்தவனே
கொல்புலித் தோலை யுடுத்தவனே

பாற்கடல் தன்னை அழைத்தவனே
பாரொடு விண்ணாய்ப் பரந்தவனே

நூற்பொருள் தன்னை விரித்தவனே
நுண்ணிடையாள் தன் இடத்தவனே

தில்லையில் ஆடிய சிற்பரனே
சிவசிவ சிவசிவ தற்பரனே

எல்லையில்லா வருள் தந்தவனே
என்போல் நல்லையில் வந்தவனே.

## சிவ நாமஞ் சொல்லுவோம்

நாமஞ் சொல்லுவோம் - சிவ
நாமஞ் சொல்லுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரணங்கள்

நாமஞ் சொல்லுவோம் நமனை வெல்லுவோம்
நாமே அவனென்று நடந்து செல்லுவோம். *(நாமம்)*

சோமசுந்தரர் பாதங் காணுவோம்
சும்மா இருக்கின்ற சூட்சம் பேணுவோம். *(நாமம்)*

சினத்தைக் கொல்லுவோம் மனத்தை வெல்லுவோம்
அனைத்தும் அவனென்று அகத்தி லெண்ணுவோம். *(நாமம்)*

கையில் மலர் கொண்டு காலை மாலையும்
செய்யமேனியன் அடியில் வீழுவோம். *(நாமம்)*

என்பு பூண்டவன் என்னை யாண்டவன்
சிவனை வேண்டினால் என்றும் இன்பமே. *(நாமம்)*

சிரித்துமுப்புரம் எரித்த தேவனை
சிந்தை செய்குவோர் தேவராவரே. *(நாமம்)*

கமல நான்முகன் கண்ணன் காண்கிலான்
நமது நாயகம் என்பர் பெரியரே. *(நாமம்)*

வழிகள் இரண்டையும் அடைக்கவல்லவன்
ஒழியா இன்பத்திலுற்று வாழ்வரே *(நாமம்)*

தேனும் பாலினும் இனிய தெய்வத்தை
நானும் நீயுமாய் நாளும் போற்றுவோம். *(நாமம்)*



## தேவாரப் பதிகங்கள்

### திருஅங்கமாலை

*திருச்சிற்றம்பலம்*

தலையே நீ வணங்காய்
தலைமாலை தலைக்கணிந்து
தலையாலேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய். 1

கண்காள் காண்மின்களோ
கடல் நஞ்சுண்ட கண்டன்றனை
எண்டோள் வீசி நின்றாடும் பிரான்தன்னைக்
கண்காள் காண்மின்களோ. 2

செவிகாள் கேண்மின்களோ
சிவன் எம்மிறை செம்பவள,
எரிபோல் மேனிப்பி ரான்திறம்
எப்பொழுதுஞ் செவிகாள் கேண்மின்களோ. 3

மூக்கே நீமுரலாய்
முது காடுறை முக்கணனை,
வாக்கே நோக்கிய மங்கை
மணாளனை மூக்கே நீமுரலாய். 4

வாயே வாழ்த்து கண்டாய்
மதயானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத்தாடும் பிரான்றன்னை
வாயே வாழ்த்து கண்டாய். 5

நெஞ்சே நீ நினையாய்
நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சாடும் மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய். 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகாள் கூப்பித்தொழீர்
கடி மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பரம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித்தொழீர். 7

ஆக்கை யாற்பயனென்
அரன் கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி யென்னாதஇவ்
ஆக்கை யாற்பயனென். 8

கால்க ளாற்பயனென்
கறைக் கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ்
சூழாக் கால்க ளாற்பயனென். 9

உற்றா ராருளரோ - வுயிர்
கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்கு
உற்றா ராருளரோ. 10

இறுமாந் திருப்பன்கொலோ ஈசன்
பலகணத் தெண்ணப் பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக்கீழ்ச் சென்றங்
கிறுமாந் திருப்பன் கொலோ. 11

தேடிக் கண்டுகொண்டேன் திரு
மாலொடு நான்முகனும் தேடித்தே
டொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்.

திருச்சிற்றம்பலம்



# கோளறு திருப்பதிகம்

*(திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் சமணரின் அட்டுழியத்தை அழிக்க வேதாரணியத்திலிருந்து மதுரை மாநகர் செல்ல உச்தேசித்தபோது, அப்பொழுது அவருடன் இருந்த அப்பர் பெருமான் அங்கு செல்ல வேண்டாமென்று தடுத்து, உங்களுக்குத் தற்சமயம் நாளும் கோளும் பகையாக உள்ளது. மேலும் சமணர்கள் கொடியவர்கள், வஞ்சகர்கள் எனக்கூற, அப்பொழுது கோளறு பதிகத்தை ஓதி அப்பரின் பயத்தை நீக்கி மதுரைமாநகர் ஏகினார். நவக்கிரக தோஷங்களிலிருந்து விடுபடவும், நற்காரியங்கள் ஆரம்பிக்கும் போது நாள் கோள் பாதகமாய் இருப்பினும் இப்பதிகத்தை ஓதி ஆரம்பித்தால் நற்பயனை யடையலாம்.)*

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
னுளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றேழு பதினெட் டொடாறு
முடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 3

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுண நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 4

நஞ்சணி கண்டனெந்தை மடவாள்த னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் முருமிடியு மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 5



வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள்த னோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தெ
னுளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 6

செப்பிள முலைநன் மங்கையொரு பாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பு முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 7

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாள்த னோடு முடனாய்
வான்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தெ
னுளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடு
மிடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 9

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணைவாதி லழிவிக்கு மண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொ னெங்கும் நிகழ
நான்முக னாதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளு மடியாரை வந்து
நலியாத வண்ண முரைசெய்
ஆனசொல் மாலையோது மடியார்கள் வானில்
அரசாள்வ ராணை நமதே. 11

*திருச்சிற்றம்பலம்*



# திருக்கோணமலை

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அருளியது

*திருச்சிற்றம்பலம்*

நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைடல் சூழ்ந்து
கொள்ளமு ணித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோணமா மலையமர்ந் தாரே.

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக
மாகமுன் கலந்தவர் மதின்மேல்
தனித்தபே ருருவ விழித்தழல் னாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற் றரளஞ்
செம்பொனும் இப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்அடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வரும் கூற்றைத்
திரிந்திடா வண்ண முதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில் சூழ்
கோணமா மலையமர்ந் தாரே.

எடுத்தவன் தருக்கை யிழித்தவர் விரலா
லேத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பு
மிறப்பறி யாதவர் வேள்வி



தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே.

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரு மறியா வண்ணமொள் ளெரியா
யுயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே.

நின்றுணுஞ் சமணு மிருந்துணுந் தேரு
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசின ரொருபால்
மெல்லிய லொடுமுட னாகித்
துன்றுமொண் பௌவ மௌவலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொன் கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே.

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்து
முரைப்பவர் கேட்பவ ருயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மஹா லிங்காஷ்டகம்

ப்ரஹ்மமுராரி ஸுரார்சித லிங்கம்
நிர்மலபாஸித ஸோபித லிங்கம்
ஜந்மஜதுக்க விநாசக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவமுநிப்ரவ ரார்ச்சித லிங்கம்
காமதஹம் கருணாகர லிங்கம்
ராவணதர்ப்ப விநாசந லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸர்வஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்திவிவர்த்தன காரண லிங்கம்
ஸித்தஸ்ஸுராஸுர வந்தித லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

கநகமஹாமணி பூஷித லிங்கம்
பணிபதிவேஷ்டித ஸோபித லிங்கம்
தக்ஷ ஸுயக்ஞ விநாசன லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

குங்குமசந்தன லேபித லிங்கம்
பங்கஜஹாரஸு ஸோபித லிங்கம்
ஸஞ்சிதபாப விநாசன லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவகணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவைர்பக்திபிர் ஏவச லிங்கம்
திநகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்



அஷ்டதளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்டதரித்ர விநாசக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் 7

ஸுரகுருஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவநபுஷ்ப ஸதார்சித லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் 8

*ஸ்ரீமத் சங்கர பகவத் பாத சுவாமிகள்*

"லிங்காஷ்டகம் இதம் ஸ்தோத்திரம்
ய:.படேத் சிவசந்நிதௌ
சிவலோக மவாப் நோதி
சிவனே ஸஹ மோததே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

*திருச்சிற்றம்பலம்*

**தொல்லை இரும் பிறவிச் சூளும் தளைநீக்கி**
**அல்லல் அறுத்(து) ஆனந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவாசகம் என்னும் தேன்.**

நமச்சிவாய வாஅழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி யாண்ட குருமணி தன் தாள்வாழ்க!
ஆகமமாகி நின்றண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க!

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க!

ஈசனடி போற்றி எந்தை அடி போற்றி!
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி!
மாயப்பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி!
சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி!

ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்



கண் நுதலான்தன் கருணைக் கண் காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திழைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங் கழிய நின்ற மறையோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய் விண்ணோர்கள்ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங் கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்குமூடி
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே



அன்பருக்கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்த றிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றே னெம் ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக் குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளியெழுச்சி

*வைகறையில் இருள்நீங்கி ஒளிஎழுவது போல் ஆன்மாக்களின் கரியமலம் அகல ஞான ஒளி வெளிப்படுகின்ற முறைமையை விளக்கி இறைவனைத் துயில் எழுப்புகின்றார் மணிவாசகர். அதிகாலையில் தினமும் இப்பதிகத்தை ஓதிவர எமது தீவினைகளாகிய இருள் அகன்று இறை ஒளி கிட்டும்.*

*திருச்சிற்றம்பலம்*

போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை உடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே. 1

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகடலே பள்ளி எழுந்தருளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்:
ஓவின தாரகை யொளிஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழற் றாளிணை காட்டாய்!
திருப்பெருந்துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே.
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே. 4

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக்கும் அரியாய்எங்கள் முன்வந்
தேதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே. 5

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவன்அவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே. 7

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தருளாயே. 8

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டார்
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே. 9

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம் அவமேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தருளாயே. 10

*திருச்சிற்றம்பலம்*

## திருவெம்பாவை

*திருவண்ணாமலையிருந்து (அடிஅண்ணாமலை) அருளப்பட்டது. நவசக்திகள் ஒன்றை ஒன்று எழுப்புவதாக அமைந்தது. கன்னிப் பெண்கள் நல்ல கணவரை பெறுவதற்கும் மழை வேண்டியும் பாடப்பட்டது. மார்கழித் திருவெம்பாவைத் தினங்களில் பாடப்படும் பாவை.*

*திருச்சிற்றம்பலம்*

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்கன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய். 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பர்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்பழஅடி யீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோரெம்பாவாய். 6

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற்கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10



மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடிச் செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதார் குழையாடப் பைம்பூ ண் கலனாடக
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கியெழுந் துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்



செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்று
அங்கப் பழஞ்சொற் புதுக்கும்எம் அச்சத்தால்எங்கள்
பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ லலிதா த்ரிசதீ

### ந்யாசம்

அஸ்ய ஸ்ரீ லலிதா த்ரிசதீ ஸ்தோத்ர
மஹா மந்த்ரஸ்ய
பகவான் ஹயக்ரீவ ருஷிஹி
அனுஷ்டுப் சந்தஹ
ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுரஸுந்தரி தேவதா
ஐம் பீஜம்
ஸௌ: சக்திஹி
க்லீம் கீலகம்
ஸ்ரீ லலிதா மஹா த்ரிபுர-ஸுந்தரீ
ப்ரஸாத ஸித்யார்த்தே ஜபே வினியோகஹ
ஐம் அங்குஷ்டாப்யாம் நமஹ
க்லீம்தர்ஜநீப்யாம் - நமஹ
ஸௌ மத்யமாப்யாம் - நமஹ
ஐம் அநாமிகாப்யாம் நமஹ
க்லீம் கனிஷ்டிகாப்யாம் நமஹ
ஸௌ, கர தல கர ப்ருஸ்டாப்யாம் நமஹ
ஐம் ஹ்ருதயாய நமஹ
க்லீம் சிரஸே ஸ்வாஹா
ஸௌ சிகாயை வஷட்
ஐம் கவசாய ஹும்
க்லீம் நேத்ர த்ரயாய வௌஷட்
ஸௌ: அஸ்த்ராய பட்
ஓம் பூர் புவஸ்ஸு வரோமிதி திக் பந்தஹ.



### த்யானம்

அதிமதுர சாபஹஸ்தாம்
அபரிமிதாமோத பாணஸௌபாக்யாம்
அருணாம் அதிசய கருணாம்
அபினவ குலஸுந்தரீம் வந்தே.

### பஞ்ச பூஜா

லம் - ப்ருதிவ்யாத்மிகாயை கந்தம் ஸமர்ப்பயாமி
ஹம் - ஆகாஸாத்மிகாயை புஷ்பை: பூஜயாமி
யம் - வாய்வாத்மிகாயை தூபம் ஆக்ராபயாமி
ரம் - அக்கினியாத்மிகாயை தீபம் தர்ஸயாமி
வம் - அம்ருதாத்மிகாயை
அம்ருதம் மஹா நைவேத்யம் நிவேதயாமி
ஸம் - ஸர்வாத்மிகாயை
ஸர்வோபசார பூஜாம் ஸமர்ப்பயாமி.

### ஸ்ரீ லலிதா த்ரிசதீ
### அபிஷேக மந்திரம்

ககார - ரூபா கல்யாணீ - கல்யாண குண - ஸாலினீ
கல்யாண - சைல - நிலயா கமனீயா கலாவதீ
கமலாக்ஷ கல்மஷக்னீ கருணாம்ருத - ஸாகரா
கதம்ப - காநநாவாஸா கதம்ப - குஸும - ப்ரியா
கந்தர்ப்ப - வித்யா கந்தர்ப்ப - ஜனகாபாங்க - வீக்ஷணா
கர்ப்பூரவீட - ஸௌரப்ய - கல்லோலித - ககுப்தடா
கலிதோஷஹரா கஞ்ஜலோசனா கம்ர - விக்ரஹா
கர்மாதிஸாக்ஷிணீ காரயித்ரீ கர்மபல - ப்ரதா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகார ரூபா ச ஏகாக்ஷரி-ஏகாநேகாக்ஷரா-க்ருதி:
ஏதத்-ததித்-யநிர்தேஸ்யா ச ஏகானந்த சிதாக்ருதி:
ஏவமித்-யாகமாபோத்யா ச ஏகபக்தி-மதர்ச்சிதா
ஏகாக்ர-சித்த-நிர்த்யாதா ச ஏஷணா ரஹிதாத்ருதா
ஏலா-ஸுகந்தி-சிகுரா ச ஏந: கூட-விநாசினீ
ஏக-போகா ச ஏ கரஸா ச ஏகைஸ்வர்ய ப்ரதாயினி
ஏகாதபத்ர-ஸாம்ராஜ்ய-ப்ரதா ச ஏகாந்த-பூஜிதா
ஏதமானப்ரபா ச ஏஜ-தனேஜஜ் - ஜகதீஸ்வரீ
ஏகவீராதி ஸம்ஸேவ்யா ச ஏகப்ராபவ சாலினீ.

ஈகார-ரூபா ச ஈசித்ரீ ச ஈப்ஸிதார்த்த-ப்ரதாயினீ
ஈத்ருகித்-யவிநிர்தேஸ்யா ச ஈஸ்வரத்வ-விதாயினீ
ஈசாநாதி-ப்ரஹ்மமயீ ச ஈசித்வாத்யஷ்ட-சித்திதா
ஈக்ஷித்ரீ ஈக்ஷண ஸ்ருஷ்டாண்ட-கோடி-ஈஸ்வர-வல்லபா
ஈடிதா ச ஈஸ்வரார்த்தாங்க-சரீரா ஈசாதிதேவதா
ஈஸ்வர-ப்ரேரணகரீ ச ஈஸ-தாண்டவ-ஸாக்ஷிணீ
ஈஸ்வரோத்ஸங்க-நிலயா ச ஈதிபாதா-விநாசினீ
ஈஹாவிரஹிதா ச ஈச-சக்திர் ஈஷத்-ஸ்மிதாநநா.

லகார-ரூபா லலிதா லஷ்மீ-வாணீ-நிஷேவிதா
லாகினீ லலனாரூபாலஸத்தாடிம-பாடலா
லலந்திகா லஸத்பாலா லலாட-நயனார்ச்சிதா
லக்ஷணோஜ்வல-திவ்யாங்கீலக்ஷகோட்யண்ட-நாயிகா
லக்ஷயார்த்தா லக்ஷணாகம்யா லப்தகாமா லதாதனு:
லலாமராஜதலிகா லம்பிமுக்தா-லதாஞ்சிதா
லம்போதர-ப்ரஸுர்-லப்யாலஜ்ஜாட்யாலயவர் ஜிதா.



ஹ்ரீங்கார-ரூபா ஹ்ரீங்கார-நிலாய ஹ்ரீம்பத-ப்ரியா
ஹ்ரீங்காரபீஜா ஹ்ரீங்கார மந்த்ரா ஹ்ரீங்கார-லக்ஷணா
ஹ்ரீங்கார-ஜப-ஸுப்ரீதா ஹ்ரீம்-மதீ ஹ்ரீம்-விபூஷணா
ஹ்ரீம்-ஸீலா ஹ்ரீம் பதாராத்யா ஹ்ரீங்கர்ப்பா-ஹ்ரீம்பதாபிதா
ஹ்ரீங்கார-வாஸ்யா ஹ்ரீங்கார பூஜ்யா ஹரீங்கார-பீடிகா
ஹ்ரீங்கார-வேத்யா ஹ்ரீங்கார சிந்த்யா ஹ்ரீம்
ஹ்ரீம் ஸரீரிணி.

ஹகார-ரூபா ஹலத்ருத் பூஜிதா ஹரிணேக்ஷணா
ஹரப்ரியா ஹராராத்யா ஹரி ப்ரஹ்மேந்த்ர-வந்திதா
ஹயாரூடா-ஸேவிதாங்க்ரீ-ஹயமேத-ஸமர்ச்சிதா
ஹர்யக்ஷ-வாஹனா ஹம்ஸ வாஹனா ஹத-தானவா
ஹத்யாதி-பாபஸமனீ ஹரிதஸ்வாதி-ஸேவிதா
ஹஸ்திகும்போத்துங்க-குசா ஹஸ்திக்ருத்தி-ப்ரியாங்கனா
ஹரித்ரா-குங்குமாதிகதா ஹர்யஸ்வாத்-யமரார்ச்சிதா
ஹரிகேஸஸகீ ஹாதிவித்யா ஹாலாமதாலஸா.

ஸகாரரூபா ஸர்வஜ்ஞா ஸர்வேஸீ ஸர்வமங்களா
ஸர்வகர்த்ரீ ஸர்வபர்த்ரீ ஸர்வஹந்த்ரீ ஸநாதநா
ஸர்வாநவத்யா ஸர்வாங்க ஸுந்தரீ ஸ்ர்வஸாக்ஷிணீ
ஸர்வாத்மிகா ஸ்ர்வஸௌக்ய-தாத்ரீ ஸர்வ விமோஹினீ
ஸர்வாதாரா ஸர்வகதா ஸர்வாவகுண-வர்ஜிதா
ஸர்வாருணா ஸர்வமாதா ஸர்வபூஷண-பூஷிதா.

ககாரார்த்தா காலஹந்த்ரீ காமேஸீ காமிதார்த்ததா
காம-ஸஞ்ஜீவினீ கல்யாகடினஸ்தன-மண்டலா
கரபோரு: கலாநாதமுகீ கச-ஜிதாம்புதா
கடாக்ஷஸ்யந்தி-கருணா கபாலி-ப்ராண-நாயிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காருண்ய-விக்ரஹா காந்தா காந்திதூத-ஜபாவலி:
கலாலாபா கம்புகண்டி கரநிர்ஜித-பல்லவா
கல்பவல்லீ ஸமபுஜா கஸ்தூரீ-திலகாஞ்சிதா.

ஹகாரார்த்தா ஹம்ஸகதிர்-ஹாடகா பரணோஜ்வலா
ஹாரஹாரி-குசாபோகா ஹாகினீ ஹல்யவர்ஜிதா
ஹரித்பதி-ஸமாராத்யா ஹடாத்கார-ஹதாஸுரர்
ஹர்ஷ-ப்ரதா ஹவிர்-போக்த்ரீ ஹார்த்த-ஸந்தம-ஸாபஹா
ஹல்லீஸ-லாஸ்ய-ஸந்துஷ்டா ஹம்ஸ-மந்த்ரார்த்த-ரூபிணி
ஹாநோபாதான-நிர்முக்தா ஹர்ஷிணீ ஹரிஸோதரீ
ஹாஹா ஹுஹு-முக-ஸ்துத்யா ஹாநி-வ்ருத்தி விவர்ஜிதா
ஹய்யங்கவீன-ஹ்ருதயா-ஹரிகோபாருணாம்சுகா.

லகாராக்யா லதாபூஜ்யா லயஸ்தித்யுத்பவேஸ்வரீ
லாஸ்ய-தர்ஸ்ஸன-ஸந்துஷ்டா லாபாலாப-விவர்ஜிதா
லங்க்யே தராஜ்ஞா லாவண்ய-ஸாலினீ லகு-ஸித்திதா
லாக்ஷாரஸ-ஸ்வர்ணாபா லக்ஷ்மணாக்ரஜ-பூஜிதா
லப்யேதரா லப்த-பக்தி-ஸுலபா லாங்கலாயுதா
லக்ன-சாமர-ஹஸ்த-ஸ்ரீ சாரதா-ப்ரிவீஜிதா
லஜ்ஜா பத-ஸமாராத்யா லம்படா லகுலேஸ்வரீ
லப்த-மானா லப்தரஸா லப்த-ஸம்பத்-ஸமுன்னதி:

ஹ்ரீங்காரிணீ ஹ்ரிங்காராதிர் ஹ்ரீம்-மத்யா ஹ்ரீம்-சிகாமணி:
ஹரீங்கார-குண்டாக்னி-சிகா ஹ்ரீங்கார-சசி சந்த்ரிகா
ஹ்ரீங்கார-பாஸ்கர-ருசிர் ஹ்ரீங்காரம்போத-ஸஞ்சலா
ஹ்ரீங்கார-கந்தாங்குரிகா ஹ்ரீங்காரைக-பராயணா
ஹ்ரீங்கார-தீர்க்கிகா-ஹம்ஸீ ஹ்ரீங்கரோத்யான-கேகினீ
ஹ்ரீங்காராரண்ய-ஹரிணீ ஹ்ரீங்காராவால வல்லரீ



ஹ்ரீங்கார பஞ்ஜர-சுகீ ஹ்ரீங்காராங்கண-தீபிகா
ஹ்ரீங்கார-சுநதரா-ஸிம்ஹி ஹ்ரீங்காராம்போஜ ப்ருங்கிகா
ஹ்ரீங்கார-ஸுமனோ-மாத்வீ ஹ்ரீங்கார-தரு-மஞ்சரீ.

ஸகாராக்யா ஸமரஸா ஸகலாகம-ஸம்ஸ்துதா
ஸர்வ-வேதாந்த-தாத்பர்ய-பூமி: ஸதஸதாஸ்ரயா
ஸகலா ஸச்சிதானந்தா ஸாத்யா ஸத்கதி-தாயினீ
ஸநகாதி-முனி-த்யேயா ஸதாசிவ-குடும்பினீ
ஸகலா திஷ்டான-ரூபா ஸத்யரூபா ஸமாக்ருதி:
ஸர்வ-ப்ரபஞ்ச-நிர்மாத்ரீ ஸமானாதிக-வர்ஜிதா
ஸர்வோத்துங்கா ஸங்கஹீ நாஸகுணா ஸகலேஷ்டதா.

ககாரிணீ காவ்யலோலா காமேஸ்வர மனோஹரா
காமேஸ்வர-ப்ராணநாடீ காமேஸோத்ஸங்க-வாஸினீ
காமேஸ்வராலிங்கிதாங்கீ காமேஸ்வர-ஸுகப்ரதா
காமேஸ்வர-ப்ரணயிநீ காமேஸ்வர-விலாஸிநீ
காமேஸ்வர-தபஸ்ஸித்தி: காமேஸ்வர-மன: ப்ரியா
காமேஸ்வர ப்ராணநாதா காமேஸ்வர விமோஹினீ
காமேஸ்வர-ப்ரஹ்மவித்யா காமேஸ்வர-க்ருஹேஸ்வரீ
காமேஸ்வராஹ்லாதகரீ காமேஸ்வர-மஹேஸ்வரீ
காமேஸ்வரீ-காமகோடி-நிலயா காங்க்ஷிதார்த்ததா.

லகாரிணீ லப்தரூபா லப்ததீர்-லப்தவாஞ்சிதா
லப்த-பாப-மனோ-தூரா லப்தாஹங்கார துர்க்கமா
லப்த-ஸக்திர்-லப்த-தேஹா லப்தைஸ்வர்ய-ஸமுன்னதி:
லப்த-புத்திர்-லப்த-லீலா லப்த-யௌவன-ஸாலினி
லப்தாதிஸய-ஸர்வாங்க-ஸௌந்தர்யா லப்த விப்ரமா
லப்தராகா லப்தபதிர்-லப்த நானாகம-ஸ்திதி:
லப்த-போகா லப்த-ஸுகா ஸப்த-ஹர்ஷாபி- பூரிதா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹ்ரீங்கார-மூர்த்திர் ஹ்ரீங்கார-ஸௌத-ச்ருங்க-கபோதிகா
ஹ்ரீங்கார-துக்தாப்தி-ஸுதாஹ்ரீங்கார-கமலேந்திரா
ஹ்ரீங்கார-மணி-தீபார்ச்சிர்-ஹ்ரீங்கார-தரு-சாரிகா
ஹ்ரீங்கார-பேடக-மணிர்-ஹ்ரீங்காராதர்ச-பிம்பிதா
ஹ்ரீங்கார கோசாஸிலதா ஹ்ரீங்காராஸ்தான-நர்த்தகீ
ஹ்ரீங்கார-சுக்திகா-முக்தா-மணிர்-ஹ்ரீங்கார போதிதா
ஹ்ரீங்கார-மய-ஸௌவர்ண-ஸ்தம்ப-வித்ரும புத்ரிகா
ஹ்ரீங்கார-வேதோபநிஷத்-ஹ்ரீங்காராத்வர-தக்ஷிணா
ஹ்ரீங்கார-நந்தனாராம-நவ-கல்பக-வல்லரீ
ஹ்ரீங்கார-ஹிமவத்கங்கா ஹ்ரீங்காரார்ணவ-கௌஸ்துபா
ஹ்ரீங்கார-மந்த்ர-ஸர்வஸ்வா ஹ்ரீங்கார-பர-ஸௌக்யதா.

## ஓம்
## சக்தி வணக்கம்

மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய்
ஆதாரம் உன்னையல்லால் யாரெமக்குப் பாரினிலே
ஏதாயினும் வழிநீ சொல்வாய் எமதுயிரே
வேதாவின் தாயே மிகப் பணிந்து வாழ்வோமே.

மன்றின் மணி விளக்கெனலாம் மருவுமுக நகை போற்றி
ஒன்றிய மங்கல நாணின் ஒளிபோற்றி உலகும்பர்
சென்று தொழ அருள் சுரக்கும் சிவகாம சுந்தரிதன்
நின்றதிரு நிலை போற்றி நிலவு திருவடி போற்றி.

செறிதரு முயிர்தொறும் திகழ்ந்து மன்னிய
மறுவரும் அரனிடம் மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் பிறவும் ஆக்கிய
இறைவிதன் மலரடி இறைஞ்சி யேத்துவாம்.



மலையிலே தான் பிறந்தாள் சங்கரனை மாலையிட்டாள்
உலையிலே ஊதி உலகக்கனல் வளர்ப்பாள்
நிலையில் உயர்த்திடுவாள் நேரே அவள்பாதம்
தலையிலே தாங்கி தரணிமிசை வாழ்வோமே.

மூவர்க்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்திற்கும் நாடரிய பேரறிவாய்
தேவர்க்கும் முனிவர்க்கும் சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும் எழிற்பரையை வணங்குவாம்.

பொன்னரசி நாரணனார் தேவி புகழரசி
மின்னும் நவரத்தினம் போல் மேனி அழகுடையாள்
அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றாளே சரண் புகுந்து வாழ்வோமே.

வாணி கலைத் தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணி முத்தைப் போல அறிவுமுத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய் காண்பதெல்லாம் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே.

தாவறு முலகெலாம் தந்த நான்முகத்
தேவுதன் துணைவியாய் செறிந்த பல்லுயிர்
நாவு தோறிருந்திடும் நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசை புனைந்து போற்றுவாம்.

## சரஸ்வதி துதி

பாதாம் புயத்திற்பணிவார் தமக்குப் பல கலையும்
வேதாந்த முத்தியுந் தந்தருள் பாரதி வெள்ளிதழ்ப்பூஞ்
சீதாம் புயத்திலிருப்பளென் சிந்தையுள்ளே
யேதாம் புவியிற் பெறலரிதாவது எனக்கினியே. *(கம்பர்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமியஞ் செய்து காலங்கழியாதே
ஓமியஞ் செய்தங் குள்ளத் துணர்மினோ
சாமியோடு சரஸ்வதியவள்
கோமியும் முறையுங்குட மூக்கிலே.

நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்
தேடிக் கொழிக்குங் கவிவாணர் நாவும் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே! உன் பாதம் அடைக்கலமே.

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப்பணி பூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியாசனத்தி லரசரோ டென்னைச்
சரியாசனம் வைத்த தாய்.

ஆயகலைகளறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாராதிடர்.

படிக நிறமும் பவளச்செவ் வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற்கையுந் - துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தாற்
கல்லுஞ் சொல்லாதோ கவி.

சீராரும் பூங்கமலத் தெள்ளமுதே சேயிழையே
காராரும் மேனிக் கருங்குயிலே-ஆராயும்
வேதமுதல் ஆகிநின்ற மெய்ப்பொருளே மின்னொளியே
ஆதி பராபரையே அம்பிகையே - சோதியே
அண்டரெல்லாம் போற்றும் அரும்பொருளே ஆரணங்கே
எண்திசைக்கும் தாயான ஈச்.'.வரியே - தென்திசையில்
வந்த அமுதே யென்று மாறாமலே நினைப்பார்
சிந்தை தனிலே உறையும் செல்வியே.

*(மீனாட்சியம்மை கலிவெண்பா)*



## ஓம்சக்தி ஓம் ஓம்சக்தி

ஓம்சக்தி ஓம் ஓம்சக்தி ஓம் ஓம்சக்தி ஓம் ஓம்சக்தி ஓம்
ஓம்சக்தி ஓம் ஓம்சக்தி ஓம் ஓம்சக்தி ஓம் ஓம்சக்தி ஓம்.

சுந்தர வதனி சுகுண மனோ கரி
மந்த காச முக மதி வதனி
சந்தண குங்கும அலங்காரமுடனே
தந்திடுவாய் உன்தன் தரிசனமே. *(ஓம்சக்தி)*

நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆனந்தமுடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயன் அயனுடன்
வகையாய் உன்புகழ் பாடிடவே. *(ஓம்சக்தி)*

தங்கச் சிலம்பு சல சல என்றிட
தாண்டவமாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்கும் ஆனந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய். *(ஓம்சக்தி)*

வேதங்கள் உன்னை வேண்டிப்பாடிட
விரும்பி சரஸ்வதி வீணை வாசித்திட
சதானந்தமான ஜோதிஸ்வ ரூபி
ராஜராஜேஸ்வரி சரணம் சரணம். *(ஓம்சக்தி)*

## எங்கள் முத்து மாரியம்மா.

உலகத்து நாயகியே எங்கள் முத்துமாரியம்மா
எங்கள் முத்து மாரியம்மா. *(எங்கள் முத்துமாரி)*

உன்பாதம் சரணடைந்தோம்
எங்கள் முத்து மாரியம்மா. *(எங்கள் முத்துமாரி)*

கலகத்தரக்கர் பலர்
எங்கள் முத்து மாரியம்மா. *(எங்கள் முத்துமாரி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தினுள்ளே புகுந்துவிட்டார்
எங்கள் முத்து மாரியம்மா. *(எங்கள் முத்துமாரி)*

பலகற்றும் பலகேட்டும்
எங்கள் முத்து மாரியம்மா. *(எங்கள் முத்துமாரி*

பயனொன்றும் இல்லையடி
எங்கள் முத்து மாரியம்மா. *(எங்கள் முத்துமாரி*

நிலையெங்கும் காணவில்லை
எங்கள் முத்து மாரியம்மா. *(எங்கள் முத்துமாரி*

நின்பாதம் சரணடைந்தோம்
எங்கள் முத்து மாரியம்மா. *(எங்கள் முத்துமாரி*

## காளி ஸ்தோத்திரம்

யாதுமாகி நின்றாய் - காளீ
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மை யெல்லாம் - நின்றன்
செயல்க ளன்றி யில்லை
போதுமிங்கு மாந்தர் - வாழும்
பொய்மை வாழ்க்கை யெல்லாம்
ஆதி சக்தி தாயே - என்மீ
தருள் புரிந்து காப்பாய். *(யாது*

எந்த நாளும் நின்மேல் - தாயே
இசைகள் பாடி வாழ்வேன்
கந்தனைப் பயந்தாய் - தாயே
கருணை வெள்ள மானாய்
மந்த மாருதத்தில் - வானில்
மலையினுச்சி மீதில்
சிந்தை யெங்கு செல்லும் - அங்குன்
செம்மை தோன்று மன்றே. *(யாது*



## துன்பங்கள் தீர்திடுவாள்

துன்பங்கள் தீர்த்திடுவாள் துயரத்தை மாற்றிடுவாள்
சஞ்சலப் பிணி அகற்றி சாந்தி தந்திடுவாள்
மங்கல வாரத்தில் மகிழ்வுடன் பூஜை செய்தால்
மனமிரங்கி வந்திடுவாள் மங்கலமே தந்திடுவாள்
*(துன்பங்கள்)*

மகிழ்வுடன் அமர்ந்திருந்து மனக்குறையை நீக்கிடுவாள்
மதுரைபதியினிலே ஆட்சி செய்யும் தேவியவள்
மங்கள நாயகி மதுரை மீனாட்சி
மனக்குறையை தீர்த்து அருளும் தேவி மீனாட்சி.
*(துன்பங்கள்)*

வேதனை நீங்கிடவே வேண்டிய வரம் தருவாள்
வேண்டி அவளைப் பாட விரைந்தே வந்திடுவாள்
வேற்காட்டுத் தேவியவள் தேவி கருமாரியம்மா
அஞ்சேல் என்றிடும் ஆதிபராசக்தி
காஞ்சி காமாட்சி மதுரை மீனாட்சி
ஸ்ரீ துர்க்கா அம்மா கருமாரி அம்மா.
*(துன்பங்கள்)*

## தேடியுனைச் சரணடைந்தேன்

தேடியுனைச் சரணடைந்தேன் தேசமுத்துமாரி
கேடதனை நீக்கிடுவாய் கேட்டவரந் தருவாய்.

பாடியுன்னைச் சரணடைந்தேன் பாவமெல்லாம் களைவாய்
கோடி நலஞ் செய்திடுவாய் குறைகளெல்லாம் தீர்ப்பாய்.

எப்பொழுதும் கவலையிலே இணங்கி நிற்பான் பாவி
ஒப்பியுன தேவல் செய்வேன் உனதருளால் வாழ்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியென்று நேரமெல்லாந் தமிழ்க்கவிதை பாடி
பக்தியுடன் போற்றிநின்றால் பயமனைத்தும் தீரும்.

ஆதாரம் சக்தியென்றே அருமறைகள் கூறும்
யாதானும் தொழில் புரிவோம் யாதுமவள் தொழிலாம்

துன்பமே இயற்கையெனும் சொல்லை மறந்திடுவோம்
இன்பமே வேண்டி நிற்போம் யாவு மவள் தருவாய்.

நம்பினார் கெடுவதில்லை நான்குமறை தீர்ப்பு
அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்.

*சுப்ரமணிய பாரதியார்*

## சுத்த சக்தி

சுத்த சக்தி சுத்த சக்தி சுத்த சக்தி ஓம்சிவம்
சுத்த சக்தி சுத்த சக்தி சுத்த சக்தி ஓம்சிவம்

சத்திய ஞான தர்மசக்தி சாந்த சக்தி ஓம்சிவம்
சச்சிதானந் தாத்ம சக்தி சர்வ சக்தி ஓம்சிவம். *(சுத்த)*

வேத சாஸ்த்ர சகலகலா வித்யா சக்தி ஓம்சிவம்
வீரதீர தைர்ய சக்தி விஜய சக்தி ஓம்சிவம். *(சுத்த)*

நாத கீத கானகலா நடனசக்தி ஓம்சிவம்
மஹா மந்திர யந்தர தந்த்ர வச்ய சக்தி ஓம்சிவம். *(சுத்த)*

யோக போக த்யாக சக்தி லோக சக்தி ஓம்சிவம்
தாக மோஹ சோக ரஹித தபோ சக்தி ஓம்சிவம். *(சுத்த)*

துஷ்ட சத்துரு நாச சக்தி துர்க்கா சக்தி ஓம்சிவம்
அஷ்ட லஷ்மி ஞான வாணி அமரசக்தி ஓம்சிவம். *(சுத்த)*

குஞ்சித பத அபயஹஸ்த வாஞ்சித பல தாயகம்
குருபரசிவ ஹரஹர நடராஜ சுத்த சக்தி ஓம்சிவம். *(சுத்த)*



## அபயம் அபயம்

அபயம் அபயம் அம்மா அம்மா
அபயம் அபயம் அம்மா - அம்மா
என்னை ஆண்டு கொண்டருள்வாய்
தாயே லலிதாம்பிகே. *(அபயம்)*

மங்கள ரூபி மஹேஸ்வரி தாயே
சுந்தரி திரிபுர சுந்தரி நீயே
கபாலியின் இனிய கார்த்தியாயினி
சந்தனுடனே அருள் செய்ய வா அம்மா. *(அபயம்)*

ஆறுமுகமுடைய என்னுயிர் நாதர்க்கு
அன்பமு தளித்து மடியில் இருத்தி
தேறுதல் கூறி கேசரி ஏறி
ஜெக ஜோதியுடன் ஓடி நீ வா அம்மா. (அபயம்)

மரஞ் செடி கொடிகள் மானிடர் தேவர்கள்
மரங்களிலும் உயிர் நீ அம்மா
உரம் மிகுந்த கொடும் அசுரரை
அழித்த ஒய்யாரி கெம்பீரி தசாவதாரியே. (அபயம்)

ஆனந்தமான பராசக்தி தாயே
அழகிய கரிமுகன் ஹரன் அரன் ஹரியுடன்
ஞான முனிவர்களும் கான சிரேஷ்ட்டர்களும்
ஜெய ஜெய ஜெய வென கோஷம் செய்யவா அம்மா.
(அபயம்)

## கற்பகமே உனையன்றித் துணை யாரம்மா

கற்பகமே உனையன்றித் துணை யாரம்மா
நீயே கதி எனப் போற்றும்
என்னைக் கண் பாரம்மா அம்மா *(கற்பகமே)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புத மெல்லாம் நிகழ்த்தும் அருள்திறம் உடையவளே
ஆனந்த வாழ்வுதனை அன்பர்க்கு அளிப்பவளே.
*(கற்பகமே)*

அலைகடல் ஓரத்தில் அமைந்த மயிலையிலே
கலை வடிவாய் திகழும் நின் திருக் கோவிலிலே
சிலை வடிவாய் நின்று உலகேழும் காப்பவளே
செம்பவள மேனி வண்ணன் மகிழும் உமையவளே.
*(கற்பகமே)*

## அம்மா அம்மா எம் தாயே

அம்மா அம்மா எம் தாயே
ஆறுதல் தந்தெம்மைக் காப்பாயே
இம்மா நிலத்தில் நீ தானே
எங்கள் துர்க்கை தாய் தானே. *(அம்மா அம்மா)*

இங்கே நாம் படும் வேதனைகள்
எல்லாம் உனக்கு தெரியாதோ
எல்லாம் நீயே அறிந்திருந்தும்
ஏனோ எம்மை வாட்டுகின்றாய். *(அம்மா அம்மா)*

எல்லாப் பிழையும் பொறுத்திடம்மா
தாயே எம்மைக் காத்திடம்மா
பொல்லாப் பெல்லாம் போக்கிடவே
புதுமை ஒன்றைச் செய்திடம்மா. *(அம்மா அம்மா)*

அல்லும் பகலும் அழுகுரல்கள்
எல்லாத் திசையும் வேதனைகள்
பொல்லா வினைகள் சூழ்ந்தெம்மை
புழுவாய் துடிக்க வைக்குதம்மா. *(அம்மா அம்மா)*



சொல்லால் வடிக்க முடியாத
துயரம் எனக்கு ஏனம்மா
எம்மால் தாங்க முடியாது
தாயே எம்மைக் காப்பாற்று *(அம்மா அம்மா)*

ஒன்றா இரண்டா நாம் சொல்ல
உள்ளத்து வேதனை தீராயோ
என்றும் உன்னை நாம் துதித்தும்
ஏனோ எம்மை வாட்டுகின்றாய் *(அம்மா அம்மா)*

நின்றால் நடந்தால் உன் நினைவு
எங்கும் எதிலும் உன் காட்சி
துன்பம் வராமல் காத்தெமக்கு
துணையாய் என்றும் வந்திடம்மா *(அம்மா அம்மா)*

## அம்பிகை புகழை பாடிடுவோம்

கற்பகவல்லியைப் பாடிடுவோம்
கவலைகள் யாவும் நீக்கிடுவோம்
அம்பிகை புகழை பாடிடுவோம்
அன்னையின் அருளை நாடிடுவோம். *(கற்பக)*

சண்பக வல்லியைப் பாடிடுவோம்
சஞ்சலம் யாவையும் நீக்கிடுவோம்
காஞ்சி காமாட்சியைப் பாடிடுவோம்
கர்ம வினைகளை ஓட்டிடுவோம். *(கற்பக)*

மதுரை மீனாட்சியைப் பாடிடுவோம்
மனத்துயர் யாவையும் போக்கிடுவோம்
ஓங்கார ரூபியைப் பாடிடுவோம்
ஒப்பற்ற வாழ்வை அடைந்திடுவோம். *(கற்பக)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம் சரணம் சங்கரியே
அபயம் அபயம் அம்பிகையே
மங்கள ரூபியே நமஸ்காரம்
மகிஷ சம்ஹாரியே நமஸ்காரம். *(கற்பக)*

கருமாரி தேவியே நமஸ்காரம்
காசி விசாலாட்சி நமஸ்காரம்
சமயபுரேஸ்வரி நமஸ்காரம்
அன்ன பூர்ணேஸ்வரி நமஸ்காரம். *(கற்பக)*

அன்னை அபிராமி நமஸ்காரம்
அருள் புவனேஸ்வரி நமஸ்காரம்
அகிலாண்டேஸ்வரி நமஸ்காரம்
ஆதிபராசக்தி நமஸ்காரம். *(கற்பக)*

மரகத வல்லியே நமஸ்காரம்
வைஷ்ணவி தேவியே நமஸ்காரம்
துன்பம் துடைப்பவளே நமஸ்காரம்
துர்க்கா தேவியே நமஸ்காரம். *(கற்பக)*

ஜோதி ஸ்வரூபியே நமஸ்காரம்
சொர்ண ஸ்வரூபியே நமஸ்காரம்
நித்யை ஸ்வரூபியே நமஸ்காரம்
நித்ய மங்கள ஸ்வரூபியே நமஸ்காரம். *(கற்பக)*

## ஓம்சக்தி

ஆனந்த தாண்டவ ருத்ர மஹேஸ்வரி
ஆத்ம சம்ரட்சகி அபிநவ சுந்தரி
ஞான விக்னேஸ்வரி ஆனந்த பைரவி
ஆனந்தேஸ்வரி ராஜ ராஜேஸ்வரி. *(ஓம்சக்தி)*



## சக்தி சக்தி சக்தியென்று சொல்லு

சக்தி சக்தி சக்தியென்று சொல்லு - கெட்ட
சஞ்சலங்கள் யாவினையுங் கொல்லு
சக்தி சக்தி சக்தியென்று சொல்லி - அவள்
சந்நிதியிலே தொழுது நில்லு.

சக்திமிசை பாடல் பல பாடு - ஓம்
சக்தி சக்தி யென்று தாளம் போடு
சக்தி தருஞ் செய்கை நிலந் தனிலே - சிவ
சக்தி வெற்றி கொண்டு களித்தாடு.

சக்தி தனையே சரணங் கொள்ளு - என்றும்
சாவினுக் கோரச்சமில்லை தள்ளு
சக்தி புகழாம் அமுதை அள்ளு - மதி
தன்னிலினிப் பாகுமந்தக் கள்ளு.

சக்தி செய்யும் புதுமைகள் பேசு - நல்ல
சக்தியற்ற பேடிகளை ஏசு
சக்தி திருக் கோயிலுள்ள மாக்கி - அவள்
தந்திடு நற் குங்குமத்தைப் பூசு.

சக்தியினைச் சேர்ந்த திந்தச் செய்கை - இதைச்
சார்ந்து நிற்பதே நமக்கோ ருய்கை
சக்தியெனும் மின்பமுள்ள பொய்கை - அதில்
தண்ணமுத மாகிநித்தம் பெய்கை.

சக்தி சக்தி சக்தி யென்று நாட்டு - சிவ
சக்தியருள் பூமிதனில் காட்டு
சக்தி பெற்ற நல்ல நிலை நிற்பார் - புவிச்
சாதிகளெல்லா மதனைக் கேட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி சக்தி சக்தி யென்று முழங்கு - அவள்
தந்திர மெல்லா முலகில் வழங்கு
சக்தியருள் கூடிவிடுமாயின் - உயிர்
சந்ததமும் வாழுநல்ல கிழங்கு.

சக்தி செய்யுந் தொழில்களை யெண்ணு - நித்தஞ்
சக்தியுள்ள தொழில் பல பண்ணு
சக்திதனை யேயிழந்து விட்டால் - இங்கு
சாவினையும் நோவினையும் உன்னு.

சக்தியரு ளாலுலகிலேறு - ஒரு
சங்கடம் வந்தா லிரண்டு கூறு
சக்தி சில சோதனைகள் செய்தால் - அவள்
தண்ணரு ளென்றே மனது தேறு.

சக்தி துணையென்று நம்பி வாழ்த்து - சிவ
சக்தி தனையே யகத்தி லாழ்த்து
சக்தியுஞ் சிறப்புமிகப் பெறுவாய் - சிவ
சக்தியருள் வாழ்க வென்று வாழ்த்து

*(பாரதி)*

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புரந்தகி த்ரியம்பகி யெழிற்
புங்கவி விளங்குசிவ சங்கரி சகஸ்ரதள
புஷ்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனாதீத நாயகி குணாதீத
நாதாந்த சக்தி யென்றுன்
நாமமே உச்சரித் திடுமடியர் நாமமே
நானுச் சரிக்கவசமோ.



ஆரணிசடைக் கடவுள் ஆரணியெனப்புகழ
அகிலாண்ட கோடியீன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூபமயிலே
வாரணியு மிரு கொங்கை மாதர் மகிழ்கங்கை புகழ்
வளமருவு தேவையரசே
வரை ராசனுக்கிருகண் மணியா யுதித்த மலை
வளர்காதலிப் பெணுமையே.

## ஓம்சக்தி ஓம்சக்தி ஓம் பராசக்தி

ஓம்சக்தி ஓம்சக்தி ஓம் பராசக்தி
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்.

செல்வத் திருமகளை திடங்கொண்டு
சிந்தனை செய்திடுவோம்
செல்வமெல்லாம் தருவாள் நமதொளி
திக்கனைத்தும் பரவும். *(ஓம்சக்தி)*

தாமரைப் பூவினிலே சுருதியைத்
தனியிருந் துரைப்பாள்
பூமணித் தாளினையே கண்ணிலொற்றிப்
புண்ணிய மெய்திடுவோம் *(ஓம்சக்தி)*

## உன்னை நம்பி வந்தோம்

உன்னை நம்பி வந்தோம் எங்கள் முத்துமாரி
ஓம்... அன்னை பராசக்தி

அம்பா பரமேஸ்வரி அகிலாண்டேஸ்வரி
ஆதி பராசக்தி பாளயமாம் - அம்மா.

*(உன்னை நம்பி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீணாவேணு விமல சரஸ்வதி
வேதாந்த ரூபிணி பாளயமாம் - அம்மா.

*(உன்னை நம்பி)*

## அருள் தரும் லக்ஷ்மியே

அருள் தரும் லக்ஷ்மியே - அம்மா
அருளின் அதிசயமே
அலைகடல் துயில்பவளே - அம்மா
அணைத்தெம்மைக் காத்திடுவாய். *(அருள்)*

சரணம் என்று உனைப் பணிந்தால் - எமக்கு
சகல செல்வம் கிடைத்திடுமே
சர்வலோக தேவி நீயே - எங்கும்
சஞ்சாரம் செய்திடம்மா. *(அருள்)*

தனம் தரும் தாய் நீயே - அம்மா
தரணியில் வந்திடுவாய்
குறைகளைக் களைந்திடுவாய்
குறை இன்றி அருள் வாய். *(அருள்)*

## அருள் தரும் தாயே

அருள் தரும் தாயே வாவா - அருள்
தேடி அலைகின்ற பாவியைப் பார் பார். *(அம்மா)*

கருப்பையில் பிள்ளையாய் ஆனால் - நீ
வெறுப்பையா காட்டுவாய் தாயே. *(அம்மா)*

ஆதிபராசக்தி நீயே அகிலாண்டேஸ்வரி நீயே
கரு உருவான காளியும் நீயே. *(அம்மா)*



அனைத்தையும் அணைத்திடும் தாயே
அழும் குழந்தையை அணைப்பதில் தாமதம் ஏன். *(அம்மா)*

## அம்மா தாயே

அம்மா தாயே ஈஸ்வரியே
ஆறுதல் தாராய் மகேஸ்வரியே.

எத்தனை துன்பங்கள் நான் அடைந்தேன்
அத்தனையும் தாயே நீ அறிவாய். *(அம்மா)*

அன்பும் அறிவும் நீ அளித்தாய் - அதை
அறியாமல் அன்று நான் அழிந்தேன்
இப்பவே நான் உன்னை அறிந்துவிட்டேன்
அற்புதம் காட்டி அணைத்திடுவாய். *(அம்மா)*

அலைபாயும் எனதுள்ளம் அடக்கி விட்டேன்
அன்புதான் ஓர்வழி அறிந்துவிட்டேன்
ஆத்திரம் அகங்காரம் மறந்துவிட்டேன்
அனைத்தையும் அணைத்திடப் பழகி விட்டேன். *(அம்மா)*

அகிலத்தில் எல்லாமே துன்பமயம் என்னை
உன்னுடன் அணைப்பது இன்பமயம் - அந்த
பேரின்பம் தருவது உன் கடமை உன்னை
எப்பவும் பாடுதல் என் உடைமை. *(அம்மா)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரஸ்வதி சிந்தனை
### (பள்ளிப் பிள்ளைகளுக்கு)

புத்தகத்துள் ளுறைமாதே
பூவிலமர்ந் துறைவாழ்வே
வித்தகப் பெண் பிள்ளை நங்காய்
வேதப் பொருளுக்கிறைவி. 1

முத்தின்குடை யுடையாளே
மூவுலகுந் தொழுந்தேவி
செப்பு கவித்தன முலையாய்
செவ்வரியோடிய கண்ணாய் 2

முத்துநிறைந்த வெண்பல்லாய்
முருக்கம் பூ மேனி நிறத்தாளே
தக்கோலந்தின்ற துவர்வாயாய்
சரஸ்வதியென்னுந் திருவே. 3

எக்காலும் முன்னைத் தொழுவோம்
எழுத்தறி புத்திபண்ணி வைப்பாய்
ஆக்காயெம் பெருமாட்டி
அழகிய பூவணை மீதாய் 4

நோக்காயென் மிடிதீர
நொடிக்கும் பிராமணத்தி நோக்காயோ
சாலு நெல்லரிசி கொண்டு
சரஸ்வதி பூசை பண்ணிப் 5

பாலொடு பழத்தை நிரப்பிப்
பரவித் தொழுவோம் நங்காய்
நங்காய் நங்காய் நமஸ்து
ஞானக் கொழுந்தே நமஸ்து. 6



கல்விக்கரசே நமஸ்து
கணக்கறி தேவி நமஸ்து
சொல்லும் பொருளே நமஸ்து
சூட்சும ரூபி நமஸ்து. 7

### ஸ்ரீ மஹாலக்ஷ்மி அஷ்டகம்

1. நமஸ்தேஸ்து மஹாமாயே ஸ்ரீபீடே ஸுரபூஜிதே
சங்குசக்ர கதாஹஸ்தே மஹாலக்ஷ்மி நமோஸ்துதே.

2. நமஸ்தே கருடாரூடே கோலாஸுர பயங்கரீ
ஸர்வபாப ஹரேதேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே.

3. ஸர்வக்ஞே ஸர்வவரதே ஸர்வ துஷ்ட பயங்கரீ
ஸர்வதுக்க ஹரேதேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே.

4. ஸித்திபுத்தி ப்ரதேதேவி புக்திமுக்தி ப்ரதாயினி
மந்த்ரமூர்த்தே ஸதாதேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே.

5. ஆத்யந்த ரஹீதே தேவி ஆதிசக்தி மஹேஸ்வரி
யோகஜேயோக ஸம்பூதே மஹாலக்ஷ்மி நமோஸ்துதே.

6. ஸ்தூலஸூக்ஷ்ம மஹாரௌத்ரே மஹாஸக்தி மஹோதரே
மஹாபாப ஹரேதேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே.

7. பத்மாஸன ஸ்திதேதேவி பரப்ரஹ்ம ஸ்வரூபிணி
பரமேஸி ஜகன்மாதா மஹாலக்ஷ்மி நமோஸ்துதே.

8. ஸ்வேதாம்பர தரே தேவி நானாலங்கார பூஷிதே
ஜகத்ஸ்திதே ஜகன்மாதா மஹாலக்ஷ்மி நமோஸ்துதே.

9. மஹாலக்ஷ்மி அஷ்டகம் ஸ்தோத்ரம் யரிபடேத் பக்திமான் நரஹ
ஸ்ர்வஸித்தி மவாப்னோதி ராஜ்யம் ப்ராப்னோதி ஸர்வதா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கௌரிக் காப்பு

## விநாயகர் துதி

**முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு**
**என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்**
**சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்**
**எக்குற்றமும் வாராமற் கா.**

### வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிப்போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்



அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழி வழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிவிடு
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நாம் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பலவகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினை காக்கும் காப்பவளே
என் தாயே வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்திழையே தாயாரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து அணிவோர்க்குத் தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்பினைக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் கொழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபத்தொரு நாள்வரையில் இசையும் விரதமொடு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
இச்சகத்தி லுள்ளோர் எல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவிட
ஞானம் கிளர்ந்து வர நல்லருளைச் செய்திடுவாய்
தெவிட்டாத தீங்கனியே தேவி பராசக்தியம்மா
காளியாய் வந்தமர்ந்த கௌரியம்மா காப்பருள்வாய்.

*திருச்சிற்றம்பலம்*



## சகல கலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே! 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே! 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே! 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே! 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு ·மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே! 5

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே! 6

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்



தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே! 7

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே! 8

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே! 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே! 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துக்க நிவாரண அஷ்டகம்

மங்கள ரூபிணி மதி யணி சூலினி
மன்மத பாணியளே!
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும்
சங்கரி சௌந்தரியே!
கங்கண பாணியன் கனிமுகம் கண்டநல்
கற்பகக் காமினியே!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி!
துக்க நிவாரணி காமாக்ஷி! 1

கானுறு மலர் எனக் கதிர் ஒளி காட்டிக்
காத்திட வந்திடுவாள்!
தானுறு தவஒளி தார்ஒளி மதிஒளி
தாங்கியே வீசிடுவாள்!
மானுறு விழியாள் மாதவர் மொழியாள்
மாலைகள் சூடிடுவாள்
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி!
துக்க நிவாரணி காமாக்ஷி! 2

சங்கரி! சௌந்தரி! சதுர்முகன் போற்றிடச்
சபையினில் வந்தவளே!
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப்
பொருந்திட வந்தவளே!
எம் குலம் தழைத்திட எழில் வடிவுடனே
எழுந்தநல் துர்க்கையளே!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி!
துக்க நிவாரணி காமாக்ஷி! 3

தணதண தந்தண தவில்ஒலி முழங்கிடத்
தண்மணி நீ வருவாய்!
கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய்!
பணபண பம்பண பறைஒலி கூவிடப்
பண்மணி நீ வருவாய்!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி!
துக்க நிவாரணி காமாக்ஷி! 4

பஞ்சமி! பைரவி! பர்வத புத்திரி
பஞ்சநல் பாணியளே!
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேலனைக்
கொடுத்த நல் குமரியளே!
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்தநற்
சக்தியெ னும்மாயே!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி!
துக்க நிவாரணி காமாக்ஷி! 5

எண்ணியபடி நீ அருளிட வருவாய்
எங்குல தேவியளே!
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப்
பல்கிட அருளிடுவாய்
கண்ணொளி அதனால் கருணையே காட்டிக்
கவலைகள் தீர்ப்பவளே!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி!
துக்க நிவாரணி காமாக்ஷி! 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர் தரு தொல்லை இனிமேல் இல்லை
என்று நீ சொல்லிடுவாய்
சுடர்தரு அமுதே! சுருதிகள் கூறிச்
சுகமது தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து
பழவினை ஓட்டிடுவாய்
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி!
துக்க நிவாரணி காமாக்ஷி! 7

ஜெய ஜெய பாலா! சாமுண்டேஸ்வரி!
ஜெய ஜெய ஸ்ரீதேவி!
ஜெய ஜெய துர்க்கா! ஸ்ரீபரமேஸ்வரி!
ஜெய ஜெய ஸ்ரீதேவி!
ஜெய ஜெய ஜெயந்தி! மங்கள காளி!
ஜெய ஜெய ஸ்ரீதேவி!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி!
துக்க நிவாரணி காமாக்ஷி! 8



## ராகு கால துர்க்கா அஷ்டகம்

வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்குமானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தவள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

உலகை யீன்றவள் துர்க்கா உமையுமானவள்
உண்மையானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்யை யானவள்
நிலவி நின்றவள் என்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

செம்மையானவள் துர்க்கா ஜபமுமானவள்
அம்மையானவள் அன்புத் தந்தையானவள்
இம்மையானவள் துர்க்கா இன்பமானவள்
மும்மையானவள் என்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

உயிருமானவள் துர்க்கா உடலுமானவள்
உலகமானவள் எந்தன் உடமையானவள்
பயிருமானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பமற்றவள் துர்க்கா துரிய வாழ்பவள்
துறையுமானவள் இன்பத் தோணி யானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபயவீடவள்
நன்மை தாங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

குருவுமானவள் துர்க்கா குழந்தை யானவள்
குலமுமானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவுமானவள் துர்க்கா திரிசூலியானவள்
திருநீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

ராகு தேவனின் பெரும்பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடிவருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயே வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

கன்னி துர்க்கையே இதய கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீரக் கனக துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.



## ரோக நிவாரண அஷ்டகம்

பகவதி தேவி பர்வத தேவி
பலமிகு தேவி துர்க்கையளே
ஜெகமது யாவும் ஜெய ஜெய வெனவே
சங்கரி உன்னைப் பாடிடுமே
ஹற ஹற தகதக பசபச வெனவே
தளிர்த்திடு ஜோதி ஆனவளே
ரோக நிவாரணி சோக நிவாரணி
தாப நிவாரணி ஜெயதுர்க்கா.

தண்டினி தேவி தக்ஷிணி தேவி
கட்கினி தேவி துர்க்கையளே
தந்தன தான தனதன தான
தாண்டவ நடன ஈச்வரியே
முண்டினி தேவி முனையொளி சூலி
முனிவர்கள் தேவி மணித்தேவி
ரோக நிவாரணி சோக நிவாரணி
தாப நிவாரணி ஜெய துர்க்கா.

காளினி நீயே காமினி நீயே
கார்த்திகை நீயே துர்க்கையளே
நீலினி நீயே நீதினி நீயே
நீர்நிதி நீயே நீர் ஒளியே
மாலினி நீயே மாதினி நீயே
மாதவி நீயே மான்விழியே
ரோக நிவாரணி சோக நிவாரணி
தாப நிவாரணி ஜெய துர்க்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரணி மாயே நான்முகன் தாயே
நாகினியாயே துர்க்கையளே
ஊரணி மாயே ஊற்று தாயே
ஊர்த்துவயாயே ஊர் ஒளியே
காரணி மாயே காருணி தாயே
கானகயாயே காசினியே
ரோக நிவாரணி சோக நிவாரணி
தாப நிவாரணி ஜெய துர்க்கா.

திருமகள் ஆனாய் கலைமகளானாய்
மலைமகளானாய் துர்க்கையளே
பெருநிதியானாய் பேரறிவானாய்
பெருவலி வானாய் பெண்மையளே
நறுமலரானாய் நல்லவளானாய்
நந்தினியானாய் நங்கையளே
ரோக நிவாரணி சோக நிவாரணி
தாப நிவாரணி ஜெய துர்க்கா.

வேதமும் நீயே வேதியள் நீயே
வேகமும் நீயே துர்க்கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே
நாணமும் நீயே நாயகியே
மாதமும் நீயே மாதவம் நீயே
மானமும் நீயே மாயவளே
ரோக நிவாரணி சோக நிவாரணி
தாப நிவாரணி ஜெயதுர்க்கா.



கோவுரை ஜோதி கோமள ஜோதி
கோமதி ஜோதி துர்க்கையளே
நாவுறை ஜோதி நாற்றிசை ஜோதி
நாட்டிய ஜோதி நாச்சியளே
பூவுறை ஜோதி பூரண ஜோதி
பூதநற் ஜோதி பூரணையே
ரோக நிவாரணி சோக நிவாரணி
தாப நிவாரணி ஜெயதுர்க்கா.

ஜெய ஜெய சைலபுத்திரி ப்ர்ஹ்ம
சாரிணி சந்த்ர கண்டினியே
ஜெய ஜெய கூஷ் மாண்டினி ஸ்கந்த
மாதினி காத்யா யன்யளே
ஜெய ஜெய கால ராத்திரி கௌரி
ஸித்திதா ஸ்ரீநவ துர்க்கையளே
ரோக நிவாரணி சோக நிவாரணி
தாப நிவாரணி ஜெயதுர்க்கா.

## ஸ்ரீ கருமாரியம்மன் ஸ்தோத்திரம்

கற்பூர நாயகியே கனக வல்லி
காளி மகமாயி கருமாரி அம்மா
பொற்கோவில் கொண்ட சிவகாமி அம்மா
பூவிருந்தவல்லி தெய்வ யானை அம்மா
விற்கோல வேதவல்லி விசாலாட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
பொற்கோவில் நான் அமைத்தேன் இங்கு தாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே. *(கற்பூர)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவன முழு தாளுகின்ற புவனேஸ்வரி
புரம் எரித்தோன் புறம் இருக்கும் பரமேஸ்வரி
நவ நவமாய் வடிவாகும் மகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே ஸர்வேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
கார் இருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமை சிறியேனை நீ ஆதரி.
*(கற்பூர)*

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறவிடத்தில் முறையிடுவேன் தாயே எந்தன்
அன்னையவள் நீ இருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவா அம்மா
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா
சின்னவனின் குரல் கேட்டு உன் முகம் திருப்பு
சிரித்தபடி என்னைத் தினம் வழி அனுப்பு.
*(கற்பூர)*

கண்ணிரண்டும் உன் உருவே காணவேண்டும்
கால் இரண்டும் உன் அடியே நாடவேண்டும்
பண் அமைக்கும் நா உனையே பாடவேண்டும்
பக்தியோடு கைஉனையே கூடவேண்டும்
எண்ணம் எல்லாம் உன் நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடையது ஆகவேண்டும்
மண் அளக்கும் சமயபுர மாரியம்மா
மகனுடைய குறைகளையும் தீரும அம்மா
*(கற்பூர)*



நெற்றியினுள் குங்குமமே நிறைய வேண்டும்
நெஞ்சில் உன் திருநாமம் வழிய வேண்டும்
கற்றதெல்லாம் மேன்மேலும் பெருக வேண்டும்
கவிதையிலே உன் நாமம் வாழ வேண்டும்
சுற்றம் எல்லாம் நீடுழி வாழ வேண்டும்
ஜோதியிலே நீ இருந்து ஆளவேண்டும்
மற்றதெல்லாம் நான் உனக்குச் சொல்லலாமா!
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா!
*(கற்பூர)*

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ?
அருள் செய்ய இந்நேரம் ஆவதுண்டோ?
கண்ணுக்கு இமை இன்றிக் காவல் உண்டோ?
கன்றுக்குப் பசுவன்றிச் சொந்தம் உண்டோ?
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ?
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ?
எண்ணெய்க்கும் விளக்குக்கும் பேதமுண்டோ?
என்றைக்கும் நான் உன்றன் பிள்ளையன்றோ?
*(கற்பூர)*

அன்புக்கே நான் அடிமை ஆக வேண்டும்
அறிவுக்கே என்காது கேட்க வேண்டும்
வம்புக்கே போகாமல் இருக்க வேண்டும்
வஞ்சத்தை என்நெஞ்சம் அறுக்க வேண்டும்
பண்புக்கே உயிர்வாழ ஆசை வேண்டும்
பரிவுக்கே நான் என்றும் பணிய வேண்டும்
என்பக்கம் இவை எல்லாம் இருக்க வேண்டும்
என்னோடு நீ என்றும் வாழ வேண்டும்.
*(கற்பூர)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பிடவோ கை இரண்டும் போதவில்லை
கூப்பிடவோ நா ஒன்றால் முடியவில்லை
நம்பிடவோ மெய் அதனில் சக்தி இல்லை
நடந்திடவோ கால் இரண்டால் ஆகவில்லை
செம்பவள வாய் அழகி உன் எழிலோ
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை
அம்பளவு விழியாளே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவும் இல்லை.
*(கற்பூர*

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்
கருவாகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்
நிலமாகிப் பயிராகி உணவாகினாய்
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாள் இல்லை தாயே உன்னை
பொருளோடும் புகழோடும் வைப்பாய் என்னை.
*(கற்பூர)*

**காட்சி தந்து என்னை**

காட்சி தந்து என்னை ஆட்சிசெய்வாய் அம்மா
கல்யாணியே கற்பகமே அற்புத *(காட்சி)*

மாட்சி எல்லாம் வாழ்வில் சேர்ந்திட கனிவுடன்
மன்றிலே நின்றாடும் அம்பல வாணருடன் *(காட்சி)*

அங்கம் ஒரு பாகமாய் அமைந்த என் தாயே
ஆனந்த மாமலையின் தேமதுரக்கனியே
மங்கலக் குங்குமத்தில் மகிழ்ந்திடும் அம்மையே
மரகதமயில் உருவாம் தேவியே! தவத்திரு *(காட்சி)*



உ
சிவமயம்

# அபிராமி அந்தாதி

**காப்பு**

தாரமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்தும்தில்லை
ஊரர்தம் பாகத்து உமைமைந்த னே!உலகு ஏழும்பெற்ற
சீரபி ராமிஅந் தாதிஎப் போதும் என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.

**நூல்**

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே.
1

துணையும் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமும்கையில்
அணையும் திரிபுர சுந்தரி யாவது அறிந்தனமே.
2

அறிந்தேன் எவரும் அறியா மறையை, அறிந்துகொண்டு
செறிந்தேன், உனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேன் நின்அன்பர் பெருமைஎண் ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும்நர குக்குற வாய மனிதரையே.
3

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயும் என் புந்திஎந் நாளும் பொருந்துகவே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்திய முப்புரை, செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி! வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை! அம்புயமேல்
திருந்திய சுந்தரி, அந்தரி பாதம்என் சென்னியதே.

5

சென்னியது உன்பொற் திருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே!
முன்னிய நின்அடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னியது, என்றும்உன் றன்பர மாகம பத்ததியே.

6

ததியுறு மத்திற் சுழலும்என் ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண் டாய்கம லாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கிஎன்றும்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே!.

7

சுந்தரி எந்தை துணைவிஎன் பாசத் தொடரைஎல்லாம்
வந்தரி, சிந்துர வண்ணத்தி னாள்மகி டன்தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை, ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாள்மலர்த் தாள்என் கருத்தனவே.

8

கருத்தன எந்தைதன், கண்ணன, வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன, பால்அழும் பிள்ளைக்கு நல்கின, பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும்அம்பும்
முருத்தன மூரலும், நீயும்! அம் மேவந்தென் முன்நிற்கவே.

9

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுஉன்னை
என்றும் வணங்குவது உன்மலர்த் தாள்எழு தாமறையின்
ஒன்றும் அரும்பொருளே!அருளே!உமையே!இமயத்து
அன்றும் பிறந்தவ ளே!அழி யாமுத்தி ஆனந்தமே!.

10

ஆனந்த மாய்!என் அறிவாய்! நிறைந்த அமுதமுமாய்
வானந்த மான வடிவுஉடை யாள்மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணார விந்தம் தவளநிறக்
கானந்தம் ஆடரங்காம் எம்பி ரான்முடிக் கண்ணியதே.

11

கண்ணியது உன்புகழ் கற்பதுஉன் நாமம் கசிந்துபத்தி
பண்ணியது உன்இரு பாதாம் புயத்தில் பகல்இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான்முன்செய்த
புண்ணியம் ஏது என்அம்மே! புவி ஏழையும் பூத்தவளே!.

12

பூத்தவளே புவ னம்பதி னான்கையும், பூத்தவண்ணம்
காத்தவளே! பின் கரந்தவ ளே!கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே!
மாத்தவளே! உன்னை அன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே?.

13

வந்திப் பவர்உன்னை, வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப்பவர், நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவர்அழி யாப்பர மானந்தர் பாரில் உன்னைச்
சந்திப் பவர்க்குஎளி தாம்எம் பிராட்டிநின் தண்ணளியே.

14

தண்ணளிக் கென்றுமுன்னேபல கோடி தவங்கள்செய்வார்
மண்ணளிக் கும்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் கும்செல் வமும்அழி யாமுத்தி வீடுமன்றோ?
பண்ணளிக் கும்சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே.

15





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளியே! கிளைஞர் மனத்தே கிளர்ந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே! ஒளிரும் ஒளிக்கிட மேஎண்ணில் ஒன்றுமில்லா
வெளியே! வெளிமுதல் பூதங்க ளாகி விரிந்தஅம்மே!
அளியேன் அறிவள விற்குஅள வானது அதிசயமே.
16

அதிசய மான வடிவுஉடை யாள்!அர விந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தர வல்லி! துணைஇரதி
பதிசய மானது அபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே.
17

வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன்என் மேல்வரும் போது வெளிநிற்கவே.
18

வெளிநின்ற நின்திரு மேனியைப் பார்த்தென் விழியும்நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்ற தென்ன திருவுளமோ!
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே!.
19

உறைகின்ற நின்திருக் கோயில்நின் கேள்வர் ஒருபக்கமோ?
அறைகின்ற நான்மறை யின்அடி யோமுடி யோஅமுதம்
நிறைகின்ற வெண்திங்க ளோகஞ்ச மோஎன்றன் நெஞ்சகமோ?
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே.
20

மங்கலை செங்கல சம்முலை யாள்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாள்உடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே.
21



கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மால்இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றஅம்மே!
அடியேன் இறந்து இங்கு இனிப்பிற வாமல்வந்து ஆண்டுகொள்ளே!.
22

கொள்ளேன் மனத்தில்நின் கோலம்அல் லாதுஅன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசம யம்விரும் பேன் வியன் மூவுலகுக்கு
உள்ளே அனைத்தினுக் கும்புறம் பேஉள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்கும் களியே அளியஎன் கண்மணியே. 23

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழ கேஅணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே!.
24

பின்னே திரிந்துஉன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண் டேன்முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனிஉன்னை யான்மற வாமல்நின்று ஏத்துவனே!.
25

ஏத்தும் அடியவர் ஈரே ழுலகினை யும்படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவ ராம்கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல்அணங் கேமணம் நாறும்நின் தாள்இணைக்(கு) என்
நாத்தங்கு புன்மொழி ஏறிய வாறு நகையுடைத்தே.
26

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும்அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணிஎனக்கே
அடைத்தனை நெஞ்சத்து அழுக்கைஎல் லாம்நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே.
27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும்அவர்க் கேஅழி யாஅரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே.
28

சித்தியும் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சக்தியும் சக்தி தழைக்கும் சிவமும் தவம்முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே.
29

அன்றே தடுத்துஎன்னை ஆண்டுகொண் டாய்கொண்டது அல்லவென்கை
நன்றே உனக்கினி நான்என் செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற் றுகைநின் திருவுளமே
ஒன்றே பலஉரு வேஅரு வேஎன் உமையவளே!.
30

உமையும் உமையொரு பாகரும் ஏக உருவில்வந்திங்கு
எமையும் தமக்கன்பு செய்யவைத் தார்இனி எண்ணுதற்குச்
சமையங் களுமில்லை ஈன்றெடுப் பாள்ஒரு தாயும்இல்லை
அமையும் அமையுறு தோழியர் மேல்வைத்த ஆசையுமே.
31

ஆசைக் கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லல் படஇருந் தேனைநின் பாதம்என்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லு வேன்ஈசர் பாகத்து நேரிழையே.
32

இழைக்கும் வினைவழி யேஅடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்து அஞ்சல்என் பாய்அத்தர் சித்தம்எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழுதுஉன்னை யேஅன்னை யேஎன்பன் ஓடிவந்தே.
33



வந்தே சரணம் புகும்அடி யாருக்கு வான்உலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும்பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே.
34

திங்கட் பசுவின் மணம்நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்கு ஒருதவம் எய்திய வாஎண் ணிறந்தவிண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே.
35

பொருளே பொருள்முடிக் கும்போக மேஅரும் போகம்செய்யும்
மருளே மருளில் வருந்தெரு ளேஎன் மனத்துவஞ்சத்து
இருளேதும் இன்றி ஒளிவெளி யாகி யிருக்கும்உன்றன்
அருளேது அறிகின்றி லேன்அம்பு யாதனத்து அம்பிகையே.
36

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும்பட்டும் எட்டுத்
திக்கே அணியுந் திருவுடை யான்இடம் சேர்பவளே.
37

பவளக் கொடியில் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணை யாஎங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின்கண் டீர்அம ராவதி ஆளுகைக்கே.
38

ஆளுகைக்கு உன்றன் அடித்தா மரைகள் உண்டு அந்தகன்பால்
மீளுகைக்கு உன்றன் விழியின் கடையுண்டு மேல்இவற்றின்
மூளுகைக்கு என்குறை நின்குறை யேஅன்று முப்புரங்கள்
மாளுகைக்கு அம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாணுதலே.
39



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணம்அன் றோமுன்செய் புண்ணியமே.

40

புண்ணியம் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும் கூடிநம் காரணத்தால்
நண்ணிஇங் கேவந்து தம்மடி யார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேல்பத்ம பாதம் பதித்திடவே.

41

இடங்கொண்டு விம்மி இணைகொண்டு இறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்டு இறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப் பரிபுரையே.

42

பரிபுரச் சீறடி பாசாங் குசைபஞ்ச பாணிஇன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர்செம் பாகத்து இருந்தவளே.

43

தவளே இவள்எங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்
அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியும்ஆம்
துவளேன் இனியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டுசெய்தே.

44

தொண்டுசெய் யாதுநின் பாதம் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தார்உள ரோஇல ரோஅப் பரிசடியேன்
கண்டுசெய் தால்அது கைதவ மோஅன்றிச் செய்தவமோ
மீண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்றே.

45



வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன் றேபுது நஞ்சைஉண்டு
கறுக்கும் திருமிடற் றான்இடப் பாகம் கலந்தபொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான்உன்னை வாழ்த்துவனே.

46

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும்எட் டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

47

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில்ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சில்
இடரும் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே.

48

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுக்கும்அப் போது வளைக்கைஅமைத்(து)
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்(து) அஞ்சல்என்பாய்
நரம்பை அடுத்த இசைவடி வாய்நின்ற நாயகியே.

49

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கிஎன்
றாயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே.

50

அரணம் பொருள்என்று அருள்ஒன் றிலாத அசுரர்தங்கள்
முரண்அன்று அழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும்எய் தார்இந்த வையகத்தே.

51



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையம் துரகம் மதகரி மாமகு டம்சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமலை யாள்அடித் தாமரைக்கு அன்புமுன்பு
செய்யும் தவம்உடை யார்க்குள வாகிய சின்னங்களே.
52

சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையும்முத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலும் தவமில்லையே.
53

இல்லாமை சொல்லி ஒருவர்தம் பால்சென்(று) இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி ரேல்நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால்ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.
54

மின்னா யிரம்ஒரு மெய்வடி வாகி விளங்குகின்ற
தன்னாள் அகமகிழ் ஆனந்த வல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
உன்னாது ஒழியினும் உன்னினும் வேண்டுவது ஒன்றிலையே.
55

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்துஇவ் வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கிநிற் பாள்என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாஇப் பொருள்அறிவார்
அன்றா லிலையில் துயின்றபெம் மானும்என் ஐயனுமே.
56

ஐயன் அளந்த படியிரு நாழிகொண்டு அண்டம்எல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யுங்கொண்டு சென்றுபொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாய்இது வோஉன்றன் மெய்யருளே.
57



அருணாம் புயத்தும்என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல்நல் லாள்தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்
சரணாம் புயமும்அல் லாற்கண்டி லேன்ஒரு தஞ்சமுமே.
58

தஞ்சம் பிறிதில்லை ஈதல்ல தென்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேன்ஒற்றை நீள்சிலையும்
அஞ்சம்பும் இக்குஅலர் ஆகிநின் றாய்அறி யார்எனினும்
பஞ்சஞ்சும் மெல்லடி யார்அடி யார்பெற்ற பாலரையே.
59

பாலினும் சொல்இனி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினும் தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும்மெய்ப் பீடம்ஒரு
நாலினும் சாலநன் றோஅடி யேன்முடை நாய்த்தலையே.
60

நாயே னையும்இங்கு ஒருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண் டாய்நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந் தாய்என்ன பேறுபெற்றேன்
தாயே மலைமக ளேசெங்கண் மால்திருத் தங்கைச்சியே.
61

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்துமத
வெங்கண் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் அலரும்எப் போதும்என் சிந்தையதே.
62

தேறும் படிசில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள்குன்றில் கொட்டும் தறிகுறிக் கும்சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்
வேறும் சமயம்உண் டென்றுகொண் டாடிய வீணருக்கே.
63



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கஅன்பு
பூணேன் உனக்குஅன்பு பூண்டுகொண் டேன்நின் புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழு தும்திரு மேனிப்ர காசமன்றிக்
காணேன் இருநில மும்திசை நான்கும் ககனமுமே.

64

ககனமும் வானும் புவனமும் காணவிற் காமன்அங்கம்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையும்செம்
முகனுமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே.

65

வல்லபம் ஒன்றறி யேன்சிறி யேன்நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்றொன்றி லேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்தொடுத்த
சொல்அவ மாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே.

66

தோத்திரம் செய்து தொழுதுமின் போலும்நின் தோற்றம்ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில்வை யாதவர் வண்மைகுலம்
கோத்திரம் கல்வி குணம்குன்றி நாளும் குடில்கள் தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே.

67

பாரும் புனலும் கனலும்வெங் காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவைஒளி ஊறொலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாரும் தவமுடை யார்படை யாத தனமில்லையே.

68

தனம்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே.

69



கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியில்
பண்களிக் கும்குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமும் ஆகி மதங்கர்குலப்
பெண்களிற் றோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே.

70

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றநெஞ் சேயிரங் கேல்உனக்கு என்குறையே.

71

என்குறை தீரநின்று ஏத்துகின் றேன்இனி யான்பிறக்கின்
நின்குறை யேஅன்றி யார்குறை காண்இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரஎங் கோன்சடை மேல்வைத்த தாமரையே.

72

தாமம் கடம்பு படைபஞ்ச பாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுதுஎமக் கென்றுவைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்குஒளி செம்மையம்மை
நாமம் திரிபுரை ஒன்றோ டிரண்டு நயனங்களே.

73

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயன்என்று கொண்டவர் பாவையர்ஆடவும் பாடவும் பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.

74

தங்குவர் கற்பகத் தாருவின் நீழலில் தாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்கிவர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே.

75



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்தேன் மனத்தில்நின் கோலம்எல் லாம்நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப் பிரான்ஒரு கூற்றைமெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே.
76

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகிஎன்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.
77

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத் தேன்என் துணைவிழிக்கே.
78

விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்குஅவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே.
79

கூட்டிய வாஎன்னைத் தன்னடி யாரில் கொடியவினை
ஓட்டிய வாஎன்கண் ஓடிய வாதன்னை உள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டிய வாநடம் ஆடகத் தாமரை ஆரணங்கே.
80

அணங்கே அணங்குகள் நின்பரி வாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகி லேன்நெஞ்சில் வஞ்சகரோடு
இணங்கேன் எனதுஉனது என்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன்றிலேன் என்கண் நீவைத்த பேரளியே.
81

அளியார் கமலத்தில் ஆரணங் கேஅகி லாண்டமும்நின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுதொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின்எங்ங னேமறப் பேன்நின் விரகினையே.
82

விரவும் புதுமலர் இட்டுநின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல் லார்இமை யோர்எவரும்
பரவும் பதமும் அயிரா வதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே.
83

உடையாளை ஒல்கு செம்பட்டு உடையாளை ஒளிர்மதிசெஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்குநுண்ணூல்
இடையாளை எங்கள்பெம் மானிடை யாளைஇங்கு என்னைஇனிப்
படையாளை உங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே.
84

பார்க்கும் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும்என் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேல்முத்து மாலையுமே.
85

மாலயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலன்என் மேல்விடும் போது வெளிநில்கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே.
86



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்திஎன்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யால்மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகங்கொண் டாளும் பராபரையே.

87

பரமென்று உனையடைந் தேன்தமி யேனும்உன் பத்தருக்குள்
தரமன்று இவன்என்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில்அயன்
சிரம்ஒன்று செற்றகை யான்இடப் பாகம் சிறந்தவளே.

88

சிறக்கும் கமலத் திருவேநின் சேவடி சென்னி வைக்கத்
துறக்கம் தரும்நின் துணைவரும் நீயும் துரியம்அற்ற
உறக்கம் தரவந்து உடம்போடு உயிர்உற வற்றறிவு
மறக்கும் பொழுதென்முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே

89

வருந்தா வகைஎன் மனத்தா மரையினில் வந்துபுகுந்து
இருந்தாள் பழைய இருப்பிட மாக இனிஎனக்குப்
பொருந்தா தொருபொருள் இல்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கும் மெல்லியளே.

90

மெல்லிய நுண்ணிடை மின்அனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும்அடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம்தருமே.

91

பதத்தே உருகிநின் பாதத்தி லேமனம் பற்றிஉன்றன்
இதத்தே ஒழுக அடிமைகொண் டாய்இனி யான்ஒருவர்
மதத்தே மதிமயங் கேன்அவர் போன வழியும் செல்லேன்
முதல்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே.

92

நகையே இஃதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவில்அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பதுநாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.

93

விரும்பித் தொழும்அடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்த மாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னஎல்லாம்
தரும்பித்தர் ஆவரென் றால்அபி ராமி சமயம்நன்றே.

94

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான்அறிவது
ஒன்றேயு மில்லை உனக்கே பரம்எனக்கு உள்ளவெல்லாம்
அன்றே உனதென்று அளித்துவிட் டேன்அழி யாதகுணக்
குன்றே அருட்கட லேஇம வான்பெற்ற கோமளமே.

95

கோமள வல்லியை அல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதம் இலாளை எழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயில் தன்னைத் தம்மால்
ஆமள வும்தொழு வார்எழு பாருக்கும் ஆதிபரே.

96



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.
97

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சின் அல்லால்ஒரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகஅறி யாமடப் பூங்குயிலே.
98

குயிலாய் இருக்கும் கடம்பா டவியிடைக் கோலஇயல்
மயிலாய் இருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீதன்னமாம்
கயிலா யருக்குஅன்று இமவான் அளித்த கனங்குழையே.
99

குழையத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும் கரும்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையப் பொருகண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே.
100

## நூற்பயன்

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம்எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவிஅடங்கக்
காத்தாளை அங்குச பாசாங் குசமும் கரும்பு மங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்குஒரு தீங்கில்லையே.



# திருக்கடவூர் அபிராமியம்மைப் பதிகம்

## ஸ்ரீ அபிராமிப்பட்டர் அருளியது

## நூல்

*திருச்சிற்றம்பலம்*

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி யிலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவிப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்;
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 1

காரளக பந்தியும் பந்தியின் அலங்கலும்
கரிய புருவச் சிலைகளும்
கர்ணகுண் டலமுமதி முகமண்ட லம்நுதற்
கத்தூரிப் பொட்டு மிட்டுக்
கூரணிந் திடுவிழியும் அமுதமொழியுஞ் சிறிய
கொவ்வையின் கனிய தரமும்
குமிழனைய நாசியும் முத்தநிகர் தந்தமும்
கோடுசோ டான களமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரணிந் திருமாந்த வனமுலையும் மேகலையும்
மணிநூ புரப்பா தமும்
வந்தெனது முன்னின்று மந்தகா சமுமாக
வல்வினையை மாற்று வாயே
ஆரமணி வானிலுறை தாரகைகள் போலநிறை
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! 2

மகரவார் குழல்மேல் அடர்ந்துகுமிழ் மீதினில்
மறைந்து வாளைத் துறந்து
மைக்கயலை வேண்டிநின் செங்கமல விழியருள்
வரம்பெற்ற பேர்க ளன்றோ?
செகமுழுமீ வொற்றைத் தனிக்குடை கவித்துமேற்
சிங்கா் தனத்தி லுற்றுச்
செங்கோலும் மனுநீதி முறைமையும் பெற்றுமிகு
திகிரியுல காண்டு பின்பு
புகர்முகத்(து) ஐராவதப் பாக ராகிநிரை
புத்தேளிர் வந்து போற்றிப்
போக தேவேந்திரன் எனப்புகழ விண்ணில்
புலோமிசை யொடுஞ்சு கிப்பர்;
அகரமுத லாகிவளர் ஆனந்த ரூபியே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதசீர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! 3

மறிகடல்கள் ஏழையுந் திகிரிஇரு நான்கையும்
மாதிறல் கரியெட் டையும்
மாநாகம் ஆனதையும் மாமேரு என்பதையும்
மாகூர்மம் ஆனதையு மோர்



பொறியரவு தாங்கிவரு புவனமீ ரேழையும்
புத்தேளிர் கூட்டத் தையும்
பூமகளை யுந்திகிரி மாயவனை யும்அரையிற்
புலியாடை உடையா னையும்
முறைமுறைக ளாயீன்ற முதியவர்களாய்ப் பழைமை
முறைகள் தெரியாத நின்னை
மூவுலகி லுள்ளவர்கள் வாலையென் றறியாமல்
மொழிகின்ற தேது சொல்வாய்;
அறிவுநிறை விழுமியர்தம் ஆனந்த வாரியே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதசீர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! 4

வாடாமல் உயிரெனும் பயிர்தழைத் தோங்கிவர
அருள்மழை பொழிந்தும் இன்ப
வாரிதியிலே நின்ன தன்பெனுஞ் சிறகால்
வருந்தா மலேய ணைத்துக்
கோடாமல் வளர்ச்சிற் றெறும்புமுதல் குஞ்சரக்
கூட்டமுத லான சீவ
கோடிகள் தமக்குப் புசிக்கும் புசிப்பினைக்
குறையாம லேகொ டுத்து
நீடாழி யுலகங்கள் யாவையும் நேயமாய்
நின்னுதர பந்தி பூக்கும்
நின்மலி! அகிலங்களுக்(கு) அன்னை என்றோதும்
நீலியென்(று) ஓது வாரோ?
ஆடாத நான்மறையின் வேள்வியால் ஓங்குபுகழ்
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்குஞ் சரந்தொட் டெறும்புகடை யானதொரு
பல்லுயிர்க் குங்கல் லிடைப்
பட்டதே ரைக்கும்அன் றுற்பவித் திடுகருப்
பையுறு சீவ னுக்கும்
மல்குஞ் சராசரப் பொருளுக்கும் இமையாத
வானவர் குழாத்தி னுக்கும்
மற்றுமொரு மூவர்க்கு மியாவர்க்கும் அவரவர்
மனச்சலிப் பில்லா மலே
நல்குந் தொழிற்பெருமை உண்டா யிருந்துமிகு
நவநிதி உனக்கி ருந்தும்
நானொருவன் வறுமையிற் சிறியனா னால்அந்
நகைப்புனக் கேஅல்ல வோ?
அல்கலந் தும்பர்நா டளவெடுக் குஞ்சோலை
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! 6

நீடுல கங்களுக்(கு) ஆதரவாய் நின்று
நித்தமாய் முத்தி வடிவாய்
நியமமுடன் முப்பத் திரண்டறம் வளர்க்கின்ற
நீமனை வியாய்இ ருந்தும்
வீடுவீ டுகடோறும் ஓடிப் புகுந்துகால்
வேசற்(று) இலச்சை யும்போய்
வெண்டுகில் அரைக்கணிய விதியற்று நிர்வாண
வேடமுங் கொண்டு கைக்கோர்
ஓடேந்தி நாடெங்கும் உள்ளந் தளர்ந்துநின்(று)
உன்மத்த னாகி அம்மா!
உன்கணவன் எங்கெங்கும் ஐயம்புகுந் தேங்கி
உழல்கின்ற தேது சொல்வாய்



ஆடுகொடி மாடமிசை மாதர்விளை யாடிவரும்
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! 7

ஞானந் தழைத்துன் சொரூபத்தை அறிகின்ற
நல்லோர் இடத்தினிற் போய்
நடுவி னிலிருந்துவந் தடிமையும் பூண்டவர்
நவிற்றும் உபதேச முட்கொண்டு
ஈனந் தனைத் தள்ளி எனது நானெனுமானம்
இல்லா மலேது ரத்தி
இந்திரிய வாயில்களை இறுகப் புதைத்து நெஞ்(சு)
இருளற விளக்கேற்றியே
ஆனந்த மானவிழி அன்னமே! உன்னையென்
அகத்தா மரைப்போ திலே
வைத்துவே றேகவலை யற்றுமே லுற்றபர
வசமாகி அழியாததோர்
ஆனந்த வாரிதியில் ஆழ்கின்ற தென்றுகாண்
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 8

சலதியுல கத்திற் சராசரங் களை யீன்ற
தாயா கினால் எனக்குத்
தாயல்லவோ? யான் உன் மைந்தனன்றோ? எனது
சஞ்சலம் தீர்த்து நின்றன்
முலை சுரந்தொழுகு பாலூட்டி என் முகத்தை உன்
முன்தானையால் துடைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகின்ற மழலைக் குகந்து கொண்டிளநிலா
முறுவல்இன் புற்றரு கில்யான்
குலவி விளையாடல் கொண்டருள் மழை பொழிந்து
அங்கை கொட்டிவா என்றழைத்துக்
குஞ்சரமுகன் கந்தனுக் கிளையன் என்றெனைக்
கூறினால் ஈனம் உண்டோ?
அலைகடலிலே தோன்று மாறாத அமுதமே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 9

கைப்போது கொண்டுன் பதப்போது தன்னில்
கணப்போதும் அர்ச்சிக் கிலேன்;
கண்போதினால் உன் முகப்போது தன்னையான்
கண்டு தரிசனை புரிகிலேன்;
முப்போதில் ஒரு போதும் என்மனப் போதிலே
முன்னி உன் ஆலயத்தின்
முன்போதுவார் தமது பின்போத நினைகிலேன்;
மோசமே போய் உழன்றேன்;
மைப்போ கத்திற்கு நிகரெனப் போதெரு
மைக்கடா மீதேறியே
மாகோர காலன் வரும்போது தமியேன்
மனங் கலங்கித் தியங்கும்
அப்போது வந்துன் அருட்போது தந்தருள்
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 10



மிகையும் துரத்தவெம் பிணியும் துரத்த
வெகுளி யானதும் துரத்த
மிடியும் துரத்தநரை திரையும் துரத்தமிகு
வேதனை களும் துரத்த
பகையும் துரத்த வஞ்சனையும் துரத்த
பசியென்பதும் துரத்த
பாவம் துரத்த பதி மோகம் துரத்த
பல காரியமும் துரத்த
நகையும் துரத்த ஊழ் வினையும் துரத்த
நாளும் துரத்த வெகுவாய்
நாவறண்டோடி கால் தளர்ந்திடும் என்னை
நமனும் துரத்துவானோ?
அகில உல கங்கட்கும் ஆதார தெய்வமே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 11

*திருச்சிற்றம்பலம்*

## வரங் கேட்டல்

***(காளி, சக்தி, மாரி முதலியன உலகத்தின் மூல சக்தியைக் குறிக்கும் பெயர்களாம்)***

விண்ணும் மண்ணுந் தனியாளும் - எங்கள்
வீரை சக்திநின தருளே - என்றன்
கண்ணுங் கருத்து மெனக் கொண்டு - அன்பு
கசிந்து கசிந்து கசிந் துருகி - நான்
பண்ணும் பூசனைக ளெல்லாம் - வெறும்
பாலை வனத்தி லிட்ட நீரோ - உனக்
கெண்ணுஞ் சிந்தை யொன்றிலையோ? - அறி
வில்லா தகில மளிப்பாயோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயே சரண மென்று கூவி - என்றன்
நெஞ்சில் பேருறுதி கொண்டு - அடி
தாயே யெனக்கு மிக நிதியும் - அறந்
தன்னைக் காக்கு மொரு திறனும் - தரு
வாயே யென்று பணிந் தேத்திப் - பல
வாறா நினது புகழ் பாடி - வாய்
ஓயே னாவ துணராயோ? - நின
துண்மை தவறுவதொ ரழகோ?

காளீ வலிய சாமுண்டி - ஓங்
காரத் தலைவி யென் னிராணி - பல
நாளிங் கெனை யலைக்க லாமோ? உள்ளம்
நாடும் பொரு ளடைதற் கன்றோ - மலர்த்
தாளில் விழுந் தபயம் கேட்டேன் - அது
தாராயெனி லுயிரைத் தீராய் - துன்பம்
நீளி லுயிர் தரிக்க மாட்டேன் - கரு
நீலீ யென் னியல் பறியாயோ?

தேடிந் சோறு நிதந் தின்று - பல
சின்னஞ் சிறு கதைகள் பேசி - மனம்
வாடித் துன்ப மிக வுழன்று - பிறர்
வாடப் பல செயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப் பருவ மெய்தி கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே நான்
வீழ்வே னென்று நினைத்தாயோ?

நின்னைச் சில வரங்கள் கேட்பேன் - அவை
நேரே யின் றெனக்குத் தருவாய் - என்றன்
முன்னைத் தீய வினைப் பயன்கள் - இன்னும்
மூளா தழிந்திடுதல் வேண்டும் - இனி

என்னைப் புதிய வுயிராக்கி - எனக்
கேதுங் கவலை யறச் செய்து - மதி
தன்னை மிகத் தெளிவு செய்து - என்றும்
ஸந்தோஷங் கொண்டிருக்கச் செய்வாய்.

தோளை வலியுடைய தாக்கி உடற்
சோர்வும் பிணி பலவும் போக்கி அரி
வாளைக் கொண்டு பிளந்தாலும் - கட்டு
மாறா வுடலுறுதி தந்து சுடர்
நாளைக் கண்டதோர் மலர்போல ஒளி
நண்ணித் திகழு முகந் தந்து மத
வேளை வெல்லு முறை கூறித் - தவ
மேன்மை கொடுத் தருளல் வேண்டும்.

எண்ணுங் காரியங்க ளெல்லாம் - வெற்றி
யேறப் புரிந்தருளல் வேண்டும் - தொழில்
பண்ணப் பெரு நிதியம் வேண்டும் - அதிற்
பல்லோர் துணை புரிதல் வேண்டும் - சுவை
நண்ணும் பாட்டினொடு தாளம் - மிக
நன்றா யுளத் தழுந்தல் வேண்டும் - பல
பண்ணிற் கோடி வகை யின்பம் - நான்
பாடத் திற னடைதல் வேண்டும்.

கல்லை வயிரமணி யாக்கல் - செம்பைக்
கட்டித் தங்க மெனச் செய்தல் - வெறும்
புல்லை நெல்லெனப் புரிதல் - பன்றிப்
போத்தைச் சிங்க வேறாக்கல் - மண்ணை
வெல்லத் தினிப்பு வரச் செய்தல் - என
விந்தை தோன்றிட விந் நாட்டை - நான்
தொல்லை தீர்த் துயர்வு கல்வி வெற்றி
சூழும் வீர மறி வாண்மை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுந் திரவயத்தின் குவைகள் - திறல்
கொள்ளுங் கோடி வகைத் தொழில்கள்- இவை
நாடும் படிக்கு வினை செய்து - இந்த
நாட்டோர் கீர்த்தி யெங்கு மோங்கக் - கலி
சாடுந் திற னெனக்குத் தருவாய் - அடி
தாயே யுனக் கரிய துண்டோ மதி
மூடும் பொய்மை யிரு ளெல்லாம் - எனை
முற்றும் விட்டகல வேண்டும்.

ஐயந் தீர்ந்து விடல் வேண்டும் - புலை
யச்சம் போயொழிதல் வேண்டும் - பல
பையச் சொல்லுவ திங் கென்னே முன்னைப்
பார்த்தன் கண்ண னிவர் நேரா எனை
உய்யக் கொண்டருள வேண்டும் - அடி
உன்னைக் கோடி முறை தொழுதேன் - இனி
வையத் தலைமை யெனக் கருள்வாய் - அன்னை
வாழீ நின்ன தருள் வாழி.

(ஓம்) காளீ வலிய சாமுண்டி ஓங்
காரத் தலைவி யென் னிராணி

- *சுப்பிரமணிய பாரதியார்*



உ
சிவமயம்

# முருகன்

விழிக்குத் துணை திரு மென் மலர்ப பாதங்கள் மெய்மை குன்றா
மொழிக்குத் துணைமுருகா எனும் நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணை அவன் பன்னிரு தோளும் பயந்த தனி
வழிக்குத் துணை வடிவேலுஞ் செங்கோடன் மயூரமுமே.

முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கை தொழுவேன் நான்.

நாளென் செயும் வினை தானென் செயும் எனை நாடிவந்த
கோளென் செயுங் கொடுங் கூற்றென் செயுங் குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே.

காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருளாய்
தூவிக் குலமயில் வாகனனே துணை யேதுமின்றித்
தாவிப் படரக் கொழு கொம்பிலாத தனிக்கொடி போற்
பாவித் தனிமனந் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே.

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறும் நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரு நெறி பிடித்தொழுக வேண்டும்
மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும்
உனை மறவாதிருக்க வேண்டும்
மதிவேண்டும் நின் கருணை நிதிவேண்டும்
நோயற்ற வாழ்வில் நான் வாழவேண்டும்
தரும மிகு சென்னையிற் கந்த கோட்டத்துள் வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்ய மணிஉண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

*(தெய்வமணிமாலை - இராமலிங்க சுவாமிகள்)*

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரனைவதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்தபெரு மாளே.

வள்ளி மோஹனா புள்ளி மயில் வாஹனா
ஆறுமுகக் கந்தனே சுந்தர வதனா
குமர குரு பர சண்முக வடிவேலா - வடிவேலா
முருகா ஹரிமருகா சிவ சக்தி பாலகா.

சரவண பவகுக ஓம் முருகா
இருவினை கெட வரம் அருள் முருகா
கதிரை மலை வாசா வேல் முருகா
சிவ முருகா அரகர முருகா
சரவணபவனே சண்முகனே
வரந் தர வாவா என்முன்னே.



## மாலோன் மருகனை

மாலோன் மருகனை மன்றாடிமைந்தனை வானவர்க்கும்
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயற் பொழிற் செங் கோடனைச சென்று கண்டுதொழ
நாலாயிரங் கண் படைத்திலனே இந்த நான்முகனே.

ஆறிருதடந் தோள வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் னணங்கும் வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியா ரெல்லாம்.

அருவமு முருவமாகி அநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரம்மமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணை கூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டு
ஒரு திருமுருகன் வந்தாங் குதித்தன னுலகமுய்ய.

பன்னிரு கரத்தாய் போற்றி பசும் பொன்மா மயிலாய் போற்றி
முன்னிய கருணையாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னியரிருவர் நீங்காக் கருணைவாரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுளிருக்கும் மாமணியே போற்றி.

*(கச்சியப்பர்)*

அஞ்சு முகந் தோன்றில் அறுமுகந் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்ச லென வேல் தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகா வென்றோதுவார் முன்.

உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின் செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடிய வினை தீர்த்து அருளும்
வேலப்பா செந்தில் வாழ்வே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுபடைவீட்டுப் பாடல்கள்

## திருப்பரங்குன்றம்

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலம் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனை நாளும்
கண்டு கொண்டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் குன்றிற் கதிர் வேலா
தென்பரங்குன்றிற் பெருமாளே.

## திருச்செந்தூர்

முத்துத் தமிழ் மாலை கோடிகோடி
சந்த மொடு நீடு பாடிப்பாடி
முஞ்சர் மனைவாசல் தேடித்தேடி யுழலாதே
முந்தை வினை யேவராமற் போக
மங்கையர்கள் காதல் தூரத்தேக
முந்தடிமை யேனை யாளத்தானு னைமீதே
தித்திதிமி தோதி தீதித் தீதி
தந்த தன தான தானத்தான
செஞ்சணகு சேகு தாளத் தோடு நடமாடுஞ்
செஞ்சிறிய கால்வி சாலத் தோகை
துங்க அனு கூல பார்வை தீர
செம்பொன் மயில் மீதி லேயெம் போது வருவாயே
அத்தன் மறை வேள்வி காவற்கார
செந்தமிழ் சொல் பாவின் மாலைக்கார
அண்டருபகார சேவுற் கார முடிமேலே
அஞ்சலி செய்வோர்கள் நேயக்கார
குன்றுருவ ஏவும் வேலைக்கார
அந்தம் வெகுவான ரூபக்கார எழிலான
சிந்துரமின் மேவு போகக் கார
விந்தைகுற மாது வேளைக்கார
செஞ்சொலடி யார்கள் வாரக் கார எதிரான
செஞ்சமரை மாயு மாயக் கார
துங்கரண சூரசூறைக் கார
செந்தில் நகர் வாழு மாண்மைக்கார பெருமாளே.

## பழனி

நாத விந்து கலாதீ நமோ நம
வேத மந்த்ர சொரூபா நமோ நம
ஞான பண்டித சாமீ நமோ நம வெகுகோடி
நாம சம்பு குமாரா நமோ நம
போக அந்தரி பாலா நமோ நம
நாக பந்தமயூரா நமோ நம பரசூரர்
சேத தண்ட விநோதா நமோ நம
கீத கிண்கிணி பாதா நமோ நம
தீர சம்ப்ரம வீரா நமோ நம கிரிராஜா
தீபமங்கள ஜோதி நமோ நம
தூய அம்பல லீலா நமோ நம
தேவ குஞ்சரி பாலா நமோ நம அருள் தாராய்
ஈதலும் பல கோலால பூஜையும்
ஓதலுங்குண ஆசார நீதியும்
சாரமுங்குரு சீர்பாத சேவையும் மறவாத
ஏழ்தலம் புகழ் காவேரி யால்விளை
சோழமண்டல மீதே மனோகர
ராஜ கெம்பீர நாடாளு நாயக வயலூரா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரம் பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறிமாகயி
லையிலேகி ஆதியந்த வுலாவாசு பாடிய
சேரர் கொங்குவைகாவூர் நன்னாடதில்
ஆவினன் குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

நீல மயிலேறும் கோல முருகனை
நித்தம் பணிந்திட வாருங்கடி
கால கால னெந்தை ஆலமுண்டர் கொஞ்சும்
கந்தனைப் பாடிட வாருங்கடி
சூலி சிவகாமி தாவி முத்தமிடும்
சுந்தர பாலனைப் பாருங்கடி
காலில் சிலம் பொலி கல கலென வரும்
கந்தனழ கினைப் பாருங்கடி

சின்ன முனிவர்க்கு செந்தமிழ் அமுதை
அன்புடன் பருகத் தந்தவன்டி
வண்ண மயிலேறும் வள்ளலை வாழ்த்தினால்
வந்தின்பம் தருவான் பாடுங்கடி
வேலுடன் வந்தன்பர் வேதனை தீர்த்தின்பம்
வேண்டவேண்டத் தரும் மெய்யனடி
நாலு வேதப்பொருள் ஆறு சமயத்து
நாயகன் எம்முயிர் ஐயனடி.



**வேல்முருகா மால்மருகா**

வேல்முருகா மால்மருகா வா வா ஷண்முகா
கால் பிடித்தேன் காத்தருள வா வா ஷண்முகா.

நால் வேதப் பொருளோனே நாதா ஷண்முகா
நல்லதெல்லாம் உன்பால்கொண்டாய் நாதா ஷண்முகா
செல்லமாகச் சிவை அணைக்கும் சேயே ஷண்முகா
செங்கதிர்வேல் தாங்கிய என் தேவே ஷண்முகா.
*(வேல்)*

ஆறுபடை வீடுடைய ஆண்டவா ஷண்முகா
ஆனந்தமே அற்புதமே ஆண்டவா ஷண்முகா
தேறுதலைத் தருபவனே தேவா ஷண்முகா
சிங்கார ஓங்கார சிவனே ஷண்முகா.
*(வேல்)*

நாறுமாலை அணிமார்பா நாயகா ஷண்முகா
நாதவிந்து கலாதீத நாயகா ஷண்முகா
ஏறுமயில் வாஹனனே ஏந்தலே ஷண்முகா
நீறணிந்தார் வினைபோக்கும் நீதமே ஷண்முகா.
*(வேல்)*

பாடும் பணி தந்திடுவாய் பன்முகா ஷண்முகா
பக்தருடன் கூட்டிடுவாய் முத்தனே ஷண்முகா
ஆடும் சேவற் கொடியழகா ஆண்டவா ஷண்முகா
அடியார் உள்ளத்துறை அமர்ந்த ஆனந்தா ஷண்முகா.
*(வேல்)*

வீடும் நாடும் நின் திருத்தாள் வேண்டினேன் ஷண்முகா
வீரன் சூரன் உடல்கிழித்த வேலனே ஷண்முகா
ஓடும் மனம் உன்னை நாட ஆடிவா ஷண்முகா
ஒருவனே என் வினையழித்த உத்தமா ஷண்முகா
*(வேல்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையில்லா ஆனந்தனே ஏகாந்தா ஷண்முகா
எங்கும் நிறை அன்புருவே முருகா ஷண்முகா
தில்லையிலே ஆடும் தேவி பாலகா ஷண்முகா
திருட்டுத் தனமாய் குறக்கொடியைக் கொண்டவா ஷண்முகா.
(வேல்)

தொல்லை யெல்லாம் கடந்த பதம் தந்திடுவாய ஷண்முகா
தோத்தரித்தோம் எங்கள் முன்னே வந்திடாய ஷண்முகா
கல்லையொத்த மனமுருகக் கருணை செய் ஷண்முகா
கல்லெனச் சிலம்பொலிக்க ஓடிவா ஷண்முகா.
(வேல்)

எதிரிலாத பக்தி தனைமேவி
இனியதாள் நினைப்பை இருபோதும்
இதய வாரிதிக்குள் ஞறவாகி
எனதுள்ளே சிறக்க அருள்வாயே
கதிரகாம வெற்பி லுறைவோனே
கனக மேரு ஒத்த புயவீரா
மதுர வாணியுற்ற கழலோனே
வழுதி கூனிமித்த பெருமாளே.

பச்சை மயில் வாகனனே - சிவ
பாலசுப்ரமணியே வா - முருகா
இச்சையெல்லாம் உன்மேல் வைத்தேன்
இனி எள்ளளவும் பயமில்லையே. (பச்சை)

கொச்சை மொழியானாலும் - உன்னை
கொஞ்சிக் கொஞ்சிப் பாடிடுவேன் - முருகா
மெல்ல மெல்லப் புகுந்து விட்டாய் - எந்தன்
கள்ள மெல்லாம் கரைந்ததப்பா. (பச்சை)



நெஞ்சமதில் கோவிலமைத்து - இங்கு
நேர்மையெனும் தீபம் வைத்து - முருகா
செஞ்சிலம்பு கொஞ்சிடவே - வா
சேவல் கொடி மயில் வீரா. (பச்சை)

அலை கடல் ஓரத்திலே - என்
அன்பான ஷண்முகனே - முருகா
அலையான மனம் தந்தாய் - உந்தன்
இஷ்டம் எந்தன் கஷ்டம் தீரப்பா. (பச்சை)

சரவணா சிவகுமாரா சண்முகநாதா ஜெய்ஜெய் சண்முகநாதா//
சுப்பிரமண்யா கார்த்திகேயா கதிர்வேலா//
சண்முகநாதா ஜெய்ஜெய் சண்முகநாதா//
சரணம் சரணம் சண்முகநாதா - ஓம்
சரணம் சரணம் சண்முகநாதா.

அன்பருக்கு அன்பனே நீ வாவா முருகா
ஆறுபடை வீடுடையாய் நீ வாவா முருகா
இன்பமய ஜோதியே நீ வாவா முருகா
ஈசனுமை பாலகனே நீ வாவா முருகா
உலகநாதன் மருகனே நீ வாவா முருகா
ஊமைக் கருள் புரிந்தவா நீ வாவா முருகா
எட்டுக் குடி வேலவா நீ வாவா முருகா
ஏறுமயில் ஏறியே நீ வாவா முருகா
ஐங்கரனுக் கிளையவனே நீ வாவா முருகா
ஓய்யார வள்ளி லோலா நீ வாவா முருகா
ஓங்காரத் தத்துவமே நீ வாவா முருகா
ஔவைக் குபதேசித்தவா நீ வாவா முருகா
அகிலலோக நாயகனே நீ வாவா முருகா
ஓடிவா நீ ஓடிவா நீ வாவா முருகா
ஆடிவா நீ ஆடிவா நீ வாவா முருகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமிமலை

பாதி மதி நதி போது மணிசடை
நாதரருளிய குமரேசா
பாகு கனி மொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காக முற அருள்
மாயன் அரிதிரு மருகோனே
காலனெனை யணுகாம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதியயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா
ஆடுமயிலினி லேறியமரர்கள்
சூழ வரவரும் இளையோனே
சூதமிகவளர் சோலை மருவு
சுவாமி மலைதனில் உறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விட வல பெருமாளே.

அபகார நிந்தை பட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனை நானினந் தருட் பெறுவேனோ
இபமாமு கன்றனக் கிளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
செபமாலை தந்த சற் குருநாதா
திருவாவினன் குடிப் பெருமாளே.

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.



காரணமதாக வந்து புவிமீதே
காலனணுகா திசைந்து கதிகாண
நாரணனும் வேதமுன்பு தெரியாத
ஞானநடமே புரிந்து வருவாயே
ஆரமுதமானதந்தி மணவாளா
ஆறுமுக மாறிரண்டு விழியோனே
சூரர்கிளை மாளவென்ற கதிர்வேலா
சோலை மலை மேவிநின்ற பெருமாளே.

முருகேசா முருகேசா முத்துக்குமாரா முருகேசா
கதிரேசா கதிரேசா கலியுக வரதா கதிரேசா
வடிவேலா வடிவேலா வள்ளி மணவாளா வடிவேலா
அருள்நேசா அருள்நேசா அடியவர் போற்றும் முருகேசா.

## எங்கள் குலதெய்வம்

குமர மலை வீற்றிருக்கும் எங்கள் குலதெய்வம் தேவ
குஞ்சரியை மணம்புரிந்த எங்கள் குலதெய்வம்
சரவணை யில் வந்துதித்த எங்கள் குலதெய்வம் சிவ
சண்முகமாய் வந்துதித்த எங்கள் குலதெய்வம்
பழனி மலை வீற்றிருக்கும் எங்கள் குலதெய்வம் சிவ
பக்தர்களை காத்தருளும் எங்கள் குலதெய்வம்
பண்டாரம் போலிருக்கும் எங்கள் குலதெய்வம் தேவ
பச்சை மயிலேறிவரும் எங்கள் குலதெய்வம்
ஆண்டிவேடம் பூண்டிருக்கும் எங்கள் குலதெய்வம் அவர்
அண்டினோரை ஆதரிக்கும் எங்கள் குலதெய்வம்
வேலாயுதம் தரித்த எங்கள் குலதெய்வம் வடி
வேல்முருக நாமம் படைத்த எங்கள் குலதெய்வம்
தெண்டாயுதம் தரித்த எங்கள் குலதெய்வம் பால
தெண்டபாணிப் பெயருடைய எங்கள் குலதெய்வம்
விபூதி தரித்திருக்கும் எங்கள் குலதெய்வம் அவர்
வீரமயிலேறிவரும் எங்கள் குலதெய்வம்
ஆறுமுக மான பொருள் எங்கள் குலதெய்வம் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறபடை வீடுடைய எங்கள் குலதெய்வம்
சிவனாருக் குபதேசித்த எங்கள் குலதெய்வம் சிவ
சுப்ரமண்ய பேருடைய எங்கள் குலதெய்வம்.
*(எங்கள் குல தெய்வ*

## முருகா! முருகா!! முருகா!!!

முருகா! முருகா!! முருகா!!!
வருவாய் மயில் மீதினிலே
வடிவேலுடனே வருவாய்
தருவாய் நலமும் தகவும் புகழும்
தவமும் திறமும் தனமும் கனமும். *(முருகா*

அடியார் பலரிங் குளரே
அவரை விடுவித்தருள் வாய்
முடியா மறையின் முடிவே அசுரர்
முடிவே கருதும் வடிவேலவனே. *(முருகா*

சுருதிப் பொருளே வருக
துணிவே கனலே வருக
கருதிக் கருதிக் கவலைப் படுவோர்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல். *(முருகா*

அமராவதிவாழ் வுறவே
அருள்வாய் சரணம் சரணம்
குமரா பிணியா வையுமே சிதறக்
குமறும் சுடர் வேலவனே சரணம் *(முருகா*

அறிவாகிய கோயிலிலே
அருளா கியதாய் மடிமேல்
பொறிவேலுடனே வளர்வாய் அடியார்
புது வாழ்வுறவே புவிமீதருள் வாய். *(முருகா*

குருவே பரமன் மகனே
குகையில் வளருங் கனலே
தருவாய் தொழிலும் பயனும் அமரர்
சமராதிபனே சரணம் சரணம். *(முருகா*



## அன்பர் ஓங்க வேண்டும்

அன்பர் ஓங்க வேண்டும் முருகா அவனியோங்க வேண்டும்
துன்பம் நீங்க வேண்டும் முருகா இன்பம் ஓங்க வேண்டும்
தருமம் ஓங்க வேண்டும் முருகா தான மோங்க வேண்டும்
தவமும் ஓங்க வேண்டும் முருகா சாந்தி ஓங்க வேண்டும்.

பக்திஓங்க வேண்டும் முருகா சக்தி ஓங்க வேண்டும்
சக்தி ஓங்க வேண்டும் முருகா சித்தியோங்க வேண்டும்
அன்பர் கூடவேண்டும் முருகா துதிகள் பாடவேண்டும்
துதிகள் பாடவேண்டும் முருகா நீயும் ஆடவேண்டும்.

*அரஹரோஹரா சாமி அரஹரோஹரா*
*அரஹரோஹரா சாமி அரஹரோஹரா.*

திருச்செந்தூர் முருகனுக்கும் அரஹரோஹரா
திருத்தணிகை வேலனுக்கும் அரஹரோஹரா
பழனிமலை பாலனுக்கும் அரஹரோஹரா
பரமசிவன் மைந்தனுக்கும் அரஹரோஹரா. *(அரஹரோஹரா)*

கதிர்காம வேலனுக்கும் அரஹரோஹரா
கந்தசாமி கடவுளுக்கும் அரஹரோஹரா
கலியுக வரதனுக்கும் அரஹரோஹரா
கண்கண்ட தேவனுக்கும் அரஹரோஹரா. *(அரஹரோஹரா)*

வெள்ளிமலை வேலனுக்கும் அரஹரோஹரா
வள்ளிமண வாளனுக்கும் அரஹரோஹரா
அபிஷேஹகப் பிரியனுக்கும் அரஹரோஹரா
ஆனந்த வடிவனுக்கும் அரஹரோஹரா. *(அரஹரோஹரா)*

முடியா முதலே சரணம் சரணம்
முருகா குமரா சரணம் சரணம்
வடிவேல் அரசே சரணம் சரணம்
மயிலூர் மணியே சரணம் சரணம்
அடியார்க் கெளியாய் சரணம் சரணம்
அரியாய் பெரியாய் சரணம் சரணம்
கடியாக் கதியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
முருகன் துணை

# கந்தர் சஷ்டி கவசம்

## காப்பு
### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம்நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்து - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமல ரருள்கந்தர்
சஷ்டிக் கவசந்தனை.

### குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்தே
குமரனடி நெஞ்சே குறி

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மைய நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக்காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக



நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவணபவனார் சடுதியில் வருக
ரஹணபவச ரரரர ரரர
ரிஹணபவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன்நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணிபூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடையழகும் இணைமுழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகென
மொகமொக மொகமொக மொகமொகமொகன
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்ச
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல்முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க



என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச்செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகையகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற்படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்



கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகை சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடு விடு வேலை வெருண்ட துவோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினிலிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைஷயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன்படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்து றவாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பாலகுமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ணன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்



வாழ்க வாழ்கவென் வறுமைகள் னீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவள் னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலதருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர் கைவேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடி பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத்மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயினட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவ ஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

### காப்பு

சண்முகக் கடவுள் போற்றி
சரவணத்துதித்தாய் போற்றி
கண்மணி முருகா போற்றி
கார்த்திகை பாலா போற்றி
தண்மலர் கடம்பமாலை
தாங்கிய தோளா போற்றி
விண்மதி வதனவள்ளி
வேலவா போற்றி போற்றி.



*ஓம்*
*குஹப் பிரஹ்மணே நம*

## குமாரஸ்தவம்

ஓம் ஷண்முக பதயே நமோ நமஹ
ஓம் ஷண்மத பதயே நமோ நமஹ
ஓம் ஷடக்ரீவ பதயே நமோ நமஹ
ஓம் ஷட்க்ரீட பதயே நமோ நமஹ
ஓம் ஷட்கோண பதயே நமோ நமஹ
ஓம் ஷட்கோச பதயே நமோ நமஹ
ஓம் நவநிதி பதயே நமோ நமஹ
ஓம் சுபநிதி பதயே நமோ நமஹ
ஓம் நரபதி பதயே நமோ நமஹ
ஓம் சுரபதி பதயே நமோ நமஹ
ஓம் நடச்சிவ பதயே நமோ நமஹ
ஓம் ஷடக்ஷர பதயே நமோ நமஹ
ஓம் கவிராஜ பதயே நமோ நமஹ
ஓம் தவராஜ பதயே நமோ நமஹ
ஓம் இகபர பதயே நமோ நமஹ
ஓம் புகழ்முநி பதயே நமோ நமஹ
ஓம் ஜயஜய பதயே நமோ நமஹ
ஓம் நயநய பதயே நமோ நமஹ
ஓம் மஞ்சுள பதயே நமோ நமஹ
ஓம் குஞ்சரீ பதயே நமோ நமஹ
ஓம் வல்லீ பதயே நமோ நமஹ
ஓம் மல்ல பதயே நமோ நமஹ
ஓம் அஸ்தர பதயே நமோ நமஹ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சஸ்த்ர பதயே நமோ நமஹ
ஓம் ஷஷ்டி பதயே நமோ நமஹ
ஓம் இஷ்டி பதயே நமோ நமஹ
ஓம் அபேத பதயே நமோ நமஹ
ஓம் சுபோத பதயே நமோ நமஹ
ஓம் வ்யூஹ பதயே நமோ நமஹ
ஓம் மயூர பதயே நமோ நமஹ
ஓம் பூத பதயே நமோ நமஹ
ஓம் வேத பதயே நமோ நமஹ
ஓம் புராண பதயே நமோ நமஹ
ஓம் ப்ராண பதயே நமோ நமஹ
ஓம் பக்த பதயே நமோ நமஹ
ஓம் முக்த பதயே நமோ நமஹ
ஓம் அகார பதயே நமோ நமஹ
ஓம் உகார பதயே நமோ நமஹ
ஓம் மகார பதயே நமோ நமஹ
ஓம் விகாச பதயே நமோ நமஹ
ஓம் ஆதி பதயே நமோ நமஹ
ஓம் பூதி பதயே நமோ நமஹ
ஓம் அமார பதயே நமோ நமஹ
ஓம் குமார பதயே நமோ நமஹ



## பகை கடிதல்

திருவளர் சுடர் உருவே சிவை கரம் அமர் உருவே
அருமறை புகழ் உருவே, அறவர்கள் தொழும் உருவே
இருள் தபும் ஒளி உருவே, எனநினை எனது எதிரே
குரு குகன் முதல் மயிலே, கொணர்தியுன் இறைவனையே 1

மறைபுகழ் இறைமுனரே, மறை முதல் பகர் உருவே
பொறைமலி உலகு உருவே புனநடை தரும் உருவே
இறைஇள முக உருவே, என நினை எனதெதிரே
குறைவரு திருமயிலே, கொணர்தியுன் இறைவனையே 2

இதரர்கள்பலர் பொரவே, இவண் உறை எனதெதிரே
மதிரவி பலவெனதேர், வளர்சரண் இடையெனமா
சதுரொடு வரு மயிலே, தடவரை அசை வுறவே
குதிதரும் ஒருமயிலே, கொணர்தியுன் இறைவனையே 3

பவநடை மனுடர்முனே படர்உறும் எனதெதிரே
நவமணி நுதலணியோர் நகைபல மிடறணிமால்
சிவணிய திருமயிலே திடனொடு நொடிவலமே
குவலயம் வருமயிலே கொணர்தியுன் இறைவனையே 4

அழகுறு மலர்முகனே அமரர்கள் பணிகுகனே
மழஉரு உடையவனே மதிநனி பெரியவனே
இழவிலர் இறையவனே எனநினை எனதெதிரே
குழகது மிளிர்மயிலே கொணர்தியுன் இறைவனையே 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையறும் அறுமுகனே இதச்சி மருமகனே
இணரணி புரள்பயனே, எனநினை எனதெதிரே
கணபண அரவுரமே கலைவுறு எழுதருமோர்
குணமுறு மணிமயிலே கொணர்தியுன் இறைவனையே

எளியஎன் இறைவ குகாஎனநினை எனதெதிரே
வெளிநிகழ் திரள்களைமீன் மிளிர்சினை எனமிடைவான்
பளபள எனமினுமா பலசிறை விதிதரு நீள்
குளிர்மணி விழிமயிலே கொணர்தியுன் இறைவனையே

இலகயில் மயில்முருகா எனநினை எனதெதிரே
பலபல களமணியே பலபல பதமணியே
கலகல கலவெனமா கவினொடு வருமயிலே
குலவிடு சிகைமயிலே கொணர்தியுன் இறைவனையே

இகல்அறு சிவகுமரா எனநினை எனதெதிரே
சுகமுனிவரர் எழிலார் சுரர்பலர் புகழ்செயவே
தொகுதொகு தொகுவெனவே சுரநட மிடுமயிலே
குகபதி அமர்மயிலே கொணர்தியுன் இறைவனையே

கருணைபெய் கனமுகிலே கடமுனி பணிமுதலே
அருணையன் அரன்எனவே அகம்நினை எனதெதிரே
மருமலர் அணிபலவே மருவிடு களமயிலே
குருபல அவிர்மயிலே கொணர்தியுன் இறைவனையே



## சண்முக கவசம்

அண்டமாய் அவனியாகி அறியொணாப் பொருளதாகித்
தொண்டர்கள் குருவுமாகித் துகள் அறு தெய்வமாகி
எண் திசை போற்ற நின்ற என் அருள் ஈசன் ஆன
திண் திறல் சரவணத்தான் தினமும் என் சிரசைக் காக்க 1

ஆதியாம் கயிலைச் செல்வன் அணிநெற்றி தன்னைக் காக்க
தாதவிழ் கடப்பந் தாரான் தானிரு நுதலைக் காக்க
சோதியாம் தணிகை ஈசன் துரிசுஇலா விழியைக் காக்க
நாதனாம் கார்த்தி கேயன் நாசியை நயந்து காக்க 2

இருசெவி களையும் செவ்வேள் இயல்புடன் காக்க, வாயை
முருகவேள் காக்கநாப்பல் முழுதும்நல் குமரன் காக்க
துரிசு அறு கதுப்பை யானைத் துண்டனார் துணைவன் காக்க
திருவுடன் பிடரீதன்னைச் சிவசுப்ரமணியன் காக்க 3

ஈசனாம் வாகுலேயன் எனது சுந்தரத்தைக் காக்க
தேசுறு தோள் விலாவும் திருமகள் மருகன் காக்க
ஆசுஇலா மார்பை ஈராறு ஆயுதன் காக்க, எந்தன்
ஏசுஇலா முழங்கை தன்னை எழில் குறிஞ்சிக் கோன் காக்க 4

உறுதியாய் முன்கை தன்னை உமையிள மதலை காக்க
தறுகண் ஏறிடவே என்கைத் தலத்தை மாமுருகன் காக்க
புறம்கையை அயிலோன் காக்க பொறிக்கர விரல்கள் பத்தும்
பிறங்கு மால்மருகன் காக்க பின்முதுகைச் சேய் காக்க 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊண்நிறை வயிற்றை மஞ்ஞை ஊர்தியோன் காக்க, வம்புத்
தோள்நிமிர் சுரேசன் உந்திச்சுழியினைக் காக்க குய்ய
நாணினை அங்கி கௌரி நந்தனன் காக்க, பீஜ
ஆணியைக் கந்தன் காக்க, அறு முகன் குதத்தைக் காக்க 6

எஞ்சிடாது இடுப்பை வேலுக்கு இறைவனார் காக்க காக்க
அம்சகனம் ஓர் இரண்டும் அரன்மகன் காக்க காக்க
விஞ்சிடு பொருள் காங்கேயன் விளரடித் தொடையைக் காக்க
செம்சரண் நேச ஆசான் திமிரு முன் தொடையைக் காக்க 7

ஏரகத் தேவன் என்தாள் இருமுழங்காலும் காக்க
சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலை வாய்த்தே காக்க
நேருடைப்பரடு இரண்டும் நிகழ் பரங்கிரியன் காக்க
சீரிய குதிக்கால் தன்னைத் திருச்சோலை மலையன் காக்க 8

ஐயுறு மலையன் பாதத்து அமர் பத்து விரலும் காக்க
பையுறு பழநி நாத பரன், அகம் காலைக்காக்க
மெய்யுடல் முழுதும், ஆதி விமல சண்முகவன் காக்க
தெய்வ நாயக விசாகன் தினமும் என் நெஞ்சைக் காக்க 9

ஒலியெழ உரத்த சத்தத் தொடுவருபூதப் ரேதம்
பலிகொள் இராக்கதப்பேய் பலகணத்து எவை ஆனாலும்
கிலிகொள எனைவேல் காக்க கெடுபரர் செய்யும் சூன்யம்
வலியுள மந்த்ரதந்த்ரம் வருத்திடாது அயில்வேல் காக்க 10

ஓங்கிய சீற்றமே கொண்டு உவணிவில் வேல் சூலங்கள்
தாங்கிய தண்டம் எஃகம் தடி ப்ரசு ஈட்டி ஆதி
பாங்குடை ஆயுதங்கள் பகைவர் என்மேலே ஓச்சின்,
தீங்குசெய்யாமல் என்னைத் திருக்கைவேல் காக்க காக்க 11



ஓளவியமுளர் ஊன் உண்போர் அசடர்பேய் அரக்கர் புல்லர்
தெவ்வர்கள் எவர் ஆனாலும் திடமுடன் எனைமல் கட்டத்
தவ்வியே வருவாராயின் சராசரம் எலாம்புரக்கும்
கவ்வுடைச் சூரசண்டன் கை அயில் காக்க காக்க 12

கடுவிடப் பாந்தள் சிங்கம் கரடி நாய் புலிமா யானை
கொடிய கோள் நாய் குரங்கு கோல மார்ச்சலாம் சம்பு
நடையுடை எதனா லேனும் நான் இடர்ப் பட்டிடாமற்
சடிதியில் வடிவேல் காக்க சானவிமுளை வேல் காக்க 13

ஙகரமே போல் தழீஇ ஞானவேல் காக்க, வன்புள்
சிகரிதேள் நண்டுக் காலி செய்யன் ஏறு ஆலப் பல்லி
நகமுடைய ஓந்தி பூரான் நளிவண்டு புலியின் பூச்சி
உகமிசை இவையால், எற்கு ஓர் ஊறுஇலாது ஐவேல் காக்க 14

சலத்தில் உய்வன் மீன் ஏறு தண்டுடைத் திருக்கை, மற்றும்
நிலத்திலும் சலத்திலும் தான் நெடுந்துயர் தரற்கே உள்ள
குலத்தினால் நான் வருத்தம் கொண்டிடாது, அவ்வவ்வேளை
பலத்துடன் இருந்து காக்க பாவகி கூர்வேல் காக்க 15

ஞமலியம் பரியன் கைவேல் நவக்கிரகக் கோள் காக்க
சுமவிழி நோய்கள், தந்த சூலை, ஆக்கிராண ரோகம்,
திமிர்கழல் வாதம், சோகை சிரம் அடி கர்ணரோகம்
எமை அணுகாமலே பன்னிரு புயன் சயவேல் காக்க 16

டமருகத்து அடிபோல் நைக்கும் தலையிடி, கண்டமாலை
குமுறு விப்புருதி, குன்மம், குடல்வலி, ஈழை காசம்,
நிமிரொணா இருந்தும் வெட்டை நீர்ப்பிரமேகம் எல்லாம்
எமை அடையாமலே குன்று எறிந்தவன் கை வேல் காக்க 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணக்கம் இல்லாத பித்த எரிவு மாசுரங்கள், கைகால்
முணக்கவே குறைக்கும் குஷ்டம் மூலவெண்முளை தீ மந்தம்
சணத்திலே கொல்லும் சன்னி சாலம் என்று அறையும் இந்தப்
பிணிக்குலம் எனை ஆளாமல் பெரும் சத்தி வடிவேல் காக்க18

தவனமா ரோகம், வாதம் சயித்தியம், அரோசகம், மெய்
சுவறவே செய்யும் மூலச் சூடு, இளைப்பு, உடற்று விக்கல்
அவதிசெய் பேதி சீழ் நோய், அண்டவாதங்கள், சூலை
எவையும் என்னிடத்து எய்தாமல் எம்பிரான் திணிவேல் காக்க 19

நமைப்புறு கிரந்தி, வீக்கம் நணுகிடு பாண்டு, சோபம்
அமர்த்திடு கருமை வெண்மை ஆகுபல தொழுநோய் கக்கல்
இமைக்கு முன் உறுவலிப்போடு எழுபுடைப்ப கந்த ராதி
இமைப்பொழு தேனும் என்னை எய்தாமல் அருள்வேல் காக்க 20

பல்லது கடித்து மீசை படபடென்றே துடிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சம் காட்டியே உருட்டி நோக்கி
எல்லினும் கரிய மேனி எமபடர் வரினும் என்னை
ஒல்லையில் தார காரி ஓம் ஐம் ரீம் வேல் காக்க 21

மண்ணிலு மரத்தின் மீதும் மலையிலும் நெருப்பின் மீதும்
தண்ணிறை ஜலத்தின் மீதும் சாரிசெய் ஊர்தி மீதும்
விண்ணிலும் பிலத்தின் உள்ளும் வேறு எந்த இடத்தும் என்னை
நண்ணி வந்து அருளார் சஷ்டி நாதன்வேல் காக்க காக்க22

யகரமே போல் சூழ் ஏந்தும் நறும்புயன் வேல்முன் காக்க
அகரமே முதலாம் ஈராறு அம்பகன் வேல்பின் காக்க
சகரமோடு ஆறும் ஆனோன் தன்கைவேல் நடுவில் காக்க
சிகரமின் தேவ மோலி திகழ்ஐவேல் கீழ்மேல் காக்க 23



ரஞ்சித மொழி தேவானை நாயகன் வள்ளி பங்கன்
செஞ்சய வேல் கிழக்கில் திறமுடன் காக்க, அங்கி
விஞ்சிடு திசையின் ஞான வீரன் வேல் காக்க, தெற்கில்
எஞ்சிடாக் கதிர் காமத்தோன் இகலுடைக் கரவேல் காக்க24

லகரமே போல் காளிங்கன் நல்லுடல் நெளிய நின்று
தகரமர்த் தனமே செய்த சங்கரி மருகன் கைவேல்,
நிகழ் எனை நிருதி திக்கில் நிலை பெறக் காக்க, மேற்கில்
இகல் அயில் காக்க, வாயுவினில் குகன் கதிர்வேல் காக்க 25

வடதிசை தன்னில் ஈசன் மகன் அருள் திருவேல் காக்க
விடையுடை ஈசன் திக்கில் வேத போதகன் வேல் காக்க
நடக்கையில் இருக்கும் ஞான்றும் நவில்கையில் நிமிர்கை யில் கீழ்க்
கிடக்கையில் தூங்கு ஞான்றும் கிரிதுளைத் துளைவேல் காக்க 26

இழந்து போகாத வாழ்வை ஈயும் முத்தையனார் கைவேல்,
வழங்கும் நல் ஊண் உண் போதும் மால்விளையாட்டின் போதும்
பழஞ்சுரர் போற்றும் பாதம் பணிந்து நெஞ்சு அடக்கும் போதும்
செழும் குணத் தோடே காக்க திடமுடன் மயிலும் காக்க27

இளமையில் வாலிபத்தில் ஏறிடு வயோதிகத்தில்
வளர் அறுமுகச் சிவன் தான் வந்தெனைக் காக்க காக்க
ஒளிஎழு காலை முன் எல் ஓம்சிவ சாமி காக்க
தெளிநடு பிற்பகல் கால், சிவகுரு நாதன் காக்க 28

இறகுடைக் கோழித் தோகைக்கு இறை முன் இராவில் காக்க
திறலுடைச் சூர்ப் பகைத்தே திகழ் பின் இராவில் காக்க
நறவு சேர் தாள் சிலம்பன் நடுநிசி தன்னில் காக்க
மறை தொழு குழகன் எம் கோன் மாறாது காக்க காக்க29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனம் எனத் தொண்டரோடும் இணக்கிடும் செட்டி காக்க
தனிமையில் கூட்டந் தன்னில் சரவண பவனார் காக்க
நனி அநுபூதி சொன்ன நாதர்கோன் காக்க இத்தைக்
கனிவொடு சொன்ன தாசன் கடவுள் தான் காக்க வந்தே 30

## குன்றிலாடும் குமரன்

வேலவனே வேலவனே வேல்முருகா
வெற்றிவடி வேலனே பாலகனே வேல்முருகா
வேலைக்கையில் ஏந்தியாடும் வேலவனே வேல்முருகா
வினைகளெல்லாம் போக்கிடும் வேலவனே வேல்முருகா
பச்சைமயில் வாகனனே பாலகனே வேல்முருகா
அச்சந்தீர்த்து எமையாளும் ஆண்டவனே வேல்முருகா
கண்ணிரண்டும் உன்வடிவே காணவேண்டும் வேல்முருகா.

குன்றிலாடும் குமரனுக்குக் கோடிகோடி கும்பிடு
குழந்தைவடி வேலனுக்கு கோடிகோடி கும்பிடு
கந்தசாமிக் கடவுளுக்குக் கோடிகோடி கும்பிடு
கருணைவடி வேலனுக்குக் கோடிகோடி கும்பிடு
அம்பிகையின் பாலனுக்குக் கோடிகோடிகோடி கும்பிடு
ஆறுமுக வேலனுக்குக் கோடிகோடி கும்பிடு
கந்தசாமிக் கடவுளுக்குக் கோடிகோடி கும்பிடு
கருணைவடி வேலனுக்குக் கோடிகோடி கும்பிடு
அம்பிகையின் பாலனுக்குக் கோடிகோடி கும்பிடு
ஆறுமக வேலனுக்குக் கோடிகோடி கும்பிடு
வள்ளி மணாளனுக்குக் கோடிகோடி கும்பிடு
வடிவேல் முருகனுக்குக் கோடிகோடி கும்பிடு
சரவணத்து ஐயனுக்குக் கோடிகோடி கும்பிடு
சண்முக வேலனுக்குக் கோடிகோடி கும்பிடு.



# கந்தரநுபூதி

### காப்பு

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந் திடவே
பஞ்சக் கரவானை பதம் பணிவாம்.

### நூல்

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியானை சகோதரனே. 1

உல்லாச நிராகுல யோக விதச்
சல்லாப விநோதனு நீ யலையோ
எல்லாமற என்னை யிழந்த நலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே. 2

வானோ புனல்பார் கனல்மா ருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண் டவிடந்
தானோ பொருளா வதுசண் முகனே. 3

வளைபட் டகைம்மா தொடுமக் களெனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியுந்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகமாயை களைந்திட வல்ல பிரான்
முகமாறு மொழிந்து மொழிந் திலனே
அகமாடை மடந்தை யரென் றயருஞ்
சகமா யையுள்நின் றுதயங் குவதே. 5

திணியா னமனோ சிலைமீ துனதாள்
அணியா ரரவிந் தமரும் புமதோ
பணியா வெனவள்ளி பதம் பணியுந்
தணியா வதிமோ கதயா பரனே. 6

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவே லிறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே. 7

அமரும் பதிகே ளகமா மெனுமிப்
பிமரங் கெடமெய்ப் பொருள் பேசியவா
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம் பொருதா னவநா சகனே. 8

மட்டூர்குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டுசல் படும் பரிசென் றொழிவேன்
தட்டு டறவேல் சயிலத் தெறியும்
நிட்டுர நிராகுல நிர்ப் பயனே. 9

கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரி தலாரி யெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே. 10



கூகா வெனவென் கிளைகூ டியழுப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சல வேலவ நாலுகவித்
தியாகா சுரலோக சிகா மணியே. 11

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா இருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே. 12

முருகன் தனிவேல் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே. 13

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய் விழி நாசியொடுஞ் செவியாம்
ஐவாய் வழிசெல் லுமவா வினையே. 14

முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங் கவஎண் குணபஞ் சரனே. 15

பேராசை யெனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையே னுழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா சுரலோ கதுரந் தரனே. 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாமோ தியகல் வியுமெம் மறிவுந்
தாமே பெறவே லவர்தந் ததனாற் பூமேல்
மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே நடவீர் நடவீ ரினியே. 17

உதியா மரியா வுணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா
அதிகா அநகா அபயா அமரா
பதிகா வலசூர பயங் கரனே. 18

வடிவுந் தனமும் மனமுங் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா அயில்வே லரசே
மிடியென்றொரு பாவி வெளிப் படினே. 19

அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா வுபதேச முணர்த் தியவா
விரிதா ரணவிக் ரமவே ளிமையோர்
புரிதா ரகநா கபுரந் தரனே. 20

கருதா மறவா நெறிகாண எனக்
கிருதாள் வனசந் தரஎன் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூர விபாட ணனே. 21

காளைக் குமரே சனெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் குழல் வள்ளி பதம்பணியும்
வேளைச் சுரபூ பதி மேருவையே. 22



அடியைக் குறியா தறியா மையினால்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே. 23

கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வே னருள் சேரவு மெண்ணுமதோ
சூர்வே ரொடு குன்று தொளைத்தநெடும்
போர்வே லபுரந் தரபூ பதியே. 24

மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந்
தையோ அடியே னலையத் தகுமோ
கையோ அயிலோ கழலோ முழுதுஞ்
செய்யோய் மயிலே றியசே வகனே. 25

ஆதார மிலே னருளைப் பெறவே
நீதா னொருசற்று நினைந் திலையே
வேதாகம ஞான விநோத மனோ
தீதா சுரலோக சிகா மணியே. 26

மின்னே நிகர்வாழ் வைவிரும் பியயான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே யருளே
மன்னே மயிலே றியவா னவனே. 27

ஆனா அமுதே அயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானாகிய வென்னை விழுங்கி வெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே. 28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லே யெனுமா யையி லிட்டனைநீ
பொல்லே னறியாமை பொறுத் திலையோ
மல்லே புரி பன்னிரு வாகுவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே. 29

செவ்வா னுருவிற் றிகழ்வே லவனன்
றொவ்வா ததென வுணர்வித் ததுதான்
அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே. 30

பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யென என்னை விதித்தனையே
தாழ்வா னவைசெய் தனதா முளவோ
வாழ்வா யினிநீ மயில்வா கனனே. 31

கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரிவேடர் குலப் பிடிதோய்
மலையே மலை கூறிடு வாகையனே. 32

சிந்தா குலவில் லொடுசெல் வமெனும்
விந்தா டவியென்று விடப் பெறுவேன்
மந்தா கினிதந்த வரோ தயனே
கந்தா முருகா கருணா கரனே. 33

சிங்கார மடந்தையர் தீநெறி போய்
மங்காம லெனக்கு வரந் தருவாய்
சங்க்ராம சிகா வலசண் முகனே
கங்கா நதி பால க்ருபாகரனே. 34



விதிகாணு முடம்பை விடா வினையேன்
கதிகாண மலர்க்கழ லென் றருள்வாய்
மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின்
துதியா விரதா சுரபூ பதியே. 35

நாதா குமரா நமவென் றரனார்
ஓதா யெனவோ தியதெப் பொருள்தான்
வேதா முதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே. 36

கிரிவாய் விடுவிக் ரம வேளிமையோர்
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையா மறிவால்
அரிவா யடியோடு மகந் தையையே. 37

ஆதாளியை யொன் றறியே னையறத்
தீதாளியை யாண் டதுசெப் புமதோ
கூதாள கிராத குலிக் கிறைவா
வேதாள கணம் புகழ்வே லவனே. 38

மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவேடனை யென்று முடிந் திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவ சங்கர தேசிகனே. 39

வினையோட விடுங் கதிர்வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங் கிடவோ
சுனையோ டருவித் துறையோடு பசுந்
தினையோ டிதனோடு திரிந் தவனே. 40



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதே சிகனே. 41

குறியைக் குறியா துகுறித் தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே. 42

தூசா மணியுந் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா அநுபூதி பிறந் ததுவே. 43

சாடுந் தனிவேல் முருகன் சரணஞ்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடுஞ் சுரர்மா முடிவே தமும் வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே. 44

கரவா கியகல்வி யுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருளீ குவையோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோக தயா பரனே. 45

எந்தா யுமெனக் கருள்தந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே. 46



ஆறா றையுநீத் ததன்மேல் நிலையைப்
பேறா வடியேன் பெறுமா றுளதோ
சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறா வுலகங் குளிர்வித் தவனே. 47

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும்வே லவனே. 48

தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்னம் மொருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னங் களையும் க்ருபைசூழ் சுடரே. 49

மதிகெட்டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திர ஞான சுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே. 50

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே. 51



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகா விஷ்ணு

அருமறை முதல்வனை ஆழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்
திருமகள் தலைவனைத் தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம்.

*(வில்லிபுத்தூரர்)*

பச்சை மாமலை போல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர் தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே.

*(தொண்டரடிப் பொடியாழவார்)*

### மஹா விஷ்ணு ஸ்லோகம்

ஸாந்தா காரம் புஜங்க சயனம் பத்மநாபம் ஸுரேசம்
விஸ்வாதாரம் ககன ஸத்ருஸம் மேகவர்ணம் சுபாங்கம்
லக்ஷமீ காந்தம் கமலநயனம் யோகி பிர்த்யான கம்யம்
வந்தே விஷ்ணும் பவபயஹரம் ஸர்வலோகைக நாதம்.

அச்சுதம் கேசவம் ராம நாராயணம்
கிருஷ்ண தாமோதரம் வாசுதேவம் ஹரிம்
ஸ்ரீ தரம் மாதவம் கோபிகா வல்லபம்
ஜானகீ நாயகம் ராமசந்தரம் பஜே.



வாசுதேவ சுதம் தேவம், கம்ஸ சாணூர மர்தனம்
தேவகீ பரமானந்தம், கிருஷ்ணம் வந்தே ஜகத்குரும்
மூக்கம் கரோதி வாச்சாலம் பங்கும் லங்கயதே கிரிம்
யத்க்ருபா தமஹம் வந்தே பரமானந்த மாதவம்.

### கோகுல நந்தன கோபாலா

கோபாலா கோபாலா கோகுல நந்தன கோபாலா
நந்த முகுந்தா கோபாலா நவநீத சோரா கோபாலா
வேணுவிலோலா கோபாலா விஜயகோபாலா கோபாலா
ராதாக்ருஷ்ணா கோபாலா - ரமணீயவேஷ கோபாலா
காளிய மர்த்தனகோபாலா கௌஸ்துப பூஷண கோபாலா
முரளிலோலா கோபாலா முசுகுந்தப் பிரியா கோபாலா.

### ஆனந்த சாகரா முரளீதரா

ஆனந்த சாகரா முரளீதரா
மீரா ப்ரபு ராதேஸ்யாம வேணு கோபாலா. *(ஆனந்த)*

நந்த யசோதா ஆனந்த கிஷோரா
ஜெய் ஜெய் கோகுல பாலா ஜெய் ராஜகோபாலா.
*(ஆனந்த)*

கௌசல்யா சுப்ரஸா ராமச்சந்த்ரா
சீதா மனோகரா ராகவேந்த்ரா
தீன தயாளோ பரி பூர்ண க்ருபாளோ
ஜெய் ஜெய் பக்த வத்ஸல ஜெய் ரவிகுலராமா.
*(ஆனந்த)*

ராம ராம ராம ராம ராம ராம ராம்
ராம ராம ராம ராம ராம ராம ராம்
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓம் நமோ நாராயணாய

ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய
ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய.

பிறவிதோறும் வினைமிகுந்து வருத்துகின்ற இருளினை
அகல வைக்கும் அருண தீபம் ஓம் நமோ நாராயணாய
ஊறு துன்பம் உடல் வியாதி ஊழ் விடாத வறுமையும்
ஆற வைக்கும் அருமருந்து ஓம் நமோ நாராயணாய. *(ஓம்)*

ஏக்கமாம் குழிக்குள்ளே இருண்டுருண்ட வேளையில்
தூக்கிடும் துணைக் கரங்கள் ஓம் நமோ நாராயணாய
சோக மோக தாகம்மீறிச் சோர்வு விஞ்சும் வேளையில்
கருணையான புனித கங்கை ஓம் நமோ நாராயணாய. *(ஓம்)*

ஜனன மரண பயதரங்கள் ஸாகரங்கள் கடத்தியே
உடனே வந்து காக்கும் ஓடம் ஓம் நமோ நாராயணாய
கடு கடுத்து முனை தொடுத்து காலசூலம் சீறும் நாள்
உயிர் தடுத்த கவசமாகும் ஓம் நமோ நாராயணாய. *(ஓம்)*

சிந்தையாவும் தெளியவைக்கும் சீருடனே வாழவைக்கும்
விந்தை மிகு நாமம் ஒன்றே ஓம் நமோ நாராயணாய
உலகெலாம் முழங்கவேண்டும் ஓம் நமோ நாராயணாய
மனதில் என்றும் இருக்கவேண்டும் ஓம் நமோ நாராயணா. *(ஓம்)*

ராதா ஸமேத க்ருஷ்ணா - க்ருஷ்ணா
ராதா ஸமேத க்ருஷ்ணா - க்ருஷ்ணா.

நந்த குமார நவநீத சோர
ப்ருந்தாவன கோவிந்த முராரே. *(ராதா)*



கோபி மனோஹர - கோகுல வாஸா
சோபித முரளி - கனா விலாஸா
ஸுந்தர மன்மத கோடிப்ரகாசா. *(ராதா)*

**ஓம் நாராயணாய வித்மஹே**
**வாஸுதேவாய தீமஹி**
**தன்னோ விஷ்ணுப் ப்ரசோதயாத்.**

## க்ருஷ்ணா முகுந்தா

க்ருஷ்ணா முகுந்தா முராரே - ஜய
க்ருஷ்ணா முகுந்தா முராரே - ஜய.

கருணா ஸாகார - கமலா நாயக
கனகாம் பரதாரீ - கோபாலா. *(க்ருஷ்ணா)*

காலிய மர்த்தன - கம்ஸ நிஸுதன
கமலா யத நயனா கோபாலா. *(க்ருஷ்ணா)*

கோபி ஜனமன - மோஹன ல்யாபக
குவலய தல நீலா - கோபாலா. *(க்ருஷ்ணா)*

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ் செந்நெல் ஊடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்.
*(ஆண்டாள்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயர்கள் பாலா கோவிந்தா

கோவிந்தா கோவிந்தா யதுகுல நந்தன கோவிந்தா
கோவிந்தா கோவிந்தா யதுகுல நந்தன கோவிந்தா.

ஆயர்கள் பாலா கோவிந்தா
அநாத ரட்சக கோவிந்தா
தேவகி நந்தன கோவிந்தா
தேவாதி தேவா கோவிந்தா.

கார்மேக வண்ணா கோவிந்தா
கருணைக் கடலே கோவிந்தா
நந்த குமாரா கோவிந்தா
நவநீத கிருஷ்ணா கோவிந்தா.

முரளீ தரனே கோவிந்தா
முகுந்தா மாதவா கோவிந்தா
யாசோதை பாலா கோவிந்தா
யாதவர்க் கொழுந்தே கோவிந்தா.

தசரத நந்தனா கோவிந்தா
தசாவதாரா கோவிந்தா
பாண்டுரங்கா கோவிந்தா
பண்டரிநாதா கோவிந்தா.

பக்தவத்ஸல கோவிந்தா
பரம தயாளா கோவிந்தா
சீதா ராமா கோவிந்தா
ராதே சியாம கோவிந்தா.

அமரர்கள் ஏறே கோவிந்தா
எம் அடைக்கலப் பொருளே கோவிந்தா
வாசுதேவா கோவிந்தா
உன்ன வணங்குகின்றேன் கோவிந்தா.

கோவிந்தா கோவிந்தா யதுகுல நந்தன கோவிந்தா
கோவிந்தா கோவிந்தா யதுகுல நந்தன கோவிந்தா.



## திருமால் கோயிலுக்கு வாருங்கள்

திருமால் கோயிலுக்கு வாருங்கள் அவன்
திருநாமம் சொல்லிச் சொல்லிப் பாடுங்கள்
நெடுமால் சந்நிதியில் கூடுங்கள் அவன்
நிறைவான வாழ்வளிப்பான் நம்புங்கள். *(திருமால்)*

பாற்கடல் பள்ளிகொண்ட பரந்தாமனே
ராமனாய் வடிவெடுத்தான் நமக்காகவே
கல்லினைப் பெண்ணாக்கி உயிரூட்டினான்
கருணையின் வடிவென்று பெயர்வாங்கினான். *(திருமால்)*

பாரினில் தர்மம் என்றும் நிலைத்திடவே
பகவத் கீதை தந்தான் அருட்கடலே
கூப்பிட்ட குரல் கேட்டு வருவானவன்
கும்பிட்டுத் தொழு வோர்க்கு அருள்வானவன். *(திருமால்)*

சங்குடன் சக்கரத்தை சுமந்திருப்பான்
சகஸ்ர நாமத்தில் குளிர்ந்திருப்பான்
கருநீல நிறத்தினிலும் ஜொலிப்பானவன்
நாராயணா அன்பின் வடிவானவன். *(திருமால்)*

## கோவிந்த கிருஷ்ண ஜெய்

கோவிந்த கிருஷ்ண ஜெய்
கோபால கிருஷ்ண ஜெய்
கோபால பால பால ராதா
கிருஷ்ண ஜெய்.

கிருஷ்ண ஜெய் கிருஷ்ண ஜெய்
கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஜெய்
கிருஷ்ண ஜெய் ராதா கிருஷ்ண ஜெய்
ராமா கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஜெய்.
*(கோவிந்த)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபிக மால ஹாரி பியாரி
மாயி மீரா மன விஹாரி
மதன மோகன முரளி தாரி
கிருஷ்ண ஜெய். *(கோவிந்த)*

## கோகுலத்தின் நாயகனே

கோகுலத்தின் நாயகனே கிருஷ்ணா கிருஷ்ணா
கோபியரைக் கொள்ளை கொண்டாய் கிருஷ்ணா கிருஷ்ணா
காவியத்தின் நாயகனே கிருஷ்ணா கிருஷ்ணா
கழலடியே சரணடைந்தேன் கிருஷ்ணா கிருஷ்ணா

நீல மேக சியாமளனே கிருஷ்ணா கிருஷ்ணா
நிதமும் உனைத்தொழுதிடுவேன் கிருஷ்ணா கிருஷ்ணா
துளசி மணி மார்பனே கிருஷ்ணா கிருஷ்ணா
துஷ்டர்களை அழிப்பவனே கிருஷ்ணா கிருஷ்ணா

சங்கு சக்கரம் தரித்தவனே கிருஷ்ணா கிருஷ்ணா
சாமியுனைப் பாடிடுவேன் கிருஷ்ணா கிருஷ்ணா
பொங்கும் கடல் நடுவினிலே கிருஷ்ணா கிருஷ்ணா
பொய்தூக்கம் கொள்வதேனோ கிருஷ்ணா கிருஷ்ணா

தேவகியின் சிங்கமே கிருஷ்ணா கிருஷ்ணா
தேடிவந்து ஆண்டு கொள்வாய் கிருஷ்ணா கிருஷ்ணா
மாதவனே கேசவனே கிருஷ்ணா கிருஷ்ணா
என்மனதில் குடி கொண்டவனே கிருஷ்ணா கிருஷ்ணா

குழலூதும் கண்ணனே கிருஷ்ணா கிருஷ்ணா
குவலயத்தைக் காப்பவனே கிருஷ்ணா கிருஷ்ணா
ராதையின் மன்னவனே கிருஷ்ணா கிருஷ்ணா
ரகுவம்ச ராமனே கிருஷ்ணா கிருஷ்ணா



ஆயர்தம் குலக்கொழுந்தே கிருஷ்ணா கிருஷ்ணா
ஆனிரை மேய்த்தவனே கிருஷ்ணா கிருஷ்ணா
வெண்ணெய் உண்ட கள்வனே கிருஷ்ணா கிருஷ்ணா
மண்ணை உண்ட மாயனே கிருஷ்ணா கிருஷ்ணா

திருமலை மேல் இருப்பவனே கிருஷ்ணா கிருஷ்ணா
தீராவினை தீர்ப்பவனே கிருஷ்ணா கிருஷ்ணா
ஏங்கி உன்னைத் தேடுகின்றேன் கிருஷ்ணா கிருஷ்ணா
ஏழைமுகம் பார்த் தருள்வாய் கிருஷ்ணா கிருஷ்ணா

ஆதியே பரம் பொருளே கிருஷ்ணா கிருஷ்ணா
சோதியே சுடர் விளக்கே கிருஷ்ணா கிருஷ்ணா
கார்முகிலே கடல் வண்ணா கிருஷ்ணா கிருஷ்ணா
காட்சிதந்து எனை ஆள்வாய் கிருஷ்ணா கிருஷ்ணா

## ஓம்... ஓம்... ஓம்...

ஓம்... ஓம்... ஓம்... ஓம்...
அமர ஜீவிதம் ஸ்வாமி அமுதவாசகம்
பதித பாவனம் ஸ்வாமி பக்த சாதகம் ஓம்...
முரளி மோஹனம் ஸ்வாமி அசுர மர்த்தனம்
கீத பேர்தகம் ஸ்வாமி ஸ்ரீ கிருஸ்ண மந்திரம் ஓம்...
நளின தைவதம் ஸ்வாமி மதனரூபகம்
நாக நர்த்தனம் ஸ்வாமி மான வஸ்தகம்
பஞ்ச சேவகம் ஸ்வாமி பாண்ட்டிய சாயகம்
கீத போதகம் ஸ்வாமி ஸ்ரீ கிருஷ்ண மந்திரம் ஓம்...
சந்திய பங்கஜம் ஸ்வாமி அந்நிய புஷ்பகம்
சர்வ ரக்ஷகம் ஸ்வாமி தர்மதத்துவம்
நாக பந்தணம் ஸ்வாமி நாகவல்லகம்
கீத போதகம் ஸ்வாமி ஸ்ரீ கிருஷ்ண மந்திரம்
ஓம்... ஓம்... ஓம்... ஓம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஜ கோவிந்தம்

பஜகோவிந்தம் பஜகோவிந்தம் - கோவிந்தம்பஜ மூடமதே
பஜகோவிந்தம் பஜகோவிந்தம் - கோவிந்தம்பஜ மூடமதே.

பகவான் கண்ணன் பதமே சொந்தம்
அறிவாய் உன்தன் பாடமதே. *(பஜகோவிந்தம்)*

உலகினில் பலகோடி உயிர்வகை உருவாகும்
நிலையன்று விளையாடி நிழலென்று தெளிவாகும்
ஆசைகள் அறியாத அருள் வழி தேடு
கீதையின் நாயகன் கிருஷ்ணனின் துதிபாடு. *(பஜகோவிந்தம்)*

நானெனும் அஹங்காரம் - எனது எனும் மமகாரம்
ஞானத்தின் எதிர்வேதம் - ஊனத்தின் அடையாளம்
பிறவிகள் வாராத பேரின்ப நிலைதேடு
குழலிசை கோவிந்தன் புகழினை தினம்பாடு. *(பஜகோவிந்தம்)*

**நாராயண ஓம் நமச்சிவாய என்னும்**
**சாரமதாகிய தாரகமந்திரம்**
**ஸ்ரீ ராம ஜெயராம் ஜெய ஜெய ராம் ஓம்.**

## கோவிந்தா ஹரி கோவிந்தா

கோவிந்தா ஹரி கோவிந்தா ஹரி
கோபாலா ஹரி கோபாலா.

ராமனும் நீயே கிருஷ்ணனும் நீயே
கோபாலன் நீயே கோவிந்தன் நீயே
ஹரியும் நீயே ஹரனும் நீயே
அகிலம் நீயே அனைத்தும் நீயே. *(கோவிந்தா)*



அன்னை யசோதையின் அற்புதன் நீயே
ஆயர் குலத்து ஆதவன் நீயே
ஆயர் பாடியில் வாழ்ந்தவன் நீயே
கோபியர் கொஞ்சிடும் கோபாலன் நீயே. *(கோவிந்தா)*

தேவகி மைந்தனாய் வந்தவன் நீயே
தேவர்கள் போற்ற வாழ்ந்தவன் நீயே
கம்ஸனைக் கொன்ற கற்பகம் நீயே
கண்ணனாய் வந்து காத்திடுவாயே. *(கோவிந்தா)*

## நாராயணஹரி நாராயணஹரி

நாராயணஹரி நாராயணஹரி
நாராயணஹரி நாராயணஹரி
நாராயணஹரி நாராயணஹரி
நாராயணஹரி நாராயணஹரி.

மோதரையில் வாழ் நாராயணா
திருவெங்கட ரமணா நாராயணா
அற்புத ரூபனே நாராயணா - எங்கள்
ஆபத்பாந்தவா நாராயணா. *(நாராயணஹரி)*

அலைகடல் துயிலும் நாராயணா
ஆண்டாள் துணையே நாராயணா
ஹரி ஹரி ஹரி என நாராயணா - என்னை
ஆண்டு கொள்வாய் நாராயணா. *(நாராயணஹரி)*

ஹரி ஹரன் ஆனாய் நாராயணா
ராம ரூபம் ஆன்ாய் நாராயணா
ராமனும் நீயே நாராயணா - சின்ன
கிருஷ்ணனும் நீயே நாராயணா. *(நாராயணஹரி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ ராம் ஜெயராம் ஜெய ஜெய ராம்

ஸ்ரீ ராம் ஜெயராம் ஜெய ஜெயராம்

நாராயண ஓம் நம சிவாய வெனுஞ்
சாரமதாகிய நல்ல தாரக மந்திரம். *(ஸ்ரீராம்)*

நாரதர் வால்மீகி முனிவர் நவின்றது
ஆரமுதாய் அன்பர்க்கு ஆனந்தம் ஈன்றது. *(ஸ்ரீராம்)*

காமாதீ கள்வரைக் கட்டுடனொழிப்பது
நேம நிஷ்டையுள்ள நெஞ்சினில் செழிப்பது. *(ஸ்ரீராம்)*

பக்தி வைராக்கியமும் பரந்த ஸமரசமும்
சுத்த சச்சிதானந்த ஸித்தியும் அளிப்பது. *(ஸ்ரீராம்)*

## கோகுலத்திலே வளர்ந்தாய்

கோகுலத்திலே வளர்ந்தாய் கண்ணா கண்ணா
ஆகுலம் தழைக்க வந்தாய் கண்ணா கண்ணா
யோகு செய்யும் சிந்தையர் கண்ணா கண்ணா
நோகுமுன் களைவாய் துயர் கண்ணா கண்ணா

அஞ்சல் என்றேயுரைப்பாய் கண்ணா கண்ணா
சஞ்சலமே தீர்த்து வைப்பாய் கண்ணா கண்ணா
பஞ்சைப் போல் உன்றினைப்பால் கண்ணா கண்ணா
தஞ்சமென்றே என்னை வைப்பாய் கண்ணா கண்ணா

தேவர்களும் இன்புறவே கண்ணா கண்ணா
தவசியர் குறையறவே கண்ணா கண்ணா
தேவகியின் அன்புருவே கண்ணா கண்ணா
அவனியின் ஸத்குருவே கண்ணா கண்ணா



இன்ப மனம் கோகுலமே கண்ணா கண்ணா
அன்பருள்ளம் கோகுலமே கண்ணா கண்ணா
தூயமனம் கோகுலமே கண்ணா கண்ணா
சேயருள்ளம் கோகுலமே கண்ணா கண்ணா

## ஸ்ரீ ராமன்

அன்பின் வழியில் யார் நடந்தாலும்
அவனும் ராமனும் ஒன்று
அழுபவர் கண்களை யார் துடைத்தாலும்
அவனும் ராமனும் ஒன்று. *(அன்பின்)*

பெற்றவர் உள்ளம் பெருமிதம் கொள்ளும்
பிள்ளையும் ராமனும் ஒன்று
மற்றவர்க் கெல்லாம் நல்வழி காட்டும்
மனிதனும் ராமனும் ஒன்று. *(அன்பின்)*

ஒருமணம் புரிந்து நிறைவுடன் வாழும்
ஒருவனும் ராமனும் ஒன்று
அறநெறி கருணை அமைந்தவன் எவனோ
அவனும் ராமனும் ஒன்று. *(அன்பின்)*

கருணைக் கடலே ஸ்ரீராமா
கவலைகள் தீர்ப்பாய் ஸ்ரீராமா
கலங்கும் நெஞ்சம் உடையவர்க்கு
கலங்கரை விளக்கானாய் ஸ்ரீராமா.

கோசலை மகனே ஸ்ரீராமா
கோதண்ட மானாய் ஸ்ரீராமா
சஞ்சலம் கொடுத்த அடியவர்க்கு
தஞ்சம் அருள்வாய் ஸ்ரீராமா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரகுகுல திலகா ஸ்ரீராமா
தசரதன் மைந்தா ஸ்ரீராமா
ஜானகி மணாளா ஸ்ரீராமா
சரணம் சரணம் ஸ்ரீராமா.

இலக்ஷமணன் சேவிக்கும் ஸ்ரீராமா
இலட்சுமி மனோகர ஸ்ரீராமா
சுந்தர வதனா ஸ்ரீராமா
கம்சப் பரமா ஸ்ரீராமா.

## ஆஞ்சநேயர் பாடல்கள்

ஆஞ்சநேயா ஓடி ஓடி வா வா உன்னை
ஆராதித்தோம் அசைந்து ஆடி வா வா
வெற்றிலை மாலை அணிந்து நீயும் வாவா மக்கள்
வெற்றியுடன் பணிந்து நின்றோம் வாவா. *(ஆஞ்ச)*

அன்பர் உள்ளம் அறிந்தவனே வாவா எங்கள்
அற்புதனே தற்பரனே வாவா ராமனை
நெஞ்சத்தில் கொண்டவனே வாவா உன்னை
ஆடிப் பாடிப் பரவுகின்றோம் வாவா. *(ஆஞ்ச)*

அற்புதனே ஆனந்தனே வாவா - எங்கள்
கலியுக மாருதியே வாவா - இந்த
மணிகொண்ட வாலை ஆட்டி வாவா
மக்கள் துயர்தீர்த்திடவே வாவா. *(ஆஞ்ச)*

ராம பஜனை செய்ய நீயும் வாவா
ராம ராம ராம ராம ராம் ராம் - ஸ்ரீ
ராம ராம ராம ராம ராம் ராம்
ராம ராம ராம ராம ராம் ராம் - ஸ்ரீ
ராம ராம ராம ராம ராம் ராம.



## சத்யம் காக்கும் மாருதி

சத்யம் காக்கும் மாருதி சபலம் தீர்க்கும் மாருதி
நித்யம் எங்கள் நாவிலே நிற்கும் தெய்வம் பாருதி
மண்ணில் வந்த மாருதி கண்ணில் கண்ட மாருதி
காவல் தெய்வமாகவே வாழும் எங்கள் மாருதி

சீரஞ்சீவி நாதனே வாருமய்யா
சஞ்சீவி மலை தாங்கி வாருமய்யா
காற்றோடு காற்றாக வாருமய்யா
கண்ணீரை நீர் மாற்ற வாருமய்யா. *(சீரஞ்சீவி)*

நாள்தோறும் நெய்தீபம் ஏற்றினோம்
ராம நாமம் எந்நாளும் பாடினோம்
பூமாலை பாமாலை சூடினோம்
உந்தன் பாத மலர்கள் போற்றி வாழ்கின்றோம். *(சீரஞ்சீவி)*

நீயுமின்றி யார் எம்மைக் காப்பதோ
நாதியின்றி வாடும் நெஞ்சை மீட்பதோ
தாயைப் போல வந்து காவல் தந்திடு
தூய்மையான நெஞ்சில் வந்து வாழ்ந்திடு. *(சீரஞ்சீவி)*

கண்கள் ரெண்டில் பொங்குகின்ற நீரிலே உன்
கால்கள் தன்னைக் கழுவ வேண்டும் ஐயனே
பாதம் பட்ட மண்எடுத்துப் பூசியே என்
பாவம் யாவும் தீர்க்க வேண்டும் ஐயனே. *(சீரஞ்சீவி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறுதல் நீ தாராய்

ஆஞ்சநேயனே ஓடிவாராய்
ஆறுதல் நீ தாராய்
பாசவலைக்குள்ளே போராடி
உன்னை மறந்தேனே. *(ஆஞ்சநேயனே*

பூப்போன்ற என் மனசு
புயலாய் போன தய்யா
புன்னகை என்பதை நான் மறந்தேன்
புண்பட்டுப் போனதய்யா மனம். *(ஆஞ்சநேயனே*

உன்னையே நாடியே ஓடிவந்தேன்
உண்மையைக் காட்டுமைய்யா
உறுதியான என் மனத்தினிலே
கல் ஒன்று விழுந்ததய்யா. *(ஆஞ்சநேயனே)*

ஆறுதல் என்பதை நானறியேன்
ஆனந்தம் என்பதை நான் அறியேன்
அன்பெனும் பாதையைக் காட்டிடுவாய்
அருளை வழங்கிடுவாய். *(ஆஞ்சநேயனே)*

## அஞ்சனாவின் செல்வன்

நினைக்க நினைக்க சந்தண வாசம் வீசுது
துதிக்க துதிக்க என்மன சோகம் விலகுது. *(நினைக்க)*

உலகம் எங்கும் வாழுகின்ற வாயு மைந்தனே
உனது கீர்த்தி அழிவதில்லை ஆஞ்சநேயனே
சுகங்கள் யாவும் துறந்து வாழும் சத்யசீலனே
தவங்கள் செய்து நலங்கள் சேர்க்கும் அன்பு தெய்வமே.
*(நினைக்க)*



சித்தம் யாவும் ராம நாமம் கொண்ட தூதனே
சேது கரையில் ஜெபங்கள் செய்யும் பக்தஹனுமானே
வானில் பறந்து கடலைக் கடந்து விரைந்த வீரனே
அன்னை சீதைசோகம் தீர்த்த சொல்லின் செல்வனே.
*(நினைக்க)*

அஞ்சனாவின் செல்வன் வீர தீரன் நீயப்பா
நெஞ்சம் தோறும் வாழும் காவல் தெய்வம் தானய்யா
உன்னை நம்பும் உள்ளம் தன்னில் தோல்வி ஏதய்யா
அன்னை தந்தை யாவும் நீயே நம்பினேன் ஐயா.
*(நினைக்க)*

## அழகான ஆஞ்சநேயா

அழகான ஆஞ்சநேயா அருள்தரவா என்
மனதோடு விளையாடும் மாருதிராஜா. *(அழகான)*

வால்மீதில் கிண்கிணி மணியாடவா ஆ என்
வினை தீர்க்க எந்நாளும் விரைந்தோடிவா. *(அழகான)*

ஸ்ரீராமன் சீதாவின் உயிர் சோதரா ஆ அவன்
வைகுண்டம் அழைத்த போதும் போகாததேன். *(அழகான)*

பலராமன் அகந்தைகள் நீ போக்கினாய்
பல சாலி அவன் என்ற பெயர் மாற்றினாய். *(அழகான)*

அன்போடு அமைதி தரும் ஆஞ்சநேயனே
அன்பர் துயர் தீர்த்திடவே ஓடோடி வா. *(அழகான)*

## வருவாயே வருவாயே

வருவாயே வருவாயே வருவாயே வாயுகுமாரா
அருள்வாயே வானர சூரா
ராம ராம ஜெய ராஜாராம்
ராம ராம ஜெய ராஜாராம். *(வருவாயே)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிலையில் ஒரு மாலை - கொடி
வெற்றிலையில் மலர் மாலை - அதை
சுற்றிய அழகும் சூரிய அழகும்
சுந்தர மாகுது ஐயா - மனம்
சுகமாய் நிறையுது ஐயா. *(வருவாயே)*

மேன்மை மிகு பசு வெண்ணெய் - அதை
மேனியில் ஏற்றிடும் உன்னை - என்
கண்ணிமையும் இமையாதொரு நிலையுடன்
கண்கள் உருகுது ஐயா - உன்
கருணை பெருகுது ஐயா. *(வருவாயே)*

அளவில்லாப் பூமாலை அதில் அதிசயம் ஏதுமில்லை - ஒரு
குழையுடன் கூடிய வடைகளைத் தொடுத்து
தோள்களில் சூட்டிடு ஐயா - பின்
துளி அதில் தந்திடு ஐயா. *(வருவாயே)*

சுந்தரச் சுடர் போல் நெஞ்சம் - நீ
பிறந்தாய் சூரிய வம்சம் - உன்
மந்திர மார்பினில் சந்தணம் பூசிட என்
மனம் குளிருது ஐயா - புவி வாழ்வும் மணக்குது ஐயா.
*(வருவாயே)*

## பத்துப்படி ஏறிவந்தேன்

பத்துப்படி ஏறிவந்தேன் ஆஞ்சநேயனே
வெற்றி தர வேண்டுமய்யா ஆஞ்சநேயனே
பக்தியுடன் பாடிவந்தேன் ஆஞ்சநேயனே
முத்திதர வேண்டுமய்யா ஆஞ்சநேயனே. *(பத்துபடி)*



கற்றதிந்தக் கையளவே ஆஞ்சநேயனே உன்னால்
பெற்றதிந்த வாழ்க்கையய்யா ஆஞ்சநேயனே
முத்துமணி மாலையில்லை ஆஞ்சநேயனே
மொத்தத்தில் நான் ஏழையய்யா ஆஞ்சநேயனே
பஞ்சமுக தரிசனமே ஆஞ்சநேயனே - கண்ணால்
கண்டு மனம் குளிர வந்தேன் ஆஞ்சநேயனே. *(பத்துபடி)*

வஞ்சமற்ற மனம் படைத்தாய் ஆஞ்சநேயனே
ஆசை விதை ஏன் விதைத்தாய் ஆஞ்சநேயனே
பொய்யுரைத்து வாழ்ந்தறியேன் ஆஞ்சநேயனே - என்
மெய்ப்பொருளும் உன் அருளே ஆஞ்சநேயனே
மூச்சிருக்கும் நாள் வரைக்கும் ஆஞ்சநேயனே - உன்
பேச் செனக்கு வேதமய்யா ஆஞ்சநேயனே. *(பத்துபடி)*

## ஆஞ்சநேயன் வருவான்

ஆஞ்சநேயன் வருவான் - எமக்கு
ஆறுதல் தினம் தருவான். *(ஆஞ்ச)*

வடைமாலை சாற்றி வந்தால்
வளமுடன் வாழவைப்பான்
வெற்றிலை மாலை சாற்றிவந்தால்
வெற்றிகள் பல தருவான். *(ஆஞ்ச)*

மணிகொண்ட வாலினிலே நீ
பொட்டுவைத்துப் பூஜை செய்தால்
புண்ணியம் கோடி தந்து
புகழுடன் வாழவைப்பான். *(ஆஞ்ச)*

ராமஜெயம் சொன்னால் - உன்தன்
வாழ்வினில் ஜெயம் தருவான்
ராம நாமம் சொல்பவரின்
வாழ்வினிலே ஒன்றிணைவான். *(ஆஞ்ச)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராமர் கதை

ராமர் கதை எழுந்து வரும் கோவில் மன்றத்தில்
ஆவலோடு அனுமான் வந்தான் பக்தர் கூட்டத்தில்
கதையைக் கேட்டதும் அவன் மகிழ்ச்சி கொள்கிறான்
ராம நாமத்தால் அவன் பணிவு கொள்கின்றான். *(ராம)*

மிதிலை நகர் கன்னிமாடம் அன்னை ஜானகி
அண்ணல் ராமன் கண்கலந்தான் தெய்வ பூங்கொடி
வில்லை வளைத்ததும் அனுமான்துள்ளிக் குதிக்கின்றான்
தன்னை மறந்தவன்கதையை எண்ணிக் களிக்கின்றான்.
*(ராம)*

கூனிவடிவில் விதிசிரிக்க கானகப் பயணம்
நங்கையோடும் தம்பியோடும் ராமனின் பயணம்
ஊரும் அழுது அனுமன் கண்ணும் கசிந்தது
தன்னை மறந்தவன் கதையில் நெஞ்சம் கரைந்தது. *(ராம)*

மானை வேண்டி மங்கை நின்றாள் அண்ணல் தேடினான்
மாய மானின் சூழ்ச்சியாலே தம்பி ஓடினான்
கோட்டைத் தாண்டினாள் சீதை கேட்டைத் தாங்கினாள்
அரக்கர் செய்கையைக்கேட்டு அனுமன் பொங்கினான். *(ராம)*

நீலக கடலைத் தாண்டி அனுமன் இலங்கை செல்கின்றான்
அன்னை சீதை இருக்கும் நிலையைக் கண்டு வருகின்றான்
நிறைவு கொள்கின்றான் அனுமன் நிறைவு கொள்கின்றான்
ராம சேவையை எண்ணிப் பெருமை கொள்கின்றான்.*(ராம)*



அரக்கர் தம்மை தருமம்மோத நீதி வென்றது
ராஜ ராமன் தலையில் மகுடம் ஏறுகின்றது
அனுமன் தாங்கினான் அரியணை அனுமன் தாங்கினான்
ராம காதையில் எங்கள் அனுமன் மூழ்கினான். *(ராம)*

## ஆஞ்சநேய நாமாவளி

ஜய ஹனுமான் ஜய ஹனுமான்
மாருதி ராயா ஜய ஹனுமான்
ஜய ஹனுமான் ஜய ஹனுமான்
வாயு குமாரா ஜய ஹனுமான்
ஜய ஹனுமான் ஜய ஹனுமான்
அஞ்ஜனை புத்ர ஜய ஹனுமான்
ஜய ஹனுமான் ஜய ஹனுமான்
ஜய ஹனுமான் ஜய ஹனுமான்
ஸ்ரீ ராமதூத ஜய ஹனுமான்
ஜய ஹனுமான் ஜய ஹனுமான்
மஹானுபாவா ஜய ஹனுமான்.

## அஞ்சனேயர் துதிப்பாடல்கள்

அன்புடனே வேண்டுகின்றோம் ஆஞ்சனேயனே
அனுமானே அற்புதனே ஆஞ்சனேயனே
இன்புடனே ராம நாமம் ஏத்தும் சீலனே
இராமபிரான் தூதுவனே ஆஞ்சனேயனே வா

மாருதியே அஞ்சனையின் மாமகனே வா
மாமணியே வாயுதேவன் புத்திரனே வா
நேரெதிராய் இராவணன் முன் வாது செய்தனை
நேசமுறும் இராம தூத நித்தியனே வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி மலை கொணர்ந்த ஆஞ்சனேயனே
இராமபிரான் தம்பிக்குயிர் தந்த நேயனே
அஞ்சாமல் கடல் கடந்த ஆஞ்சனேயனே
ஆகாய மார்க்கமாக வந்தவனே வா

நாமம் ஓதிச் சித்தி பெற்ற ராமதூதனே
ஞான ராம நாதமுற்ற நாவலனே வா
ராம நாம மந்திரமே சாற்றும் நேயனே
வீமனுக்கும் அண்ணனான மேலவனே வா

சிறை இருந்த சீதாதனைத் தேடிக் கண்டவா
சிந்தை நொந்த தேவிதனைத் தேறச்செய்தவா
முறையிலாது தீயை மூட்ட மூர்க்கம் கொண்டவா
மூச்செழுந்த தீயை மூட்ட முன்னே வந்தவா

தீயினாலே இலங்கைதனை எரியச் செய்தவா
தீயவரைத் தீர்த்துக்கட்டத் திட்டம் போட்டவா
ஆயிளையாம் சீதையேக்கம் ஆறச் செய்தவா
ஆதவன் குலத்துதித்த ஆஞ்சனேயனே வா

இராவணனின் ஆணவத்தைத் தெரிய வைத்தவா
இராமபாண மகிமை தன்னை ஏத்திவைத்தவா
பாராயணம் பண்ணுதற்கு பக்தி வைத்தவா
பாலமின்றி இலங்கை நாட்டைப் பார்த்த சித்துளாய்



## ஐயப்பன் பாடல்கள்

ஐயப்பனே ஐயப்பனே ஓடிவா - எங்க
ஆதி சிவன் புத்திரனே ஆடிவா
மெய்யப்பனே மெய்யப்பனே ஓடிவா - தும்பிக்
கையப்பனின் தம்பியே நீ ஆடிவா. **(ஐயப்பனே)**

பம்பா நதி குளிச்சு வந்தோம் ஓடிவா - எங்க
பாதையெல்லாம் காவலுக்கு கூடவா
அழுதாமல் ஏறிவந்தோம் ஓடிவா - எங்க
ஐயமெல்லாம் தீர்த்து வைக்க ஆடிவா. **(ஐயப்பனே)**

நெய்யுருக்கி எடுத்து வந்தோம் ஓடிவா - உனக்கு
மெய்யு ருகி படைக்கணுமே ஆடிவா
சந்தணத்தைக் குழைத்து வந்தோம் ஓடிவா - அத
சாத்தணுமே மேனியெல்லாம் ஆடிவா. *(ஐயப்பனே)*

மணிகண்ட நாயகனே ஓடிவா - உனக்கு
மணிதீபம் ஏற்றி வச்சோம் காணவா
ஜோதி வடிவானவனே ஓடிவா - மண்ணில்
ஜாதிமத பேதமெல்லாம் தீர்க்கவா. *(ஐயப்பனே)*

மெட்டெடுத்தோம் மெட்டெடுத்தோம் கேட்கவா - எங்க
மெட்டுக்கு ஒரு பாட்டுக் கட்ட ஓடிவா
பஜனை வச்சோம் பஜனை வச்சோம் கேட்கவா - எங்க
பஜனையில் பாட்டுப்பாட ஓடிவா. *(ஐயப்பனே)*

### படியேறிவர வேண்டும்

படியேறிவர வேண்டும் ஐயப்பா உன்
பதம் கண்டு தொழவேண்டும் ஐயப்பா
முடி ஏந்தி வர வேண்டும் ஐயப்பா - இரு உன்
முகம் பர்ர்த்து அழவேண்டும் ஐயப்பா. *(படியேறி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளசியில் மணிமாலை நான் சூட வேண்டும்
தூயவன் உனைப் போற்றி புகழ் பாடவேண்டும்
காவியில் உடை சூடி மலையேற வேண்டும்
கண்களில் கற்பூர ஒளி காண வேண்டும். *(படியேறி)*

பம்பையில் நீராடி என்பாவம் தீர்ப்பேன்
படியது பதினெட்டும் நான் பூஜை செய்வேன்
ஏழை என்துயர் யாவும் உன் காதில் சொல்வேன்
எனக்கென அருளன்றி வேறென்ன கேட்பேன். *(படியேறி)*

நெய்யினில் அபிஷேகம் நான் காணவேண்டும்
நெய் என நான் மாறி உனைச் சேரவேண்டும்
ஒருமுறை உன் கோயில் நான் சேரவேண்டும்
ஐயனுன் முகம் பார்த்து உயிர் போக வேண்டும்.
*(படியேறி)*

## சரணம் சரணம் ஐயப்பா

சரணம் சரணம் ஐயப்பா
சரண மடைந்தவர்க் கருளப்பா
மகர ஜோதியே ஐயப்பா
மகன் படும் துயரைக் கேளப்பா. *(சரணம்)*

மணிகண்டா நீ வா அப்பா
மாலை அணிந்தவனைப் பாரப்பா
மகர ஜோதியை காட்டப்பா.
மரணப் பிறவியைப் போக்கப்பா. *(சரணம்)*

விரதம் பூண்டேன் நானப்பா
புனிதம் அடைந்தேன் சிறியனப்பா
கருணை முகத்தைக் கண்டேனப்பா
வியப்பில் ஆழ்ந்தேன் நானப்பா. *(சரணம்)*



## நைவேத்ய மந்திரம்

ப்ரஹ்மார்ப்பணம் ப்ரஹமஹ்விர்
ப்ரஹ்மாக்னௌ ப்ரஹ்மணாஹுதம்
ப்ரஹ்மைவதேன கந்தவ்யம்
ப்ரஹ்மகர்ம - ஸமாதினா

ஓம் ப்ராணாய ஸ்வாஹா
ஓம் அபானாய ஸ்வாஹா
ஓம் வ்யானாய ஸ்வாஹா
ஓம் உதானாய ஸ்வாஹா
ஓம் ஸமானாய ஸ்வாஹா
ஓம் ப்ரஹ்மணே ஸ்வாஹா
ஓம் தத் ஸத் ப்ரஹ்மார்ப்பணம் அஸ்து

## ஆரத்தி

ஓம் கணபதி ஜெய ஓம் ஜெய ஜெய ஓம் கணபதி ஜெய ஓம்
ஓம் கணபதி ஜெய ஓம் கணபதி ஜெய ஓம் கணபதி ஜெய ஓம் கணபதி ஜெய
ஓம் கணபதி ஜெய ஓம் ஜெய ஜெய ஓம் கணபதி ஜெய ஓம்

ஓம் சரவணபவ ஓம் .ஜெய ஜெய ஓம் சரவணபவ ஓம்
ஓம் சரவணபவ ஓம் சரவணபவ ஓம் சரவணபவ ஓம் சரவணபவ
ஓம் சரவணபவ ஓம் ஜெய ஜெய ஓம் சரவணபவ ஓம்

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் ஜெய ஜெய ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் ஜெய ஜெய ஓம் சக்தி ஓம் சக்தி ஓம

ஓம் சிவ ஓம் சிவ ஓம் ஜெய ஜெய ஓம் சிவ ஓம் சிவ ஓம்
ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ
ஓம் சிவ ஓம் சிவ ஓம் ஜெய ஜெய ஓம் சிவ ஓம் சிவ ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷ்யாம் ஜெயராம் ஜெய ஓம் ஜெயஜெய ஷ்யாம் ஜெய ராம் ஜெய ஓம்
ஷ்யாம் ஜெய ராம் ஜெய ஷ்யாம் ஜெய ராம் ஜெய
ஷ்யாம் ஜெய ராம் ஜெய ஷ்யாம் ஜெய ராம் ஜெய
ஷ்யாம் ஜெய ராம் ஜெய ஓம் ஜெய ஜெய ஷயாம் ஜெய
ராம் ஜெய ஓம்

ஓம்குரு ஓம்குரு ஓம் ஜெயஜெய ஓம்குரு ஓம்குரு ஓம்
ஓம்குரு ஓம்குரு ஓம்குரு ஓம்குரு
ஓம்குரு ஓம்குரு ஓம் ஜெயஜெய ஓம்குரு ஓம்குரு ஓம்

## ஆரத்தி

ஜய ஜய ஜய சக்தி ஓம் ஸ்ரீ ஜய ஜய ஜய சக்தி
ஜய ஜய என தினம் பாடிப் பணிந்தோம்
ஜகம் எங்கும் அமைதியைத் தா - ஓம்ஸ்ரீ. *(ஜய ஜய)*

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவை யெல்லாம் மறைய அம்மம்மா
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை - ஓம்ஸ்ரீ. *(ஜய ஜய)*

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி பலமருள்வாய் அம்மம்மா
கரம் குவித்தோம் இனிக் காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் - ஓம்ஸ்ரீ. *(ஜய ஜய)*

காசினியெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் அம்மம்மா
தேசுடன் வாழ காட்டடி காட்சி
தேவியுன் அடைக்கலம் நான் - ஓம்ஸ்ரீ. *(ஜய ஜய)*



நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து அம்மம்மா
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா - ஓம்ஸ்ரீ. *(ஜய ஜய)*

## ஆரத்தி

ஓம் ஸர்வமங்கள மாங்கல்யே
சிவே ஸர்வார்த்த ஸாதிகே
சரண்யே த்ரயம்பகே கௌரி
நாராயணி நமோஸ்துதே.

அந்தர் ஜோதிர் பஹிர் ஜோதிர்
ப்ரத்யக் ஜோதிர் பராத் பரஹ
ஆத்ம ஜோதிர் ஸ்வயம் ஜோதிர்
ஜோதிர் ஜோதிர் சிவோஸ்மி யஹம். *(2முறை)*

அந்தர் ஜோதிர் பஹிர் ஜோதிர்
ப்ரத்யக் ஜோதிர் பராத் பரஹ
ஆத்ம ஜோதிர் ஸ்வயம் ஜோதிர்
சிவானந்த ஜோதிர் நமோ நமஹ.

## குருவுக்கு ஆரத்தி

ஓம் த்வமேவ மாதாச பிதா த்வமேவ
த்வமேவ பந்துஸ்ச ஸகாத் வமேவ
த்வமேவ வித்யா த்ரவினம் த்வமேவ
த்வமேவ ஸர்வம் மமதேவ தேவ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயோன வாசா மனஸேந் த்ரியைர்வா
புத்யாத்மனாவா ப்ரக் குருதே ஸ்வாபாவாத்
கரோமி யத்யத் ஸகலம் பரஸ்மை
நாராயணாயேதி ஸமர்ப்பயாமி:
ஸதாசிவாயேதி ஸமர்ப்பயாமி
ஜகதம் பிகேயேதி ஸமர்ப்பயாமி
சிவாநந்தாயேதி ஸமர்ப்பயாமி

ஓம் தத் ஸத் ப்ரஹ் - மார்ப்பணமஸ்து
ஹரி: ஓம் தத் - சத்.

## சாந்தி மந்திரம்

ஓம் ஸர்வேஷாம் ஸவஸ்திர் பவது
ஸர்வேஷாம் சாந்திர் பவது
ஸர்வேஷாம் பூர்ணம் பவது
ஸர்வேஷாம் மங்களம் பவது
ஸர்வே பவந்து ஸுகின:
ஸர்வே ஸந்து நிராமயா:
ஸர்வே பத்ராணி பச்யந்து
மாகஸ் சித்துக்க வாக் பவேத்.

அஸதோமா ஸத்கமய
தமஸோமா ஜோதிர் கமய
ம்ருத் யோர்மா அம்ருதம் கமய
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஓம் பூர்ணமத: பூர்ணமிதம்
பூர்ணாத் பூர்ண முதச்சயதே
பூர்ணஸ்ய பூர்ண மாதாய
பூர்ண மேவாவ சிஷ்யதே
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

லோகா சமஸதா சுகினோ பவந்து *(3முறை)*

சமஸ்த சன் மங்களானி பவந்தி



## மங்களம்

சங்கராய சங்கராய சங்கராய மங்களம்
சங்கரீ மனோகராய சாஸ்வதாய மங்களம்
குருவராய மங்களம் தத்தாத்ரேய மங்களம்
கஜானனாய மங்களம் ஷடானனாய மங்களம்
சாந்த சக்தி மங்களம் ஸர்வ சக்தி மங்களம்
சீதாராம மங்களம் ராதா கிருஷ்ண மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் ஜெய மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் சுப மங்களம்.

## வாழ்த்து

உலகம் எல்லாம் உயர் நலம் பெருகுக
அகிலம் எங்கும் அமைதி நிலவுக
பாருல கெங்கும் பூரணம் பொலிக
பொங்கும் மங்களம் எங்கும் தங்குக
அஸத்தற நீங்கி ஸத்தே வருக
இருளற நீங்கி ஒளியே வருக
வீழ்வது நீங்கி வாழ்வே வருக
பிரிவினை நீங்கி உறவே வருக

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்.

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின் ஐந்தெழுத்தை
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே.

ஸ்ரீ ராம் ஜெயராம் ஜெய ஜெய ராம் ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ராம ஜெயம்

சகல ஆணான தெய்வங்களுடைய பாத சரணமே!
சகல பெண்ணான தெய்வங்களுடை பாத சரணமே!
சகல கிரகங்களுடைய பாத சரணமே!
படைக்கப்பட்ட பிரம்மனுடைய பாத சரணமே!
சகல தேவர்களுடைய பாத சரணமே!
சகல முனிவர்களுடைய பாத சரணமே!
சகல ரிஷிகளுடைய பாத சரணமே!

பூமாதேவியினுடைய சக்திக்கு சரணமே!
நீரினுடைய சக்திக்கு சரணமே!
அக்கினி பகவானுடைய சக்திக்கு சரணமே!
வாயுவினுடைய சக்திக்கு சரணமே!
ஆகாயத்தினுடைய சக்திக்கு சரணமே!

சரணமே! சரணமே! சரணமே!

அரஹர நமப் பார்வதி பதயே
அரஹர மஹாதேவா
தென்நாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவாபோற்றி.

கோவிந்த நாம சங்கீர்த்தனம்
கோவிந்தா கோவிந்தா.

சிவானந்த மகரிஷி திருவடிகளுக்கு - ஜெய்
எல்லா மகான்கள் திருவடிகளுக்கும் - ஜெய்

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.



## UNIVERSAL PRAYER OF THE DIVINE LIFE SOCIETY

**(Given By Swami Sivananda)**

Oh adorable Lord Of Mercy and Love!
Salutations and prostrations unto Thee
Thou art Omnipresent, Omnipotent and Omniscient
Thou art Existence Consciousness - Bliss Absolute
Thou art the In-dweller of all beings
Grant us an understanding heart, equal vision,
balanced mind, faith, devotion and Wisdom
Grant us inner spiritual strength to resist
Temptation and to control the mind
Free us from egoism, lust, greed, hartred, anger
And jealousy,
Fill our hearts with Divine virtues
Let us behold Thee in All these names and forms
Let us serve Thee in all these names and forms,
Let us ever remember Thee
Let us ever sing Thy glories
Let Thy name be ever on our lips,
Let us abide in Thee for ever and for ever.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுவாமி சிவானந்தரின் சமரஸப் பிரார்த்தனை

ஓம் கருணையும் அன்பும் நிறைந்த இறைவா!
உனைத் தொழுது வணங்குகின்றோம்.

நீ எங்கும் உள்ளாய், எல்லாம் வல்லாய் எல்லாம் அறிவாய்
நீ ஸச்சிதானந்தப் பொருள் மெய்ப் பொருளும், மெய்யறிவும்,
பேரின்பமும் நீயே எல்லா உயிர்களிலும் உறைபவனும் நீயே.

**ஓம் தயாபரத் தெய்வமே!**

உணரும் உள்ளமும், சமநோக்கும், தூய அன்பும்,
மெய்யறிவும் எமக்குத் தந்தருள்க.

மயக்கத்தை எதிர்க்கவும், மனதை வெல்லவும்,
உள்ளத்தில் ஒளிரும் தெய்வீகத் தன்மையை
எமக்குத் தந்தருள்க.
ஆணவம், துராசை, வெறுப்பு, பேராசை, காமம், வெகுளி
இவை பற்றாது எம்மைக் காத்தருள்க.

ஆன்மீக உணர்ச்சிகளை எமது உள்ளத்தில்
நிரப்பி அருள்க.

**ஓம் உலகாளும் ஜெகதீசா!**

எல்லாப் பெயரிலும் உருவிலும் உனையே
யாம் காண்போமாக!
எல்லாப் பெயரிலும் உருவிலும் உனையே
யாம் காண்போமாக!
எப்பொழுதும் உனையே யாம் சிந்தித்து வருவோமாக!
என்றென்றும் உன்னிலேயே யாம் சிந்தித்து வருவோமாக!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவிருக்கட்டும், நிகழ்ச்சிகள் முன்பே நிச்சயிக்கப்பட்டவை!

எதற்கும் வருத்தப்படவேண்டாம். உங்களுடைய கடந்தகால அனுபவங்களில் இருந்து நீங்கள் பாடங்களைக் கற்றுக்கொள்ளுங்கள். அந்தப் பாடங்களை அடிக்கடி நினைத்துப் பாருங்கள். அந்தப் பாடங்கள் உங்கள் எதிர்காலச் செயல்களுக்கு வழிகாட்டியாக அமையட்டும். ஆனால் கடந்த காலத்தைப் பற்றி கவலையில் மூழ்காதீர்கள். நான் அப்படிச் செய்திருந்தால் இப்படி ஆகியிருப்பேன், இப்படிச் செய்திருந்தால்......... என்று எண்ணுவதெல்லாம் வீணான சிந்தனையாகும். நேரம் வீண், சக்தி வீண் ஏனெனில் கவலை சக்தியைக் கரைத்து விடுகிறது. வேறு எதுவும் அது செய்வதில்லை.

உண்மை எதுவெனில், எது நடந்ததோ அது அப்படித்தான் நடக்கவேண்டும் என்பது ஆண்டவனின் திட்டம். அதற்கு மாறாக அது நடந்திருக்க முடியாது. ஒரு சிறு துகளின் அசைவு முதல் பிரபஞ்சத்தின் பிரமாண்டமான இயக்கம் வரை, கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலத்தில் ஒவ்வொரு நிகழ்ச்சியும் எல்லாம்வல்ல, எல்லாம் அறிந்த, எங்கும் நிறைந்த பரம்பொருளின் அருளால் இப்படித்தான் நிகழவேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டிருக்கின்றது. நிகழ்ச்சிகள் எவ்வாறு நிகழ வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றனவோ அவ்வாறு நிகழ்கின்றன. அவன் கணக்குப்படியே அனைத்தும் நிகழும். கடவுளின் விருப்பத்தை மாற்ற எந்த மனிதனாலும் இயலாது. நிகழ்வது நிகழ்ந்தே தீரும் என்பது பிரபஞ்சமெங்கும் உள்ள ஒரு உண்மையாகும். கவலைப்படுவது, வருந்துவது என்பது உங்கள் கோழைத் தனத்தை வெளிப்படுத்தி, ஒன்றுமில்லாத, ஒன்றிற்காக உங்கள் மனஅமைதியைக் குலைத்துக்கொள்வதைக் குறிக்கும். ஒவ்வொரு நிகழ்விலும் இறைவனின் திருவருள் இலங்குகிறது என்பதைக் கண்டு உணர்ந்து, உங்களுக்குள்ளும் உலகத்துடனும் அமைதியாக வாழ்வதே அறிவுடமை ஆகும்.

சுவாமி சிவானந்தா

Luxmi Printer - Tel 2448545

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org